LB
N15
118504
1915

354

கடவுள் துணை.

சதசுலோக மென்னும்

# வைத்திய சதகம்.

354
3·15

☞ ஷைக் பா-முகம்மது அப்துல்லா.

M. A Press, Madras.

22·11·82

25 [illegible]

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட

நவம்பர் மாதம் 1982 வருடம்

செப்பனிட்டு முடித்த

ஜனவரி மாதம் 1983 வருடம்

31/1/83

ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்


கடவுள் துணை.

சதசுலோகமென்னும்

# வைத்தியசதகம்.

354 / 3·15

இதை

அநேக வைத்தியர்களின் உபயோகத்திற்காக,

பூநாசி வைத்திய போதினி முதலிய

பல வைத்திய நூற்களின்

கிரந்தகர்த்தாவாகிய


ஹக்கிம்

பா. முஹம்மது அப்துல்லா சாயபு


இயற்றி அச்சிட்டனர்.


சென்னை

முஸ்லிம் அபிமானி அச்சியந்திரசாலை

FIRST EDITION.

1915 ஞு.


Copy right.

OFFICE OF THE REGISTRAR ... 27 JUL 191... MADRAS

விலை ரூ. 0-12-0 வி. பி ரூ 0-14-0.

11850



## விளம்பரம்.

—:0:—

இதனால் சகலருக்குந் தெரியப்படுத்துவது யாதெனில்:— "சதசுலோகமென்னும் வைத்திய சதகம்" என்ற இக்கிரந்தம் ௧௮௬௭௵ (௨௫-வது) ஆக்டின் (௨௦-வது) பிரிவில் (௬-வது) விதியின்பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மத்ராஸிலும்,

இன்னும் பிரான்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும், காரைக்காலிலும் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால், இக்கிரந்தத்தையாவது, அல்லது இதைவேறு பாஷையில் மொழிபெயர்த்தாவது, அல்லது, இதில் எதேனும் பாகத்தையாவது, என் உத்தரவின்றி ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால், மேற்கண்ட ஆக்டில் சொல்லியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய் அதனாலுண்டாகும் நஷ்டமனைத்தும் வசூல் செய்யப்படும்.

ஹகீம்பா-முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்.

# விசேஷ விளம்பரம்.

எம்மால் அச்சிடப்பட்டிருக்கும் கிரந்தங்களின் டைட்டில்பேஜில் அடியிற் கண்டிருக்கின்ற என்னுடைய பெயர் எழுதப்பட்டிருக்கும்; அவ்விதப் பெயர் எழுதப்படாத கிரந்தங்கள் மாறுபாடானவையாயிருக்கும்; ஆனதுபற்றி, அப்படிப்பட்ட கிரந்தங்களைக்கொண்டுவந்து கொடுக்குமவர்களுக்கும், அல்லது அப்படிப்பட்ட கிரந்தங்களை வைத்து விற்பனை செய்யுமவர்களைக் காண்பிக்குமவர்களுக்கும் தக்கவெகுமதி கொடுக்கப்படும்.

அக்கீம்-பா-முகம்மது அப்துல்லா சாயபு அன்ஸன்ஸ்.



# புத்தக விளம்பரம்.

இதனடியிற்கண்ட புத்தகங்கள் வேண்டியவர்கள் சென்னை மாபூஸ்கான்தேவடி, அப்புமேஸ்திரிவீதி, 12-வது நெம்பர் கிரகத்தில் இருக்கும் ஹக்கீம் பா-முகம்மது அப்துல்லா சாஹிபு அவர்களிடத்தில்கைவிலைக்கும், வாலியு பேயபல் போஸ்ட் மூலமாகவும் இதனடியிற்கண்ட விலை விகிதப்படி பெற்றுக்கொள்ளலாம்.

## வைத்திய புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| யூநானி வைத்திய தாருட்ய விருத்திபோதினி முதற்பாகம் | 1 | 5 | 0 |
| ஷை 2-ஆம் பாகம் | 2 | 0 | 0 |
| யூநானி தாருட்ய விருத்திபோதினித் திறவுகோல் | 0 | 10 | 0 |
| பிரமேக நிவாரணபோதினி | 0 | 12 | 0 |
| சிராவக நிவாரணபோதினி | 0 | 13 | 0 |
| ஆயுர்வேத சிரோமணியென்னும் வைத்திய சிந்தாமணி முதற்பாகம் | 0 | 14 | 0 |
| சரபேந்திர மேக நிவாரணபோதினி | 1 | 0 | 0 |
| சரபேந்திர நபமருத்து மஞ்சரி | 0 | 8 | 0 |
| சிரோரோக நிவாரணபோதினி யென்னும் யூநானி சிகிச்சாசார சங்கிரகம் | 1 | 5 | 0 |
| யூநானி சிகிச்சா சாரசங்கிரகமென்னும் நயனரோக நிவாரணபோதினி | 1 | 5 | 0 |
| யூநானி குஷ்டமசிகிச்சாபோதினி 1-ம்பாகம் | 1 | 2 | 0 |
| ஷை இரண்டாம் பாகம் | 1 | 2 | 0 |

| | | | |
|---|---|---|---|
| பிளேக் சிகிச்சாபோதினி | 0 | 8 | 0 |
| அநுபோதவைத்திய நவநீதம் முதற்பாகம் | 1 | 0 | 0 |
| ஷை இரண்டாம் பாகம் | 1 | 0 | 0 |
| ஷை மூன்றாம்பாகம் | 1 | 0 | 0 |
| ஷை நான்காம் பாகம் | 1 | 0 | 0 |
| ஷை ஐந்தாம்பாகம் | 1 | 2 | 0 |
| ஷை ஆறாம்பாகம் | 1 | 0 | 0 |
| ஷை ஏழாம்பாகம் | 1 | 0 | 0 |
| ஷை எட்டாம்பாகம் | 1 | 0 | 0 |
| வீரமாமுனி வாகடத்திரட்டு முதற்பாகம் | 1 | 0 | 0 |
| ஷை இரண்டாம்பாகம் | 1 | 0 | 0 |
| மூலரோகச் சிகிச்சாபோதினி | 1 | 0 | 0 |
| வைத்தியத் திருப்புகழ் | 0 | 12 | 0 |
| விஷபேதி நிவாரணி | 0 | 4 | 0 |
| கடுக்காய்ப் பிரபாவபோதினி | 0 | 2 | 0 |
| அகத்திய மகாமுனிவர் அருளிச்செய்த மகாதிராவகம் எண்ணூறு | 1 | 0 | 0 |
| அகத்திய மகாமுனி வைத்தியப் பிள்ளைத்தமிழ் | 1 | 4 | 0 |
| அகத்தியர் மெய்ஞ்ஞானம் | 1 | 4 | 0 |
| அகஸ்தியர் பள்ளு | 1 | 2 | 0 |
| அகத்தியமாமுனி வைத்திய அந்தாதி | 1 | 0 | 0 |
| வல்லாரைப் பிரபாவ போதினி | 0 | 8 | 0 |



| | | | |
|---|---|---|---|
| இராஜவைத்திய மகுடமென்னும் தேரையர் எதுகையமகவெண்பா 1-ம்பாகம் | 1 | 5 | 0 |
| ஷை இரண்டாம்பாகம் | 1 | 5 | 0 |
| இராஜவைத்திய மகுடமென்னும் தேரையர் எதுகையமகவெண்பா மூலம் | 0 | 6 | 0 |
| தேரையர் வைத்திய மகாகரிசல் | 0 | 10 | 0 |
| போகரேழாயிர சூஸ்திர மெழுநூறு | 0 | 12 | 0 |
| தன்வந்திரி சூக்ஷ்ம வைத்தியம் | 0 | 5 | 0 |

### வாத வைத்திய கிரந்தங்கள்.

| | | | |
|---|---|---|---|
| இரசவாதசிந்தாமணி முதற்பாகம் | 1 | 5 | 0 |
| ஷை 2 ஆம் பாகம் | 1 | 5 | 0 |
| கொங்கணர் வாதகாவியம் மூவாயிரம் | 1 | 8 | 0 |
| யூகிமுனிச்சுருக்கம் | 0 | 2 | 0 |
| இரசவாத மஞ்சரி | 1 | 2 | 0 |
| இலக்க சௌமிய சாகரம் 1-ஆம்பாகம் | 1 | 0 | 0 |
| ஷை 2 ஆம்பாகம் | 0 | 14 | 0 |
| ஷை 3 ஆம்பாகம் | 0 | 14 | 0 |
| ஷை 4 ஆம்பாகம் | 0 | 14 | 0 |
| ஷை 5 ஆம்பாகம் | 1 | 0 | 0 |

### மேஸ்மரிஸ புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| மனோவசியதத்துவம் | 2 | 0 | 0 |
| மானிடவசியம் | 2 | 8 | 0 |
| மெஸ்மரிஸபாடங்கள். | 2 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| பர்ஸனல் மாக்னடிஸம் | 2 | 0 | 0 |
| சுவாசமேவுயிர் | 1 | 0 | 0 |
| அப்பியாச சக்கரம் | 0 | 5 | 0 |
| ஞானதரிசனக்கண்ணாடி | 1 | 0 | 0 |
| ஹிப்னாடிஸக் கட்டு | 0 | 8 | 0 |

இதர புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| பண்டிதை மெஸ்மரிஸா | 1 | 0 | 0 |
| உலோகாதிசய விளக்கம் | 0 | 8 | 0 |
| சந்திரகாசன் சாமர்த்தியங்கள் | 0 | 2 | 6 |
| ஞாய அஷ்டாங்கதீபம் | 0 | 4 | 0 |
| அசன்பேசரித்திரம் | 0 | 8 | 0 |

ஹச்.பீம்-பா-முமம்மது அப்துல்லா சாயபு அன்ஸன்ஸ்.
12. அப்புமேஸ்திரி தெரு,
ஜார்ஜ்டவுன், சென்னை.

சதசுலோக மென்னும் வைத்திய
சதகத்தின் விஷய அட்டவணை.

விஷயம். பக்கம்.

அ.


அசக்கள்ளியாதிரண ஹரம் ... ... 45
அசுமரிரோகம் கற்கட்டு ஹரம் ... ... 15
அதரநோய் ஹரம் ... ... ... 36
அதிக்குரு ஹரம் ... ... ... 28
அதிசார ஹரம் ... ... ... 12
அதிஸ்தூல ஹரம் ... ... ... 28
அபஸ்மார ஹரம் ... ... ... 33
அரோசிக ஹரம் ... ... ... 8
அளாகவிஷ ஹரம் ... ... ... 56
அற்புதவிரண ஹரம் ... ... ... 43
அனற்பட்டவிரண ஹரம் ... ... 41
அநுபந்தம் ... ... ... 123


ஆ.


ஆக்கிராணம் செய்யும் விதம் ... ... 137
ஆவரண பைத்திய ஹரம் ... ... 28


இ.


இரத்தகுன்ம ஹரம் ... ... 2
இரத்தபித்த ஹரம் ... ... 4

| விஷயம். | பக்கம். |
|---|---|
| இரத்தமூல ஹரம் ... ... | 11 |
| இலேகியஞ் செய்யும் விதம் ... ... | 134 |
| ஹி. | |
| ஹிமம்செய்யும் விதம் ... .. | 126 |
| உ. | |
| உதாவரதன் ஹரம் ... ... | 12 |
| உபசிம்மக விரண ஹரம் ... ... | 44 |
| உருத்திரரோக ஹரம் ... | 9 |
| உன்மாத ஹரம் ... ... | 32 |
| எ. | |
| எறும்புருக்கி ஹரம் ... ... | 6 |
| ஒ. | |
| ஒற்றிடம் செய்யும் விவரம் ... ... | 139 |
| க. | |
| கஷாயஞ்செய்யும் விதம் ... ... | 128 |
| கண்டரோக ஹரம் ... ... | 38 |
| கண்டாலச்சிய விரணஹரம் ... ... | 36 |
| கரதமவிரண ஹரம் ... ... | 48 |
| கல்கம் செய்யும் விதம் ... ... | 126 |
| கன்னரோக ஹரம் ... ... | 35 |



| விஷயம். | பக்கம். |
|---|---|
| கா. | |
| காமாலை ஹரம் ... ... | 22 |
| காமியவிரண ஹரம் ... ... | 50 |
| கி. | |
| கிராணி ஹரம் ... ... | 13 |
| கிருதம்செய்யும் விதம் ... ... | 135 |
| கிருமிநோய்ஹரம் ... ... | 25 |
| கீ. | |
| கீட்டக விஷஹரம் ... ... | 53 |
| கு. | |
| குஷ்டநோய் ஹரம் ... ... | 24 |
| குணக்கநோய் ஹரம் ... ... | 48 |
| குன்மரோக ஹரம் ... ... | 19 |
| கெ. | |
| கெற்பவிப்புருதி ஹரம் ... ... | 19 |
| கெற்பிணி சுகவரங்கள் ... ... | 29 |
| கோ. | |
| கோட்டவிரண ஹரம் ... ... | 49 |
| ச. | |
| சக்கராற்புகவிரண ஹரம் ... ... | 47 |
| சந்திபாவிரண ஹரம் ... ... | 41 |

| விஷயம். | | | பக்கம். |
|---|---|---|---|
| சமஸ்கிருத வியாதிப்பெயர்களின் விளக்க அட்டவணை | | | 140 |
| சயரோக ஹரம் | ... | ... | 7 |
| சரக்குகளின் அட்டவணை அகராதி... | | ... | 61 |
| சருவவிஷ ஹரம் | ... | ... | 52 |
| சருவாசியரோக ஹரம் | ... | ... | 33 |
| சன்னுசரோக ஹரம் | ... | ... | 10 |
| **சி.** | | | |
| சிம்மரோக ஹரம் | ... | ... | 37 |
| சிரோரோக ஹரம் | ... | ... | 39 |
| சிலந்திப்பூச்சிவிஷ ஹரம் | ... | ... | 54 |
| சிலிபத விரணஹரம் | ... | ... | 41 |
| **சீ.** | | | |
| சீதசுரஹரம் | ... | ... | 4 |
| சீதபித்த ஹரம் | ... | ... | 24 |
| **சு.** | | | |
| சுகப்பிரசூதி ஹரம் | ... | ... | 30 |
| சுரசமுறை விவரம் | ... | ... | 123 |
| சுரசாதங் குரற்கம்மல் ஹரம் | ... | ... | 8 |
| சுவாசகாச ஹரம் | ... | ... | 6 |
| **சூ.** | | | |
| சூரணஞ்செய்யும் விதம் | ... | ... | 133 |





| விஷயம். | | | பக்கம். |
|---|---|---|---|
| **சே.** | | | |
| சேத்துமரோக ஹரம் | ... | ... | 27 |
| **சோ.** | | | |
| சோகை ஹரம் | ... | ... | 22 |
| சோமரோக ஹரம் | ... | ... | 18 |
| **ஸ்.** | | | |
| ஸ்நானதைலம் செய்யும் விதம் | ... | ... | 136 |
| **த.** | | | |
| தந்தரோக ஹரம் | ... | ... | 37 |
| தப்பளம்செய்யும் விதம் | ... | ... | 137 |
| தனவிப்புருதி ஹரம் | ... | ... | 19 |
| **தா.** | | | |
| தாபசுர ஹரம் | ... | ... | 3 |
| தாபரவிஷ ஹரம் | ... | ... | 51 |
| **தி.** | | | |
| திரிசெய்யும் விவரம் | ... | ... | 138 |
| **தூ.** | | | |
| தூபஞ்செய்யும் விதம் | ... | ... | 137 |
| **தே.** | | | |
| தேள்விஷ ஹரம் | ... | ... | 54 |
| **ந.** | | | |
| நகதந்தவிஷ ஹரம் | ... | ... | 56 |
| நசியம் செய்யும் விதம் | ... | ... | 137 |

| விஷயம். | | | பக்கம். |
|---|---|---|---|
| நஷ்டவீரிய ஹரம். | ... | ... | 58 |
| நரைதிரை முதுமை ஹரம் | ... | ... | 57 |
| நா. | | | |
| நாசிரோக ஹரம் | ... | ... | 36 |
| நாடிவிரண ஹரம் | ... | ... | 45 |
| நே. | | | |
| நேத்திரரோக ஹரம் | ... | ... | 33 |
| ப. | | | |
| பங்கநோய் ஹரம் | ... | ... | 42 |
| பதுமகண்டகவிரண ஹரம் | ... | ... | 46 |
| பவுந்தரவிரண ஹரம் | ... | ... | 42 |
| பற்றுசெய்யும் விதம் | ... | ... | 136 |
| பாண்டம் செய்யும் விதம் | ... | ... | 131 |
| பாண்டுரோக ஹரம் | ... | ... | 26 |
| பாலகிரக ஹரம் | ... | ... | 31 |
| பாலநோய் ஹரம் | ... | ... | 30 |
| பி. | | | |
| பித்தநோய் ஹரம் | ... | ... | 26 |
| பிரமேக ஹரம் | ... | ... | 16 |
| பு | | | |
| புகைகொடுக்கும் விவரம் | ... | ... | 138 |
| புகைத்திரி செய்யும் விவரம் | ... | ... | 138 |
| புகைபிடிக்கும் விவரம் | ... | ... | 138 |





| விஷயம். | | | பக்கம். |
|---|---|---|---|
| பூ. | | | |
| பூதகிரக ஹரம் | ... | ... | 31 |
| பெ. | | | |
| பெரும்பாட்டு ஹரம் | ... | ... | 5 |
| பொ. | | | |
| பொட்டகவிரண ஹரம் | ... | ... | 46 |
| பொதுவிதிகள் | ... | ... | 123 |
| ம. | | | |
| மகோதர ஹரம் | ... | ... | 21 |
| மதமூர்ச்சை ஹரம் | ... | ... | 10 |
| மந்தாக்கினி ஹரம் | ... | ... | 14 |
| மு. | | | |
| முகதூஷ்க்விரண ஹரம் | ... | ... | 46 |
| மூ. | | | |
| மூஷிகவிஷ ஹரம் | ... | ... | 55 |
| மூத்திரக்கிரிச்சர ஹரம் | ... | ... | 15 |
| மூலரோக ஹரம் | ... | ... | 11 |
| மூளையிரண ஹரம் | ... | ... | 43 |
| மே. | | | |
| [illegible]க்கட்டு ஹரம் | ... | ... | 17 |
| மேற்பூச்சுத்தைலம்செய்யும்விதம் | ... | ... | 136 |
| யோ. | | | |
| யோனிரோக ஹரம் | ... | ... | 50 |
| வ. | | | |
| வசூரி ஹரம் | ... | ... | 23 |

| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| வடகஞ்செய்யும் விதம் ... ... | 135 |
| வந்தியரோக ஹரம் ... ... | 29 |
| வஸ்திசெய்யும் விவரம் ... ... | 138 |
| வல்மீகருத்தகுத ஹரம் ... ... | 47 |
| **வா.** | |
| வாதசுரோணித ஹரம் ... ... | 27 |
| வாதசூலை ஹரம் ... ... | 21 |
| வாதநோய் ஹரம் ... ... | 26 |
| வாந்திநோய் ஹரம் ... ... | 8 |
| **வி.** | |
| விசர்ப்பியாகிய விழற்பாக ஹரம் ... ... | 23 |
| விசூழி ஹரம் ... ... | 14 |
| விதாகநோய் ஹரம் ... ... | 9 |
| விப்புருதி ஹரம் ... ... | 18 |
| விரண ஹரம் ... ... | 40 |
| **வே.** | |
| வெங்சலாஞ்சியவிரணை ஹரம் ... ... | 49 |
| வெண்குஷ்ட ஹரம் ... ... | [illegible] |
| வெந்நீர் ஊறற்கஷாயம் செய்யும் விதம் | 130 |


அட்டவணை முற்றிற்று.

சதசுலோக மென்னும்

# வைத்திய சதகத்தின்

# முகவுரை.

வைத்திய சகோதரர்களே!

இந்த அருமையான நூலை வெளிப்படுத்த நேரிட்டகாரணம் பின்வரும் விஷயங்களால் தெள்ளிதாய்நன்குவிளங்கும்.

நம்மால் வெளிப்படுத்தப்படும் நூற்களைக் கைக்கொண்டு அவற்றிலுள்ள பல முறைகளையும் செய்து தாமும் அநுபவித்துத் தம் இன பந்துமித்திரர் முதலிய பலருக்கும் உபயோகித்து அவற்றால் பல நற்பயன்களை அடைந்துவரும் நமது நண்பர்கள், நம்மைப் பலவிதத்தாலும் ஆதரித்து கனப்படுத்திவருகின்றார்கள். யூநானி வைத்தியத்திலும், இங்கிலீஷ் வைத்தியத்திலும் ஒரு வியாதிக்காம் பல சரக்குகளை ஒருங்கிரட்டிச்சொல்லப்பட்ட நூற்கள் பல இருக்கின்றன. அப்படியிருப்பதால் அவசியமான சமயத்தில் ஒரு வியாதிக்கு இன்னின்ன சரக்குகளாம், இன்னின்ன தேகிகளுக்கு இன்னின்னவைகள் தக்கவைகள் என்று தெரிந்து சமயோசிதம்போல் அவுடதங்கள் செய்யப் பெரும் உதவியாயிருக்கிறது. அவ்விதம்

தமிழில் ஒரு நூல் இல்லாதது பெருங்குறையாயிருந்தது. ஆதலால்; அவ்வகை நூலை வெளிப்படுத்தி அக்குறையை நிவர்த்தி செய்வதுடன் அதனைச்சிறுவர் முதல் யாவரும் மனனஞ்செய்யும்படியாகச் செய்யுளாக அமைத்தால் மிகவும் பிரயோசனமா யிருக்குமென நமது நண்பர்களுட் பலர் பல நாளாக நம்மை வற்புறுத்தி வந்தனர்.

ஆனால், இப்பெருங் காரியத்தைச் செய்து நிறைவேற்ற அடியேன் பல விதத்திலும் சக்தியற்றவனா யிருந்தேன். ஆயினும், நமது நண்பர்களின் விருப்பத்தை அவஸமாக்க வசமற்றவனாய் இக்காரியத்தில் அதிக கவலையுடன் முயற்சிசெய்து வந்தேன்; அவ்வாறு செய்துவரும்போது சமஸ்கிருதத்தில் சதசுலோகமென்னும் நூலொன்றிருப்பதாகத்தெரிந்து அதனைத்தமிழில் மொழிபெயர்த்து வெளிப்படுத்தலாமென்னும் உத்தேசத்துடன் பார்வையிட்டேன். ஆனால்; அது சமஸ்கிருதம் தெரிந்த பண்டிதர்களுக்கும் சரக்கு முதலியவற்றின் பெயர்களுள் பலவித சந்தேகங்களைக் கொடுக்கக்கூடியதாயிருந்தது. அதனால் அதனை மொழிபெயர்த்தால் அரைகுறையா யிருப்பதுடன் வாசகமாயு மிருக்கும். இது நமது நண்பர்களின் கோரிக்கைக்கு ஏற்றதன்று. ஆகையால் அதனைவிட்டு முன்னிலும் அதிக சிரமத்துடனும் கஷ்டத்துடனும் முயற்சிசெய்து முடிவாக நம்மிடத்திலுள்ள ஏட்டுச்



சுவடிகளில் ஏதேனும் இவ்வகை நூல் அகப்படுமாவென்று பலநாள் ஆராய்ந்து தேடிவந்தேன். அப்படித்தேடிவரும்போது கடவுளினது கிருபையாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தினாலும் நமது நண்பர்களின் அதிஷ்ட வசத்தாலும் நமது முயற்சி வீண்போகாமல் இந்த நூல் அகப்பட்டது. இதனை ஆதியோடந்தமாக வாசித்துப் பார்த்ததில் மேற்கண்ட கருத்திற் கிசைந்தபடி ஒரு வியாதிக்காம் பல சரக்குகளும் ஒன்றாகத் திரட்டப்பட்டும், சிறந்த செய்யுட்களாகவும் செய்யப்பட்டிருந்தபடியால் தேடிப்போன பொருள் வழியிற்கிடைத்ததுபோல் அதிக சந்தோஷமுண்டாயிற்று. ஆதலால், இதனை இப்போது வெளிப்படுத்த முன்வந்தேன். இந்த நூலானது. புதுவையிலுள்ள. கனம். சாமிநாத பண்டிதரவர்களாற் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது இந்நூலின் செய்யுட்களின் தன்மையை நோக்கும்போது இவர் வைத்திய சாஸ்திர ஆராய்ச்சியிலும், இலக்கண இலக்கிய ஆராய்ச்சியிலும் மகாபண்டித ரென்பது நன்கு விளங்குகின்றது. இந்நூல், ஒரு வியாதிக்குபயோகமாம் பலசரக்குகளையும் ஒன்றாகச் சேர்த்துச் செய்யுட்களாகச் செய்யப்பட்டிருப்பதால் இதனைமனப்பாடஞ்செய்து கொண்டு எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் ஆங்காங்கு அப்போதைக்கப்போது கிடைக்கும் சரக்குகளினால் தகுந்த சிகிச்சை செய்வதற்கேதுவுண்டாகும்; இன்னும், ஒவ்வொரு சரக்கின் குணங்களைத்

தெரிந்து கொள்ளவேண்டுமானால் அநேகமாயிருஞ்செய்யுட்களை மனப்பாடஞ் செய்து கொள்ளவேண்டும். இவ்விதமாக தனித்தனியே எல்லாச்சரக்குகளின்குணங்களையும் தெரிந்து கொள்வது மிகவும் அரிது; அப்படித் தெரிந்திருந்த போதிலும் இன்ன வியாதிக்கு இன்ன சரக்கை உபயோகிக்கவேண்டு மென்று தக்ஷணம் தோற்றுவது அதனினுமரிது; அப்படித் தோற்றினும் அந்தச்சரக்கு நினைத்த விடங்களிற்கிடைப்பது எல்லாவற்றினும் அரிது; ஆகையால், மேற்கூறியபடி ஒரு வியாதிக்குபயோகமாம் பல சரக்குகளடங்கிய இந்நூலின் செய்யுட்களை மனனஞ்செய்து கொண்டால் அவை எப்பொழுதும் ஞாபகத்திலிருக்குமாகையால் அவற்றிற் சொல்லப்படும் சரக்குகளில் ஏதேனு மொன்று நாம் நினைத்தசமயத்தில் கிடைக்கும். அதைக்கொண்டு மேற்கூறிய கஷ்டமில்லாமல் வைத்தியம் செய்யலாம். முன்னே கூறியபடி தனிச்சரக்குகளின் குணத்தைச்சொல்லும் செய்யுட்களை மனப்பாடம் செய்திருக்கிற வைத்தியரையும் பின்னே கூறியபடி ஒரு வியாதிக்காம் பல சரக்குகளடங்கிய செய்யுட்களை மனப்பாடஞ் செய்திருக்கிற வைத்தியரையும் சீர் தூக்கிப்பார்த்தால் பின்கண்டவரே அதிகம் சிறந்தவராவர்; ஏனெனில் இவர் தாம் கற்றிருக்கிற நூலின் வல்லபத்தினால் எந்த வியாதிக்கும் எந்தச் சமயத்திலும், எந்த விடத்திலும் எவருக்கும் சமயோசிதமான சிகிச்சை செய்வார். முன்கண்டவர் அவ்



விதம் செய்யமுடியாது. இந்த விஷயம் பொய் மெய்யென்பதைச் சாஸ்திரவாதிகளும் அநுபவசாலிகளுமாகிய மகாபண்டிதர்கள் தெரிந்து கொள்வார்கள். இதன்றி வைத்தியத்தில் ஒருவர் அநுபவப்படவேண்டுமானால் முதலில் அங்காதிபாத நூல் முதலிய சாஸ்திரங்களை வாசிக்கவேண்டும்; அதன்மேல் குணவாகடங்கள், வியாதி லக்ஷணங்கள் ஆகியவைகளைப் படிக்கவேண்டும்; அப்படிப் படித்தாலும் சிகிச்சை செய்ய அநேக வருடங்கள் செல்லவேண்டும். இந்த நூலை வாசித்தாலோ அநுபவப்பட அவ்வளவு காலம் அவசியமில்லை; கொஞ்சம் வாசிக்கத்தெரிந்த சிறுவர், ஸ்திரீகள் ஆகியவர்களுக்கும் இதனை மனப்பாடம் செய்வித்தால் அவர்களும் இலேசாக வைத்தியம் செய்தல் கூடும். மனப்பாடஞ் செய்வதற்கும் இது சுலபமான நூல்; மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள் இதனை மனப்பாடஞ் செய்து விடலாம். இவற்றையெல்லாம் நோக்கும் போது இந்நூல் பல விதத்தாலும் சிறந்ததாகும்:

இவ்வகைச்சிறப்பு வாய்ந்த இந்நூலில் ஒரு வியாதிக்காம் பல சரக்குகள் ஒவ்வொரு செய்யுட்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன; அவற்றுள் சில சரக்குகள் வேறு வியாதிகளுக்கும் எடுத்துக்கூறப்பட்டிருக்கின்றன. அதனால், இதில் சொல்லப்பட்டிருக்கும் ஒரு சரக்கானது எந்தெந்த வியாதிகளுக்கு உபயோ

கப்படு மெனத்தெரிந்து கொள்வதற்கு ஒவ்வொரு செய்யுட்களையும் ஆராய நேரிடும்: அப்படிச்செய்வது அசாத்தியமான காரியம். ஆகையால் இந்நூலினுள்ள சரக்குகளை யெல்லாம் இதன் ஈற்றில் அகராதி ரூபமாக அமைத்து இன்னின்ன வியாதிகளுக்காம் என்ற விவரமும் எழுதிச்சேர்த்திருக்கிறோம். இதில் சில வியாதிகளுக்கு சமஸ்கிருத நாமங்களும், வைத்திய பரிபாஷை நாமங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை யெல்லாம் சாமானியமான வைத்தியர்கள் தெரிந்து கொள்ளுவது கஷ்டம். ஆகையால் அவ்வகை நாமங்களையும் அகராதி ரூபமாக ஏற்படுத்தி அதனதன் சாதாரணப்பெயர்களையும் விளக்கிக்காட்டியிருக்கிறோம். இன்னும் இந்நூலினுள்ள சரக்குகளை உபயோகிக்கும் முறைகள் சொல்லப்படவில்லை. ஆனால் இந்நூலின் ஈற்றிலுள்ள ஒருபாட்டில் சரக்குகளை இன்னின்ன வகையாக உபயோகிக்கவேண்டுமென்று சில வகைகள் மாத்திரம் குறிப்பாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த வகைகளுக்கும் செய்முறை விவரமில்லை. ஆதலால் ஒவ்வொரு வகையையும் இன்னின்ன விதமாகச்செய்யவேண்டு மென்னும் விவரமும் சரக்குகளின் அளவு பிரமாணம் முதலியவைகளும் பொது விதியாக எழுதி இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்படிச் செய்திருப்பதால் வைத்தியர், வைத்தியரல்லாதவர்கள் ஆகிய எல்லோரும் முறைகளை இல



குவாகச்செய்து கொள்ளலாம். இன்னும் இதிலுள்ள அரும்பதங்களுக்கு விளக்கமும், விஷதருமமுள்ள சரக்குகள் இன்னின்னவை யென்பதும், தனியாய் உபயோகப்படுத்தப்படாத சில சரக்குகளின் முறைகள் இன்னின்னவையென்பதும் ஆங்காங்குக் குறிப்பிடப் பட்டிருக்கின்றன.

இன்னணபல விஷயங்களடங்கிய இந்த அருமையான நூலை வெளிப்படுத்த தேககஷ்டம், திரவியச் செலவு, காலம் முதலியன எவ்வளவு வேண்டு மென்பது கற்றறிந்த அறிவாளிகளுக்குத் தெரியாமற் போகாது: இதனைச்சிறிய நூலென அலக்ஷியம் செய்யாமல் ஆதியோடந்தமாக வாசித்து மனனஞ் செய்து கொள்பவர்கள் ஒருமகா பண்டிதருடைய சக்தியையடைந்து எந்த வியாதிக்கும், எச்சமயத்திலும் தனிச் சரக்குச்சிகிச்சை செய்து வெற்றியடைவார்களென்பது திண்ணம். இந்த விஷயமானது அனுபவத்தால் நிச்சயித்தறியக்கூடுமே யொழிய வாய்ப்பேச்சினாலும் வீண் விவாத தர்க்கத்தினாலும் தெரிந்து கொள்ள முடியாது. ஆகையால் நமது நண்பர்கள் இதனை ஆதியோடந்தமாக வாய்ப்பாடஞ் செய்தாயினும் அல்லது அவசியமான காலங்களில் இதனை ஆழ்ந்தகருத்துடன் வாசித்தாயினும் இதிற் சொல்லியிருக்கிற விதிப்படி சிகிச்சைசெய்து தாமும் நற்பயனையடைந்து பிறர்க்கும் நல்ல பிரயோசனங்களை உண்டாக்குவார்களென நம்புகின்றோம்.

இந்த நூலானது ஏட்டிலிருந்தெடுத்து எழுதப்பட்ட படியாலும், மனிதசுபாவத் தவறுதலினாலும், இன்னும் வேறுபலவித அசந்தர்ப்பங்களினாலும் இதில் பலவிதபிழைகள் நேரிட்டிருக்கலாம். அவற்றைத்தெரிந்த பண்டிதர்கள், அறிவாளிகள், அநுபவசாலிகள் முதலியவர்கள் இவ்வேழையை மன்னித்து அப்பிழைகளைத் திருத்தித் தெரியப்படுத்தினால் அவை சாஸ்திரம், யுக்தி, புத்தி ஆகியவைகளுக்கு ஒத்திருக்குமாயின் அம்மகான்களின் நாமத்துடன் மறுபதிப்பில் திருத்திப் பதிப்பிக்கப்படும்.

இந்நூலை வாசித்து இதிற் சொல்லப்படும் விஷயங்களை யுணர்ந்து அவற்றின்படி நடப்பவர்கள் இம்மைக்குரிய தேகசுகம், தேகதிடம், நீண்டஆயுள், நோயற்ற வாழ்வு ஆகியவைகளைப்பெற்று இனிது வாழ்வார்களாக. ஆமீன்.

இங்ஙனம்

அக்கீம்-பா-முகம்மது அப்துல்லா.

---

٧٨٦

கடவுள் துணை.

# சதசுலோகமென்னும் வைத்திய சதகம்.

## கடவுள் வணக்கம்.

நேரிசை வெண்பா.

பூதலத்தி லேபிணிகள் போக்குஞ் சாக்குவகை
சாதகமாச் சொல்லுஞ் சதகத்தை — ஆதரவாய்
அச்சிட் டுதவுதற்கெங் காதியிறை யோன்பாத
மிச்சைபெறு நற்றுணையா மே.

## நூலாசிரியர் கடவுள் வணக்கம்.

நேரிசை வெண்பா.

சற்சதானந்த தனிமுதலோன் றாள்பணிந்து
சொற்சத சுலோகத்தைச் சொல்லிடவே--பற்கலையோர்
கற்றவத்தோர் மாபெரியோர்கண்மருந்து நூலறிந்தோர்
கற்றறிந்தோர் தங்கள்பதங் காப்பு.

## பாயிரம்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மணிகொண்ட திரைபூ வானும்
வயங்குமுச் சுடர்மற் றெல்லாம்
அணிகொண்ட விரலாற் றுங்கு
மனுதிமுந் தொழிலோன் பாதம்
பணிகொண்ட சிரமேற் கொண்டு
பண்டிதற் குதவி யாகத்
துணிகொண்ட மனத்திற் றேர்ந்து
சொற்றினன் றமிழின் னூலை.

நிதிபெறு புதுவை யென்னும்
நீணகர் வைகி வாழுந்
துதிபெறுஞ் சவள வேளார்
தூய்குலத் திலத மானோன்
றதிபெறு மருத்து நூலோன்
சவரிமுத் தென்பா னீன்ற
நிதிபெறு கனக ராய
சிரோமணி யென்னு மன்னோன்.

திருவளர் பதத்தைப் போற்றிச்
செகமெல்லாம் பயன்ப யப்ப
மருவளர் சுலோக நூலாய்
வழங்கிய சதசு லோகங்
கருவளர் தமிழாற் செய்யுட்
கவிபலவிருத்தப் பாவாற்



குருவரா ரறிவாற் செய்தான்
குவலயம் வியப்பத் தானே. (௩)

கருத்தினூல் பலவுந் தேர்ந்து
காவிய புராணச் செய்யுட்
பொருத்து நூல் பலவுஞ் செய்தோன்
புரவலன் சாமி நாதன்
திருத்து நூ லனந்து வாத்தி
தேடருஞ் சதசு லோகம்
மருத்து நூற் பாயி ரத்தை
வளம்பெற வுரைத்த தன்றே. (௪)

பாயிரம் முற்றிற்று.

---

## நூல்.

### ஆசிரியவிருத்தம்.

### தாபசுரஹரம்.

* முத்தமும் பற்படக முந்திரிகை பேரீந்து
மூங்கிலிலை பூநாகமும்
முலைப்பாலு மிளநீரு மஞ்சட்டி ரோகணியு
முயர்சந்த னம்†தாரமுங்
கொத்தமல் லிகைசுக்கு காஞ்சோரி நிலவேம்பு
கொன்றைபுடல் தசமூலமுங்

---

* முத்தம்—நன்முத்து; கோரைக்கிழங்கு.
† தாரம—அரிதாரம், வெள்ளி.

கோஷ்டம்வெட் பாலைகரு நெய்தலர
 சம்பட்டை கோரோச னம்மதுரமும்
சித்தமுட் டியிலுப்பை நெய்ச்சட்டி புளியாரை
 ?சிறுமூல கன்னாரியுஞ்
செவியந்திப் பிலிதோடை பூசனிக் கொடிசினி
 சிறுதேக்கு வேம்புமருளுந்
தந்தாரத் தையும்வெட்டி வேருட னிலாமிச்சு
 தான்றிகடு நெல்லிசிந்திற்
‡சதாவரி ருத்திராட்சம் வட்டத் திருப்பியுஞ்
 சகலசுர வைரமாகுமே. (க)

### சீதசுர ஹரம்.

வட்டத்திருப்பி வேரொடு பெருமுட்டி
 மாமஞ்சள் திரிகடுகொ ளெள்ளியதும்
விட்டுணு கிராந்தி நாரத்தம்வேரு மேவும்
 *பத்திரி †பிஞ்சொடு கொச்சிலியும்
ஒட்டறை யோடிரு துளசியு மூக்குசட்டை
 யுயரும் லவங்கத் தோலிலை சீரகமும்
திட்டப் பெருமாஞ் சிறுதேக் காலம்பழப்புஞ்
 சீதச் சுரகர மாகு மென்றனமே. (உ)

### இரத்தபித்த ஹரம்.

கலமுட னுடா தோடைபற் படகம்
 கற்சிறுக் கீரைமுந் திரிகை
காட்டுள தென்னம் பாளையுமதுரம்
 கல்விலா மிச்சிருவேலி

? சிறுமூலம்—கண்டத்திப்பிலி. ‡ சதாவரி—தண்ணீர்விட்டான் கிழங்கு.
* பத்திரி—தாளிசப்பத்திரி. † பிஞ்சு—கடுக்காய்ப்பிஞ்சு.



தலமுய ராவின் விழுது பேரிந்து
 தண்ணீர்முட் டான்கிழங்கறுகுந்
தான்றியுங் கடுக்காய் நெல்லியுங் குருக்கத்
 தா அயா துளங்கனியாலுங்
குலவியசினி காய்ந்திடுஞ் சாணங்
 கோவையின் நெய்பொடு தேனுங்
கோரையின் கிழங்கும் இலுப்பையின் மலருங்
 கோதையே சந்தனமுடனே
இலவதி நீரும் அதிறுடபிசிறு
 மிளரியபொன் னங்கண்ணியிலையும்
இரத்த பித்தந்தி னாங்கவென்றயிந்து
 மியம்பினர் கும்பமாமுனியே. (ங)

### பெரும்பாட்டு ஹரம்.

நாகலும் பாலை யத்திவெட் பாலை
 நற்கருங் காலியின் பட்டை
நலந்தருங் கருப்பஞ் சாறுட னரக்கும்
 நற்பெரும் பூசனிக் காயும்
தோகையே சிவந்த பருத்தியின் பூவுந்
 துன்னியதின் சாம்பல்தா மரைப்பூ
சொன்னவக் கிழங்கும் வாழையின்பூவுஞ்
 சொற்கரு நெய்தலோ டிந்து
மோகமாந் தென்னம் பாளைசந் தனமு
 முத்தமும் நெல்லியின் காயும்
மூடிய பேய்க்கொம் மட்டியினிலையு
 முழங்குபச் சிலையுநீர்முட்டான்
மாகன லவங்கப் பட்டையி தெல்லாம்
 மாதர்கள் யோனியிற் பெருகும்
வன்பெரும் பாடோ டிரத்தமாம் பித்தம்
 வாங்குமென் றுரைத்தனர் முனியே. (ச)

### எலும்புருக்கி ஹரம்.

நிலப்பனையும் வெட்பாலை யொதியம்பட்டை
நெருஞ்சில்வே ரரக்குமுத்தம் நெல்லிசிந்தி
விலுப்பையுடன் பலாசம்பூ தாமரைப்பூ
விலைக்கந்த மாம்பருப்பு நெய்தற் கந்தம்
நலப்படுவெட் டத்திருப்பி வாழைக்கந்தம்
நந்தியா வட்டமதி மதுரம் நாக
விலைப் பெருகுங் கருங்காலி தண்ணீர்முட்டா
னெலும்புருக்கிஹரங்களை வியம்பினரே.

### சுவாசகாச ஹரம்.

கண்டுபாரங்கியிரு சங்குமா டாதோடை
காயமோ டிரு சீரமும்
கடுருமோ தகநொச்சில் தாளக மனோசிலை
கரிசாலை பருத்தி யிலையுங்
கானநா துளையிஞ்சு சாரணை விளாவிலை
கனியொடு வசம்பு குக்கில்
கரிக்கணு வெண்கருங் காலிசா திக்காயுங்
கருங்காலி யவச்சாரமும்
மண்டுகற் சடசிங்கி தேவதா ரமுள்ளி
மாஞ்சில்தா ளீசலமும்
வள்ளைவெந் தயங்கொள்ளு வெட்பாலை
சர்க்கரை வணமுருக் கொடிபண்ணையும்
வாலுளுவை நாகேச மிலவங்கப் பத்திரியும்
மஞ்சள்தேள் கொடையாவிலும்
மயிலிறகு சாம்பலும் ஆம்பல்சிற் றாமுட்டி
மருதணி யிலந்தை வித்துங்
கொண்டதிப் பிலிமூலந் தான்றிகடு நெல்லியுங்
கொன்றையொ டரத்தை யுகிலுங்



கோஷ்டமொடு சீதளை தும்பைகீழ் வாய்நெல்லி
கொடிவேலியுந் திராயுங்
கூகைநீ ராவின்பால் செம்பைமுக்கத்தாரி
கோலவித் தொடு பட்டையுங்
குப்பைமே னியுமுன்னை துளசிபொன் னுவரை
குமிழிரு நெருஞ்சில் வேருந்
துண்டமா மிலவங்கப் பட்டைசிறு கொம்மட்டி
சுக்குபெரு வாகை தேற்றான்
துய்யமுள் ளங்கியுந் தழுதாளை பெருமல்லி
சொற்பொடு தலைக்காயதுந்
தொடர்கண்டங்காரியும் வில்லைவழுதளைவேருஞ்
சொற்கணு சிறுமல்லியுந்
தூயபா திரிவேரு மிளகுதேன் செவ்வியஞ்
சுவாசவிக் கலுந்திருமே. (௯)

### சயரோக ஹரம்.

உற்றகறி பாலையும் வெள்ளா டதின்பாலு
மோங்குமயிர் மாணிக்கமும்
உடும்பதி னிறைச்சியும் பூசனிக் காயதும்
உயர்நிலக்குமிழ் வேரதுங்
கொத்துமலி பேரீந்து முந்திரிகை யின்கனி
கோவினெய் யொடு வெண்ணெயுங்
குலவுநீர் முட்டானு மட்டவர்க்கத் துடன்
கூறுநல் லமுக்குராவுந்
தொழ்நிவளர் சிந்திலும் நாகமல் லிகைவேருந்
துய்யமுத் தக்காசதுஞ்
சொற் சடா மாஞ்சிலோ டிலுப்பையின் பூவதுந்
துதிபெற்ற செந்தேனதுஞ்
சித்தமோ டுரைத்தமுன் காசசுவாசமாஞ்
சிரவியவர்க் கங்களெல்லாஞ்

செயரோக மானதொரு கபத்துக்க ரங்களாய்ச்
செப்பினன் கும்பமுனியே. (௭)

சுரசாதங் குரற்கம்மல் ஹாரம்.

கண்டுபா ரங்கியுந் திப்பிலியின் மூலமுங்
கருவேப்பு முள்ளங்கியுங்
கரிசாலை பண்ணையும் வசம்பிலை யுருத்திராட்
சங்கன்சிர மேலமதுவும்
மண்டுதேன் செவ்வியமு முந்திரிகை கொடிவேலி
வனமல்லித் தக்காளியும்
வளருமா டாதோடை மிளகு திப்பிலிசிறிய
வழுதலையின் வேரானதுந்
துண்டமா மிலவங்கப் பட்டையொடு பத்திரி
சுக்குட னரத்தை யகிலுந்
தூய்யகாவ டங்காலி யானையின் திப்பிலி
சுகந்தமா மிலவங்கமுங்
கண்டுமுன் சொன்னதொரு காசச்சுவாசமாங்
கபங்களி னரங்களெல்லாங்
காணுங் குறற்கம்ம லானசுர சாதமாங்
கருதிய வரங்களிதுவே. (௮)

அரோசிக ஹாரங்கள்.

திரிகடு இஞ்சி வெல்லஞ் சீரகந் திரிசா தீகஞ்
சிறுகுறா தளையின் கப்பு சிறுமூல மாதுலங்கம்
இருகூசக் கரைதா னீச மியல் வேப்பம் பூவுஞ் செய்யா
அருசிக் கிராமி றேடு மரோசிக ஹாரங்களாமே. (௯)

வாந்திநோய் ஹாரங்கள்.

புத்தோடு நாகமாந் துளிரும் வில்வம்
பொரிதாளி பத்திரியும் பெரிமா சுக்கும்



இத்தோடு சர்க்கரைதே னிளநீர் பாலும்
இலந்தைவிரை சீரகமும் மாதுலங்கந்
கொத்துமலி மாதளையின் பழமுமுத்தங்
கொண்டவிளாங் கனியுமிருவேலிசந்தம்
அத்தோடு பிலங்குறைக்கும் வாந்திக்கெல்லாம்
ஹாரங்களெனவே முனிவருளினரே. (௧௦)

உருத்திரரோக ஹாரங்கள்.

தசமூலம் மூக்குரட்டை வெள்ளி வெண்ணெய்ப்
சாரணையின் வேருடனே தேவதாரம்
நிசமாகு மசமஞ்சள் கூகைநீறும்
சேர்பஞ்சலவணமுடன் செய்யுஞ்சுக்கும்
கசமாரு மாத்தையுடன் சிற்றுமுட்டி
காயமுட னாக்கிலைகள கருதிக்கொண்டு
வசமாகும் உருத்ரவாயு வென்னும் பேராம்
மார்பிறேப் ஹாரங்களென வகுத்ததாமே.()

விதாகநோய் ஹாரங்கள்.

இச்சைகொள் ளதிமதுர மிருவேலி லாமிச்ச
மினியமா தளையின்பழம்
இலுப்பையின் பூவதும் நெல்லியும் பேய்ப்புட
லிளநீருடன் சீனியும்
பச்சைகற் பூரமுஞ் சீந்திலும் நெற்பொரியும்
பாலுடன் பொரிமாவதும்
பற்படக நன்னாரி பச்சைப்பயற்றுநீர்
பருத்திலைக் குமிழ் வேரதுங்
கொச்சைமுந் திரிகையும் பேரீந்து முத்தமுங்
கொத்துமலி கைச்சந்தனங்
குளிர்ந்ததன் னீரதுஞ் செந்தேனு மாகவே
குறித்தநல் விலவேம்பதும்

மிச்சமாய் நீருண்ட தண்ணீர்மிட்டானதும்
மேவுநற் செங்கரும்பும்
வேகமே லதுகொண்டு தாகமாய்த் தோன்றிய
விதாகநோய் ஹரங்களாமே. (கஉ)

மதமூர்ச்சை ஹரங்கள்.

முந்திரிகை பேரிந்து கதலிப் பழந்துடன்
முத்தமு மிலந்தை வித்தும்
முலைப்பா லுடன்வெட்டி வேருட னிலாமிச்
மோரிற் றெளிந்தநீருங்
கந்தமுறு பச்சைக்கற் பூரமும் பச்சரிசி
கழுநீருஞ் சாராயமுங்
கரிபாலை நீரதும் பாலுட னிளநீருங்
கருதுபொன் னாவாரையுங்
தந்தசிறு காஞ்சோரி குழம்புமோர் கல்லுப்பு
சம்புட னிலுப்பை மலருந்
தாமரைக் கந்தமும் நெற்பொரியும் நன்னாரி
சர்க்கரையு மதிமதுரமும்
வந்தகடு கான்றியும் நெல்லியுங் கல்மதமும்
வன்பூச னிக்காயதும்
மாதளைக்கனியதும் நெய்யுடன் இப்பியிவ
யதமூர்ச்சை ஹரங்களாமே. (கங)

சன்னசரோக ஹரங்கள்.

சன்னச ரோக மென்ற பித்தந்நிரத்
தலைபமூந்தச் சொரிந்திடுகல் சரிபம்பன்னைல்
சொன்னார்கண் ணஞ்சனமும் புகையும்போடச்
சுட்டிகையும் நகங்கடனி லாசியேற்றல்
கன்னியமோ பேதலீபாற் றயம்பியாலுங்
கடித்திடவுஞ் செய்திடுத லுள்ளியிந்து



சன்னதிரி கடுகுடனே மாதுலங்கஞ்
சன்னிரோகமறு ஹரங்களாமே. (கச)

மூலரோக ஹரங்கள்.

சாரணை பிரண்டை குழம்புமோர் கடுக்காய்
தான்றியும் நெல்லியின் காயுந்
தாமரைவளைய முள்ளிநேர் வாளஞ்
சார்கொடி வேலியுஞ் சிவதை
காரிடுங் காட்டுக் கருணையும் வெல்லங்
கரிகரு மையும்பழு பாகல்
கார்புளி கருணை புங்குசேங் கொட்டை
கரியவேம் பெள்ளுடன் பெருகுந்
தேரிமருளுஞ் சுக்குடன் மிளகுஞ்
செய்யதிப் பிலியவச் சாரம்
நீதறுகொட்டைக் காந்தைகோமயமுந்
தேன்மொழி பேயின மதுகேள்
வேரொடு மிரதம் வாங்கவுஞ் சார
வேகமே யதுதனக்கிய
வெந்திடச் சாரசுட்டிடு லறுக்க
மேவிய மூலநோய்ஹரமே. (கரு)

இரத்தமூல ஹரம்.

பூசிடவுந் திரிபுரத்தான் றுத்தநாகம் [மட்டி
புகட்டுபேய்ப்பீர்க் கொட்டறையுஞ்சிறுதும்
வீசுமயி லடிமாமு மிரத்தமூலம்
வெட்பாலை பாவட்டை வெங்காரந்தான்
ஆசைமிகும் நீருள்ளி தாமரைப்பூ [ணைய்
அரக்கொன்றை மிளிமிறகு மாவின் வெண்
வாசபெருஞ் சிவிரியா யுருவிபிந்து
வல்லுதிர மூலத்து ஹரங்களாமே. (கசு)

## உதிர்வாதன் ஹரம்.

காக்காயின் மூங்கிலானைத்தார் கொருக்கை
கருஞ்சிவதையு மணிப்புங்கும்
காயமுஞ்சிவதை வெளுத்த காக்கணமுங்
கருதிய இல்லையுங் கடுக்காய்
வாக்குயர் சதுரக் கள்ளிவேர் வாளம்
வடித்தகொள் ளதின் குடிநீரும்
வளருநல் வட்டக் கிலுகிலுப் பையுமே
வல்லினக் கெண்ணெய்வெள் ளரியும்
ஆக்குதற்குரிய வேளையின் செடியும்
யானையுங் குதிரையுங் கழுதை
ஆடொட்டை யெருமையும் பசுவு
மழகிய மனிதரோ டெட்டும்
ஊக்கமாய் விடுத்த மூத்திர மதனு
முதாரமே பொருமிய பிணியாம்
ஒழுங்குட னுரைத்தார் கும்பமா முனிவ
னுதிர் வாதன்வர மிதுவே. (கஎ)

## அதிசார ஹரம்.

வட்டத் திருப்பியும் வெட்பாலை யின்வித்து
மாம்பருப் பொடு பட்டையும்
வாட்சுண்டி புளியதின் வித்துவேர் புறணியும்
வரப்பினில பூலாவதும்
மாதுளங் காயதும் வில்வயி னிளங்காயும்
வன்னினாத் தும்பியின்காய்
வாழைத்தன் னெம்பூவு மாத்தியின் பூவதும்
வாசவைங் கப்பூவதும்
விட்டக் கொடிக்கழல் வித்துவேர்ப்பூலாவு
மேவுசீர் முள்ளி வித்தும்



வெட்டிவேர் பாலையின் பட்டைசா திக்காயும்
விடத்தேரி யாளவிலையும்
வேங்கையின் பட்டையும் நெற்பொரியு மாகவே
மேவுமஞ் சிலை தளிரதும்
வெள்ளிறகு வித்துடன் சீரகம் பேரீந்து
மேவுதிப் பிலி லோத்திரந்
தொட்டக்கருங்காலி நாவலின் பட்டையுந்
தளிருடன் கடுக்காயதுந்
தேதாசிறு காஞ்சொறி பெருமரப்பட்டையுஞ்
சுக்குமில வம்பிசினதுந்
தாய்யபால் நல்லெண்ணெய் முத்தமசு மோதகஞ்
சொற் கட்டிபன் பட்டையுந்
தலங்குகீழ் காய்நெல்லி வெட்பாலை யின்பட்டை
தய்ய வெண் குங்கிலியமும்
அட்டதிங் கெங்குமிகு சித்தர்களு மெச்சிடவெ
முருஞ்சடைக் கஞ்சாவதும்
ஆவாரை யின்பட்டை நெய்யுடன் செந்தேனு
மாவிதற் றயிரானதும்
அதிவிடைய முந்திலை வெள்ளாட்டுத்தயிருட
னானதோர் வகையிதெல்லாம்
அரிதெனப் பொதிகையிற் கும்பமுனி யருளிய
வதிசார ஹரங்களாமே. (கஅ)

## கிராணி ஹரம்.

ஆயிலும் புங்கு பொரி தலைக்காயு
மழிஞ்சியுங் குழம்புமோ வசம்பும்
அதிவசாரஞ் சுக்கிபின் சார
மாகிய கல்லவச் சாரம்

தீயினும் பெரிய சித்திர மூலந்
திரிகடு சிறியமூ லகமுஞ்
செவ்வியம் பர்பா டாகங்கரு வேம்பு
சீரகங் காயமூக்குரட்டை
பாயினு முட்கா வேளைகா வட்டம்
பருகிய புல்லுநல் வேளை
பகர்புளி யாரை யிந்து கல்லுப்பு
பாகுகாய்ச் சுப்புபொட்டுப்பு
சாயினுங் கருத்த வப்புசாரணையுஞ்
சாருமர் வாரைதக் கோலந்
தாவுவெங் கார மாரை யிளிலையுஞ்
சாற்றினர் கிராணியின் ஹாரமே. (௧௯)

## மந்தாக்கினி ஹாரம்.

சாற்றின ரதிசாரத்திற் குவிய மருந்தி னோடு
மாற்றிய கிராணி கான வகையுள்ள திரவியங்கள்
ஏற்றமா யீதிரண்டி யிபல்மந்தாக் கினிக்குமாகுந்
தோற்றமாய் முனிவன்சொன்ன துப்பநல் ஹாரங்களா
மே. (௨௦)

## விருழி ஹாரம்.

முன்னமேசீரி லுப்பதைக் கரைத்து
முயல்பெறக் குடித்தபின் சத்தி
முனைந்துசெய்வித்தல் கரிசாலைச்சாறு
மூக்கிலே நசியமே பண்ணல்
சொன்னநல் லவரை யிலைதனைக்கருக்கிச்
சுக்குடன் காய்ந்தநீ ருண்ணல்
தப்பகால் குழிபைக்காச்சவுங் கையான்
சுத்தசா றதனில்வெங்காரங்



கன்னியே பொரித்துக் கொடுக்கவுங் கால்கைக்
கணுவினிற் சேலையாற் சுற்றிக்
கட்டியே வைத்து நல்லிரு விழியிற்
கருது மஞ்சனமிட வகைகேள்
மன்னுநற் சுக்கு மிளகுதிப்பிலியும்
வகையுட னிலைவகளாற் செய்ய
வாங்குமென் றுரைத்தார் விருழியின் ஹாரங்கள்
வகுத்திடுங் கும்பமா முனியே. (௨௧)

## மூத்திரக்கிரிச்சர ஹாரம்.

அதிமது ரஞ்சிறு நாணலுந் தெற்பையு
மரிய நெருஞ்சில் துரா
யானை நெருஞ்சில் கரும்பொடு சந்தன
மாவதின் செய்பாலும்
மதியுறு சூரிய காந்தியும் பூசணி
வங்க மதின் பற்பம்
மகிழம் பூசிறு கீரையுசெல்வியு
மணலியுங் கவுதும்பை
விதியுறு தேற்றான் வித்தொடு முந்திரி
வெள்ளரி யிளநீரும்
வெள்ளிற குடனீர் முன்னிபொன் னாங்கணி
மேவிய மாமஞ்சள்
முதிருறு சீந்திலு மேலமு டன்னீர்
முத்தமு கிம்பஞ் சர்க்கரை யாவும்
முட்டாள் பிரமியது
மூத்திரக் கிரிச்ச ஹாரமே. (௨௨)

## அசுமரிரோகங்கற்கட்டு ஹாரம்.

கருத்தமுக் கிரிகையுங் கொள்ளதின் குடிநீருங்
கனமத மெவச்சாரமுங்

கருநாகற் பூரச் சலாசத்து பாலையும்
கந்தமா முத்[illegible]வும் [மும்
வெருத்த முதி கூந்தலுஞ் சிவதை வெண் கார
வெட்டிவேர் வறட்சுண்டியும் [ரும்
விளக்கெண்ணெய் சாரணை தண்ணீர் முட்டாண
விளாம்பிசின் விருதிளைலையும்
முரித்த சிறு பூளையும் மாவிலங் கப்பட்டை
முருக்கையின் பட்டையதுவும்
மூக்குரட் டையின்வேரு மரியநீர்ப் பூலாவு
முருங் மதி மதுரமதுவும்
அருத்தகர் பச்சையாம் பாக்குட னிவையெல்லா
மருக்குநீர்க் கிரிச்சமான
அரியகற் கட்டெனுமிரோகமென் றரை செய்யு
மசுமரி ஹராங்களாமே. (உ௩)

## பிரமேகஹரம்.

கொண்டாகல் லாவாரை கடலழிஞ் சிப்பட்டை
கோவைக் கிழங்குடனே
குழம்புமோ ரிருமஞ்சள் பருத்தியின் வித்துடன்
குன்றியின் விதைசிந்திலுங் [புஞ்
கோஷ்ட மொந் பேயத்தி பட்டை சேங்கொட்டை
குக்குல் பொன்னுங் காணியுங்
கோரைக்கிழங்குடன் காந்தமணமேமுங்
குவைதேரான் கொட்டையும்
மண்டோவற்பட்டை பாலை மருதம்பட்டை
வட்டத் திருப்பி வேரும்
வாசத்துரும்பிளாம் பட்டைநீலை யாவரை
வன்சிறு பயற்று நீரும்
வாகை திப்பிசின் விடத்தேரி யின்பிசின்
வன்கருங் காலி வெள் வேல்



வகையாம் விளாம்பிசின் கருவேலதன்பிசின்
வன்பலா சம்பிசினதுங் [கு
கண்டதா மரைவித்து முசுட்டையின்னிலை வித்
கருநாவீர் முள்ளி வித்து
கரியவேப்பிலையுடன் மூக்கிவிலை மல்லிவிதை
கடுஞ்சிறு நெருஞ்சி வித்துங்
காணப்ப லாசதின் பட்டைதென் னம்பூவுங்
கடியபூ வாசு மல்லுங்
கருநாகற் பூரச் சலாசத்து மப்பிரகங்
கந்தக செந்தூரமும் [னையு
ஆண்டேர்கொள் தேனுந் தேங்காயி னெண்
ணரிபகல் லெண்ணெயதுவும்
அரிதான சீனியு முருக்கையின் பட்டையு
மருநெல்லிப் பனைக்கந்தமும்
அழகான கரும்பனைக் கந்த முக்கத்தி விரை
யதுவுடன் திரிபலையதும்
ஆனபோர முட்டி யிவையெலாம் பிரமேக
ஹராங்களாந் திரவியங்கள். (உ௪)

## மேகக்கட்டி ஹரம்.

ஏலமுடன் மலை வேப்பம் பிசினுங் கோஷ்டம்
இலவங்கப் பத்திரியும் வெட்டி வேருஞ்
சாலகரும் போளமகில் குந்திரிக்கந்
தவுணையம் வெள்ளியத் தேவதாரம்
பாலையதின் பட்டையிலா மிச்சவேரும்
பருங் கிராந்தி தகரமுடன் குக்கில் போளம்
வேலியதி காகணமுஞ் சுக்கு மஞ்சள்
மேகத்தின் கட்டிகளுக் கரங்களாமே. (உ௫)

## சோமரோக ஹரங்கள்.

செய்யவுளுந் ததிமதுரம் நெருஞ்சில் வேருந்
தேற்றான்விதை தேலமுடன் சீந்திற்சத்தும்
வெய்யகிலப் பனைக்கந்தம் பனையின் கந்த
மிலாமிச்சு முந்திரிகை வெட்டிவேருந்
தையலே வாழைபதின் பழமுங் கந்தந் [ன்
தாமரைப்பூக் கந்தமுடன் தண்ணீர்முட்டா
னப்யகறு சந்தனமும் நெல்லிசீனி
சோமரோ ஹரங்களெனச் சொன்னதாமே.

## விப்புருதி ஹரங்கள்.

சார்மணிப் புங்கும் விழுதியி னிலையுந்
தாணியும் நெல்லியுங் கடுக்காய்
சாரனை தவசி முருங்கையின் வேருந்
தாவுநன் முருங்கையின் வேருங்
கூர்மிகுங் கற்பூ ரச்சலா சத்துங்
கூகைநீ ராயிலும் புங்குங்
கொடியகண் டகாரி சிறுகாஞ் சலையுங்
கூருமா விலங்கைமுக் கரட்டை
பார்மிகு கிம்ப மழுக்குரா வெதிபின்
பட்டைமை சாட்சிபேய்ப்புடலும்
பகர்கொடி வேலி வெட்டிவேர்காவல
பட்டையும் நல்விலா மிச்சுரு
சீர்மிகு வயிற்றில் விப்புருதிக் குந்
சிறந்தமேல் விப்புருதிக்குந்
தின்னவும் பற்றுப்போடவும் வயிற்றிற்
சேர்ந்தவிப் புருதிகளாமே. (உ௧)



## தனவிப்புருதிகள் ஹரம்.

எள்ளுடனே மருதாணி யிலையும் பட்டை
யிருப்பவி யாவாரை யிலைநன்னாரி
அள்ளிபகல் லதிமதுரங் குமரிமஞ்சள்
ஆம்பலுட னாசந்தோ லாலம்பட்டை
வெள்ளைமிகு மாவின்நெய் புங்கம்வேரு
மேவியகல் லத்தியொடு வேப்பம்பட்டை
தள்ளியிதை யரைத்துடனே மேலும்பூசத்
தனத்திலெழும் விப்புருதி ஹரங்களாமே. ()

## கெற்பவிப்புருதி ஹரம்.

காயமுட னிக்குப்பு பற்படாகங்
கழல்விரையும் பாவட்டை காக்கைப்பூண்டு
நாயுருவி கொடிவேலி பிரண்டையுள்ள
நல்லெண்ணெய் விளக்கெண்ணெய் முடக் [கொத்தானும்
தூயகறுஞ் சீரகமும் வசம்புவிழுதி
துடியான சாரணையின் வேரிதெல்லாம்
மாயவரும் பிணிகளுக்கு அதிகமான
வன்கெற்ப விப்புருதி ஹரங்களாமே. (உ௩)

## குன்மரோக ஹரங்கள்.

கடிதான நொச்சிலு முழவுமண் குடிகறுங்
கருஞ்சீரு மூருநீரும்
காட்டாமணக்குடன் சிறுமல்லி பெருமல்லி
கருவேப்பு தாணிநெல்லி
கடுக்காயும் புங்குடன் பஞ்சலவணஞ்சுக்கு
காக்கையுமெ வச்சாரமுங்
காயமுட னெட்டிப்பு மாவிலின் பட்டையுங்
கழல்விரையு முள்ளங்கியும்

வடிவான புளியன் புறணியின் சாம்பலும்
  வன்பனைப் பூச்சாம்பலும்
வாலுழுவை சீந்திலுஞ் சிறியதும் மட்டியும்
  வனமுருக் கிளசீரதும்
வசம்புகண் டங்காலி புள்ளிசிறு வழுதலையு
  மாவிலிங் கப்பட்டையும்
மாதுளம் பழசிம்பு நாரத்தை யின்பழம்
  மருவுசது ரக்கள்ளியும்
திடமான சத்தியின் சாரமும் வேளையுந்
  தேவதா ருமும் வில்வமுந்
சீரகந் தழுதாழை பாதிரியின் வேரதுந்
  திப்பிலி மூலமதுவுந்
சித்திர மூலியு மாற்பிணி மெலிபியுஞ்
  செவ்வியங் திப்பிலியதுங்
சீரான புளியாரை நெருஞ்சியின் வேரதுஞ்
  செருங்கருஞ் சீரமுங்
கொடிதான சாரணை மூக்குரட்டையின் வேருங்
  குவளைநல் லெண்ணெயதுவுங்
கூகைநீ ராவின்பால் புளிகருணை யின்கந்தங்
  குப்பையின் மேனியதுவுங்
கொள்ளதின் குடிநீரு மோரொடு வெண்ணெயுங்
  குமிழதின் வேரிதெல்லாங்
கொடியகுன் மங்களும் பீலிகை ஹரமென்று
  குறுமுனி யுரைத்தபடியே. (௧0)

## இரத்தகுன்ம ஹரம்.

திடமான புங்கம்வே ரயில்பட்டை
  சிறியவழு தலைவேரும் கண்டங்காலி



கொடிவேலி சாரணையு மூக்குரட்டை
  கொள்ளுடனே வெள்ளுள்ளி யென்றுகாயம்
வடிவான முள்முருக்க விலையும் பட்டை [ன்
  வனமுருக்கன் வேற் சாம்ப லெவச்சாரந்தா
கடிதான விரத்தகுன்ம மென்றும்பேராய்க்
  கருதுவார் சத்திகுன்ம ஹரங்களாமே (௧௧)

## வாதகுலை ஹரம்.

கச்சசா ரணைவேரும் மூக்குரட்டை
  கழலவிரையுந் திரிகடுகுங் காயம்செச்சில்
நச்சுகொடி வேலியுட னுள்ளி காயம் [காயும்
  நல்லெண்ணெய் விளக்கெண்ணெய் களறு
பச்சையா மெவச்சாரஞ் சத்திச்சாரம்
  பஞ்சலவ ணம்புரசு வம்புவேளை
வச்சதிப் பிலிமூலஞ் செவியங் கொளாளும்
  வாதம்குஞ் ஆலகுன்ம ஹரங்களாமே. ()

## மகோதர ஹரம்.

கஞ்சபோக் கினவான முள்ளியும் பெருங்காயம்
  கல்லெண்ணெய் விளக்கெண்ணெயும்
நாகண மெவச்சாரஞ் சத்தியின் சாரமும்
  நன்மணிப் புங்குவித்தும்
பஞ்சலவ ணம்பட்டக் கிறுகிறுப் பைசசெடி
  பலாசதின் சாம்பலதுவும்
பாங்கான தாளியும் செல்வியின் காயதும்
  பன்னிறுதில் லஞ்செடியதுங்
கொஞ்சுதிப்பிலிசக்கு வெள்ளையின் காக்கணு
  கொடியகள் ளிப்பாலதுங்
கூறுகள் ளிக்கரி லோத்திர மகிழ்கட்டை
  கொடிவேலி யுஞ்சிவதையும்

வஞ்சமேயில்லாத பகவிட்ட நீரதும்
வரிகடுக் காயிதெல்லாம்
மாதரின் மயலாசை யிதிமருந்தால்வரும்
மகோதர ஹரங்களாமே. (௧௧)

பாண்டுரோக ஹரம்.

திரிகடு கெருமைமோருஞ் சிறந்தவெள் ளாட்டிமோருங்
குருகுமண் டூரலோகங் கொடிவேலி கோவின் நீரும்
அருகுவாய் விளங்க முத்த மாட்சிக மிருமஞ்சள்தான்
பரிகடு தான்றி நெல்லி பாண்டுவி னரங்க ளாமே. ()

காமாலை ஹரம்.

சுக்குபுட லதிமதுரம் நெல்லிசிறுக் கீரை [க்காய்
துப்பபொன்னுங் காணி முத்துஞ் சந்தனமுங்கடு
மிக்ககரி சாலையுடன் கோஷ்ட மயிலடியும்
மேதியுடன் வெள்ளாட்டுக் குழம்புமோர் சிந்தில்
தக்கசிறு பயறுபால் நெய்யொமோன் கொம்பு
தருகீழ்காய் நெல்லிசதா வரியுமிரு வேலி
கைக்குநடு மணிக்கட்டி விரட்டையது போடக்
காமாலை ஹரங்களெனக் கருது முனியுரைத்தார்.

சோகை ஹரம்.

மேவுசா ரணைவேரு நாகண மரத்தையும்
வெள்ளாட்டுநீர் சாலமும்
வேளையு மெவசசாரங் கோமயங் கொடிவேலி
வெள்ளிறகு காக்கணமுங்
தாவுநேர் வாளமும் பஞ்சகோ லமுமஞ்சள்
தருமணிப் புங்குவித்துத்
தாமூலம் பிரமியு மிஞ்சிபா வட்டையுஞ்
சார்குழம் பானமோரும்



பாவுநீர் முள்ளிவட் டக்கிலு கிலுப்பையும்
பருதேவ தாரமதுவும்
பாங்கான வெள்ளுள்ளி சிவதைசங் கன்வேரும்
பண்ணுபேய்ப் பீர்க்கினுடனே
நாவுசற கடுக்காயும் விழுதிபி னிலையதுஞ்
சுத்தலோ கப்பொடியதுங் [படி
தோசையே யிவையெலாம் முனிவனு முரைத்த
சோகையின் ஹரங்களாமே. (௧௬)

விசற்பியாகிய விழற்பாக ஹரம்.

செய்யசெங் கழுநீரும் நெய்தற் கிழங்குடன்
செஞ்சந்த னங்கோஷ்டமும்
சிந்திலதி மதுரமுந் தாமரைக் கந்தமுந்
திரமான கொடி வேலியுந்
துய்யபா லைப்பட்டை வெள்ளிறகு சந்தனந்
துளசிவேம் பாவி னெய்யுஞ்
சொல்லிலாம் பிச்சமும் வெட்டிவேர் வள்ளியுஞ்
சுகந்தநன் னாரி யெள்ளும்
வையகம் புகழ்கோரைக் கந்தமுங் கத்தியிலை
வசையுங்கிளி மூக்கிலையதும்
மருவுசக் கரவர்த்தி யிலையுடன் பூவரசு
மன்னுகிழ் காய்நெல்லியும்
வெய்யபெரு நன்னாரி யருகுமா லம்விழுது
மேவுதென் னம்பூவதும்
விசற்பியென் றுரைசெயும் விழற்பாகஹரங்களாய்
வேதமுனி கூறு மொழியே. (௧௭)

வகுரி ஹரம்.

நல்லாடா தோடையொடு பேய்ப்பு டோலுங்
கறு நெய்யும் வேப்பம்வேரிலையும் நெல்லி

சொல்லாநீர் முட்டாளுங் கொள்ளுமஞ்சள்
    அரையுடனே மணிப்புங்கும் விபூதிமுத்தம்
புல்லாகு மறுகுடனே பெருஞ்செங் குன்றி
    பூசிம்பஞ் செருப்படைகற் பூரவல்லி
வல்லாரை யிலையதுவுங் கொப்பைமையான்
    வருநிகளுக்காமாக வகுத்ததாமே. (௯௮)

## சீதபித்த ஹரம்.

கல்லதேசர் விபூதி யிந்து
    கல்லெண்ணெய் மிளகுத் தாளும்
வெல்லுகற் கடுகு மோதம்
    விளாமிச்சு வேரு நெய்யுஞ்
செல்லெனுஞ் சந்தனங்கள்
    சிறுபிளவி ளைவி தல்லாஞ்
செல்லுடல் சீதபித்தத்
    திரவிய ஹாரங்களாமே. (௯௯)

## குஷ்டநோய் ஹரம்.

முர்தசாரணைவேம்பு கெந்தி மருக்காரை
    மூங்கில்விரா கார்போகி அழிஞ்சிவிரை புங்கு
முத்தமணித் தக்காளி திரிபலையும் பஞ்சன்
    யோதுமணிப்புங்குவிரா கரிசலாங் கண்ணி
சந்தனமுங் கற்பூர வல்லி பெருவாகை
    சடைச்சிமஞ்ச ரிலைவட்டக் திறு திலுப்பைவிழி
தாளகமுங் குளிர்ாவ விலந்தைதவிரா வேங்கை
    தகரைவிரை பாவட்டை யெருக்கொடிகொஞ்சோ
வந்த சிறு அம்மட்டி காக்கரட்டான் பூவு [வை
    மாமஞ்சள் செங்கொட்டை வசம்பொவொனறு
வாய்விளங்க மிருவேலி சல்லிகருங்காலி
    வனமல்லி புடலாடா தோடையிலாமிச்சம்



குந்துகரும்பனையனிச்சை செருப்படையொட்டறையு
    கொடுவேலியாவாரைகொன்றை திரியுரத்தான் [ங்
கூறும்பேய்ப் பீர்க்கட்ட மூத்திரம்பேயத்தி
    கொண்டவெட்பாலைவிரா குஷ்டத்தின் ஹாரமே.

## வெண்குஷ்ட ஹரம்.

கீலிவேர் கடுதாணி கண்டங்காலி
    செல்லியர சிலைகொன்றை பொன்னுவாரை
சீலகறுந் தாளிவெள்ளைக் காக்கணனும்
    செவ்வகத்தி விரையுள்ளிசேராங்கொட்டை
பாலமறுங் கார்போகி மருதம்பட்டை
    யரபொடியும் வெண்ணெயதி மதூரம்வேலை
மேலானகாட்டெள்ளு செம்பருத்தி
    வெண்குட்ட ஹாரங்களென விளம்பினரே.

## கிருமிநோய் ஹரம்.

வனத்தினிற் புரசன் விரையொடு காயம்
    வசம்புவெள்ளுள்ளியும் பாட்டை
வளர்கொடி வேலி வேம்பதின் பருப்பும்
    வாய்விளங் கங்கடுக்காயுஞ்
சினத்திடுந் தென்னம் பாளையுமவுரி
    செருப்படி பிரண்டைவேப் பிலையுந்
திப்பிலி சேராங் கொட்டையும் பாகல்
    செய்யமூக் குரட்டைசந்தனமும்
தனத்திடுங் கோவைக் கிழங்கொடி முத்தங்
    கழல்விரை தகரையின் விரையுங்
காட்டெரு மைப்பால் மூங்கிலின்குருத்துங்
    கடுமெலச் சாரமானதுவும்

அனந்திடு நொச்சில் கசப்பது கொடுக்கும்
அருமையாந் திராயிவையெல்லாம்
ஆனதோர் வயிற்றிற் பூச்சிகள் புழுக்க
ளாகிய கிருமிநோய் ஹரமே. (சஉ)

வாதநோய் ஹரம்.

அரத்தைபோ டிருமஞ்சள் கோஷ்டமிந்தும்
அகில்தேவ தாரமுட னும்ப விண்டும்
ஆமிஞடன் புங்கொருந்து முதியார் கூந்தல்
அறுகன்வே ரட்டவர்க்கஞ் சதுரக்கள்ளி
உரத்த சிறு முட்டியுடன் பேராமுட்டி [ச்சில்
புழுந்துடனே கொள்ளுவின் குடிநீர்நொ
ஒங்குமா விலங்கைதச மூலங்கள்ளி
யுயர்குப்பை மேனிகரும் போளங்காயம் [ய்
பருத்திவிரை நல்லெண்ணெய்வேம்பினெண்ணெ
பகர்சிற்ற மணக்கெண்ணெய் விளக்கினெ
பாரிலுறுந் தழுதாளை களற்மூயும் [ண்ணெய்
பருங்கிரந்தி தகரமுடன் சாளக்குக்கில்
வருத்தமறு சதகுப்பை யிலங்கைவித்தும்
மருதணியுஞ் சாரணைகுங் கிலியம் வீழி
வாசமுறும் பூங்குழலாய் சொல்லக்கேளாய்
வாதத்தின் ஹரங்களென வகுத்ததாமே ()

பித்தநோய் ஹரம்.

சீதையே சிறுகாஞ்சற் காவட்டம்புல்
தெப்பைபொடு பெருகாஞ்சல் சீந்தில் சந்தந்
தேங்காய்ப்பா லறுகினீர் முத்தம் பாலை
சிறுநீரை யிலுப்பைப்பூ செங்கநெய்தல்



தாதுமா துளங்கனியு மதூரம்வேம்பு
சர்க்கரையு முந்திரிகை பிச்சிப்பூவுஞ்
சம்புடனே கல்லாலு மாசோடத்தி
தாமரையுங் கோவைவரிக் கந்தத்தோடு
போதவே யிருவேலி யிலாமிச்சம்வேர்
புகழ்தோடை நன்னாரி யாலும் நெல்லி
பூமிச்சர்க் கரைக்கிழங்கும் பாலுங்கன்னல்
பூசணிவெள் ளரியரம்பைக் கனிபேரீந்து
பேதையெனுங் குமரிதுராய் முருங்கைப்பூவும்
பின்முசுக்கை பசும்பயறுந் தகரநெய்யும்
பேய்ப்புடலும் புங்கிலக் குமிழ்கற்பூரம்
பித்தத்தின் ஹரங்களெனப் பேசினாரே. ()

சேத்துமரோக ஹரம்.

மாதுகேள் சுவாசகாச வகையதின் திரவியங்கள்
வாதசேத் துமத்துக்கான மருவுநற் றிரவியங்கள் [கள்
போதவே யிவைகளாலே பொருதுசேத்துமரோகங்[யே
ஆதியாய்க் கொடுக்கத்தீரும் ஹரங்களென் றறிந்திடா

வாதசுரோணித ஹரங்கள்.

அரத்தையும் விழுதி மஞ்சளும் காண
லதிமது ரத்தசமூலம்
ஆமணக்குடனே கோஷ்டமா தணடை
யகிலொடு சிவந்தகன்னெருஞ்சில்
உரத்தவா காசத் தாமரை கடுக்காய்
ஓங்கிய மூங்கிலின் குருத்தும்
உயர்ந்திடுந் தாழை விழுதினிற்சாறு
முசுத்திடுக் கழற்மூயச்சீந்தில்
விரைத்திடுஞ் சிற்று முட்டிகல்பூவும்
வெள்ளரி காடிநீர்முள்ளி

மேவிய நிலத்தின் குமிழ்சிலா சத்து
மென்சிறு வழுதலை யென்னும்
வருத்தமாந்தேவ தாரியின் சக்கை
வரப்பினின் முள்ளியீ தெல்லாம்
மருவியவாத சுரோணித ஹரங்கள்
வகுத்திடுங் கும்பமாமுனியே. (௪௬)

ஆவரணபயித்திய ஹரங்கள்.

விரவிய பாலைசீந்தில் வெள்ளுள்ளி முசுமுசுக்கை
மருவுதிப் பிலியுஞ் சுக்கு மதூரமு மரத்தை செவ்யம்
வருமகில் சிறிய மூலம் மகாபலங் கொடிவேலி யாவும்
பரவுமா வரண மென்ற பயித்திய ஹரங்களாமே. (௪௭)

அதிஸ்தூல ஹரங்கள்.

கொண்டவாய் விளங்கங் கொள்ளுங்
கோஷம்பை சக்களத்தி
விண்டகல் வெண்ணெய் குக்கில்
வேங்கையுங் கொடியவேலி
கண்டிடுங் கடுக்காய் லோகங்
கற்பூரச் சிலையுந் தேனும்
அண்டியே யெவச்சா ரந்தா
னதிஸ்தூல ஹரங்களாமே. (௪௮)

அதிக்குரு ஹரங்கள்.

நிலக்குமிழ் பூசணிக்காய்
செய்யும்பா லமுக்குராவும்
இலைக்குநீர் முட்டான் பாலை
யெருக்கமையின் றயிர்கற் றாழை
உலுக்குநல் லுருந்து நீரு
முடலிளைத்தவர்க ளுக்கும்



அலுக்கியே பலனுண் டாக்கு
மதிக்குரு ஹரங்களாமே. (௪௯)

வந்தியரோக ஹரங்கள்.

புளித்திடு மாரை கழற்பருப் பதுவும்
புகழ்சிறு மூலமுந்தாழி
பொருந்துமா தளையு முருந்தநின்வேரும்
புளிக்குமா தளையும் வெட்பூலா
களித்திடு மீரூ மத்தியின் பாலுங்
கானக மல்லிசா ரணையுங்
கருதுநா கணமுந் தண்ணீர்முட்டானுங்
கனத்தநல் முக்குயப்பண்ணை
வெளுத்திடும் வசம்பு மாவதின்பாலு
மென்சிறு முட்டியின் வேரும்
மேவுபே யத்தி தன்னிலே முளைத்த
மிகுத்தபுல் லுருவியீ தெல்லாம்
வளத்துடன் மின்னாள் முழுக்கது கண்டு
வன்றலை முழுகுநாள் பாலில்
வகையுடன் குடிக்க மலடது நீங்கும்
வந்திய ரோகஹர மிதுவே. (௫௦)

கெற்பிணிசுர ஹரங்கள்.

வெண்ணெயுட னாவின்பால் நெய்யினோடு
மேவியநற் பட்சிகளின் மாங்கிஷங்கள்
பண்ணவே சுகபோக மதுரமான
பண்டமுட னாகாரம் பண்ணப் பின்னுந்
தின்னுஞ்சாங் களதேசத் தஷ்டவர்க்கத்
திந்திப்புத் திரவியமுங் குளிர்ந்த நீரும்
வண்ணமாஞ் சூலான மாதருக்கு
மருவுசுக ஹரங்களென வகுத்ததாமே. ()

## சுகப்பிரசூதி ஹரங்கள்.

கோட்டமுங் கடுகும் பாம்பதின் றோலுங்
கொடுஞ்சிவ னார்கிழங் கதுவுங்
குப்பமா மிடத்திற் பூசவுந் தூபங்
கொடுத்தபின் மயிரதைப் பந்தாய்
வாட்டமாய்ச் சுருட்டி யிரண்டுகன்னத்தில்
வளம்பெற தொண்டையிற் றேய்த்து
வகைமயிர் கழுத்திற் கட்டிகள்ளிப்பால்
வன்றலை யுச்சியிற் றடவிக்
காட்டமாந் தாளி பத்திரிகோஷ்டங்
காரமா யரைத்துச் சாராயில்
கள்ளியின் றெளிவி லுழவுமண் குடிநீர்
கருதிமுன் றேன்றினிற் குடிக்கச்
சூட்டியே கல்லுப் பரைத்துள்ளங் கால்கை
தோன்றவே பூசிக்கால்கையிற்
சூரிய காந்தச் செடியதைக்கட்டச்
சுகப்பிர சூதியமிதுவே.

## பாலநோய் ஹரங்கள்.

அடுத்திடும் பால ருக்கே
யந்தந்த ரோகந் தன்னிற்
கொடுத்திடுஞ் சம மருந்துங்
கோரமா மருந்து தானுந்
திடத்தில்மாத் திரைகள் செய்தே
தெளிந்துபார்த் தேகொடுத்தால்
படித்தகண் மொழியி னாளே
பாலநோய் ஹரங்களாமே.



## பாலகிரக ஹரங்கள்.

ஆடாவிதுதோல் கோட்டமும் வசம்பும்
ஆலதின் கொம்புவால் மயிரும்
அரியநெய் சிவதை பருத்தியின் வித்தும்
அழகிய மஞ்சள்வேப் பிலையுந்
தேநெற் கடுகு வெளுத்தகுங்கிலியத்
தேவதா ரம்புசபத்ரம்
சிரமுடன் றாயங் காட்டியபின்பு
சீருள முழுக்கதின் வகைகேள்
நாடுறும்பாலை விளாவொடு நாவல்
நற்சிறு மூட்டியும் புரசும்
நலந்தரும்பட்டை நீரதிற் காய்ச்சி
நங்கையார் பிள்ளைமேற் சொரியக்
கூடுமந்த்ர யாதமேயறிந்து
குணமுடன் பலிகளுஞ் செய்தால்
குழந்தையின்பால கிரகமேபகலுங்
கூறுதற் றிரவிய மிதுவே. (௫௩)

## பூதகிரக ஹரங்கள்.

புகைபது காட்டக் காயமோ டெள்ளி
புகழ்சிறு வழுதலம்பழமும்
பொருந்துவேப்பிலையும் நெய்பொடு கடுகும்
பொங்குகல் வசம்பொடு மஞ்சள்
சிகையதின் மயிரும் யானையின் கொம்புஞ்
* சிவனிரு மாலிய மதுவுங்

---

* சிவபூசை பண்ணிக்கழித்த புஷ்பத்திற்குச் சிவனிரு மாலியமென்று பெயர்.

தேடியமயிலி னிறகுடன் குக்கில்
சேரவே புகைத்திடப் பின்னும்
வகைகிலக் கடம்புஞ் செருப்படி கொட்டம்
வன்கரு கொச்சிபூ கிம்ப
மணந்தரு லவங்கப் பட்டைபேய் மிரட்டி
வகையறிந் திவைகளைக் குடிக்க
மகவெனும் பால சரவலாய்க் கேட்ட
வஸ்துவா லவர்தமைச் சுற்றி
வன்பலிகொடுக்கப் பூதமாங் கிரகம்
வாங்குமென்றுரைத்தனர் முனிவே. (௫௫)

உன்மாத ஹரங்கள்.

முந்திரிக்கனியுங் கரும்பதின் சாறும்
மிளகுபச் சரிசியின் கழுநீர்
முத்தமுங் கடுக்காய் தான்றியும் நெல்லி
முந்துகோ ரோசனை மதுரஞ்
சந்தனம் முலைப்பால் பூசணிக்காயுந்
தண்ணீர்முட் டான்சிறு கீரை
தாவியே பிடிக்கும் புளிச்சையுடனே
தனித்தநீ ருள்ளியின் சாறும்
அந்தமா முசிறு முட்டைவல்லாரை
யரியநன் மருந்திவை யெல்லாம்
அஞ்சனமிடவும் நசியஞ்செய்திடவு
மதட்டியே பயமுறு படுத்தல்
வந்திடுஞ் சாந்தை யடக்கிடப் பண்ணல்
வலுமையா யடித்திடல் பலவும்
வருசமா தானம் பேசவுன்மாத
மாறுமென் றுரைத்தனர் முனிவே. (௫௬)



அபஸ்மார ஹரங்கள்.

ஆவொடு பூனை யுடும்பொடு பாம்பு
மானையுங் கிரியும் நரியும்
அசுவமோ டிந்தப் பிச்சுக ளாலே
யறிந்திட நசியமும் பண்ணல்
பூவினி லுள்ளி திப்பிலி யுடனே
புங்குவித் தொடுதிரி கடுகும்
பொருந்துமிவ் வகையால் நசியமும்பண்ணல்
போதவுந் தலைமுழுகிடுதல்
தாவிய வெள்ளைக் காக்கணம்பூவின்
சாறுடன் பஞ்சகவ் வியநெய்
தண்ணீர்முட் டானும் பிரமிபூ சணிக்காய்
சார்ந்தநன் னரிவல் லாரை
பாவுமிவ்வகையால் மருந்திணை யருந்தப்
பட்சிக ளிறகினாற் புகைக்கப்
பார்மிகு மபஸ மாரங்க ளென்னும்
பயித்திய ஹரங்களாம்பாரே. (௫௭)

நேத்திரரோக ஹரம்.

மன்னுசெவ் வீருஞ் சனந்துருசு துத்தமும்
வருமனோ சிலைதாரமும்
வாலுழுவை யப்பிரகஞ் சூதமுங் கெந்தகம்
மருக்காரை யின்காயதும்
வலம்புரிக் காய்நெய்தல் பச்சைக்கற் பூரமும்
வசம்புவெண் காரமிந்தும்
வாசமிகுகோஷ்டமும் மஞ்சளிருசந்தனம்
மரமஞ்சள் கருவேலதும்
பொன்னுமிர தாஞ்சனந் துத்தநா கஞ்சீனம்
புஷ்பாஞ்சனஞ் செம்பதும்

புத்தாக விரைசங்கு நாகணக் கடல்நுரையும்
    புங்குவிரை சிறுமுட்டியும் [ங்கம்
பொருந்துமித் தனிவெள்ளி வெண்கலமு மிருவ
    புளியமலரின் சாறதும்
போற்றுநவ ரத்தினம் பலகறையு மிருலோகம்
    பூலா வுடன் பளிங்கும்
சின்னமா னுங்கலையு மெருமைகாண் டாமிருகஞ்
    செய்யகாட் டெருமை யதுவுந்
தேடுங் கடம்பையும் யானையும் பன்றியுர்
    திரமான பகவாடதுந்
இடமான கொம்புகள் பல்லுடன் கஞ்சாவுந்
    தேனுடன் முலைப்பாலதுஞ்
சிராங்குளத்துக் கிளிஞ்சிநீர் பனைமட்டை
    திரிகடுகு சிறுநீரையும்
அன்னமே யிளநீரு முருங்கைவெண் சாரணையு
    மழுக்குரா விலவம்பிசின்
ஆனபே ராமுட்டி சுட்டபற் பங்கொள்ளு
    மாசன் பழுப்பு சீனி
அதிமது ரம்பாலை திரிபலை வரட்பூலா
    வரியதேற் றான்கொட்டையும்
ஆகும் பழம்புளி வெண்ணெய்நெய் லோத்திரமு
    மானபொன் னுங்காளியுங்
கன்னியே குங்குமங் குளிசேவர் பிரமியுங்
    காளசத் தின்கொள்ளதுங்
காதுக்கு ரும்பியுஞ் சுமீராதாஞ் சவம்வெள்ளைக்
    காக்கரைத் தலையோடதுங்
கருதுஞ் செருப்படை பேயத்திபின்பாலுங்
    கனபித்த ரோசனியதுங்



காவிக்கல் சிறுமூலம் நந்தியாவட்டமுங்
    கருநாக கேசரமதும்
இன்னமெள்ளுப்பூ லவங்கமுஞ் சாதிக்கா
    யெலுமிச்சை யின்பழமதும்
எற்றநசி யம்பத்து வேதும்பிடிக்குத
    விதமாங் கலிக்க மதுவும்
இனிய கெண் டவிழ்தமும் முன்னமேசொல்லிய
    விலைகளாற் றயிலமதுவும்
எழிலான கண்களின் நோய்களின் ஹரமென்று
    மியல்பா யுரைத்தபடியே. (௫௮)

## கன்னரோக ஹரங்கள்.

சுத்தநன் முருங்கை பெருக்கொடி கொச்சி
    துளசிமுள் ளங்கி யாமணக்குந்
தோடையும் வேளை நல்லிருமுட்டி
    சொல்லிலைக்கள்ளிகஞ்சாவும்
பத்துமிவ் விலைகள் தேசியின் சாறும்
    பலகறைப் பற்பமுங் குக்கில்
பருத்தியி னிளங்காய் மருளொடு வெங்கம்
    பகர்சதகுப்பையோ டுள்ளி
மத்தநல்லிஞ்சி திரிகடு கிந்து
    வசம்பொடு கொன்றையின் பழமும்
மஞ்சளுஞ் சதாரக் கள்ளிநீ ருள்ளி
    வனமருக் காரைகொள் ளுக்காய்
கத்துவெள்ளாட்டு நீரொடு தாரம்
    கடுகெண்ணெய் வேம்பு நல்லெண்ணெய்
காய்ச்சியே வார்க்கக் காதினிற் பிறந்த
    கன்னரோய் ஹரங்களென் றறியே. (௫௯)

### நாசிரோக ஹாரம்.

சொன்னதா ளீசப் பத்திரி யுடனே
துளசியுங் கொள்ளொடு செவியங்
தூய்யவல் லாரை யகத்தியும் கொச்சில்
சொற்றமூ தாளை முன் னங்கி
மன்னுசீரகமும் புங்கநின் வித்தும்
வனகரி சாலைவாய் விளங்கம்
வருகொடி வேலி திப்பிலி மூலம்
மஞ்சளுங் குக்கிலுங் கடுகும்
உன்னியதேவ தாரமோ டுள்ளி
யோங்கிய மிளகொடு லவங்கம்
உற்றநாயுருவி கரியசீரகமு
முறைத்திடுஞ் சுக்கு திப்பிலியும்
நன்னயதான்றி நெல்லியுங் கடுக்காய்
நற்கரி திப்பிலியெல்லாம்
நாசியின் நோய்க்குத் திரவிய மெனவே
நவின்றனர் கும்பமாமுனியே. (௬0)

### அதாரநோய் ஹாரங்கள்.

வெள்ளைக்குங் கிலியந் தன்னில் மேவிய தயில மஞ்சள்
பள்ளத்தின் கீழ்காய்நெல்லி பருகடு தான்றி நெல்லி [ம்
விள்ளும்வேப்பிலையும் கொச்சில் மெழுங்கொடுதேவதார
அள்ளுந்தேன் மதாரங்குக்கில்அதாரநோய்ஹாரங்களாமே

### கண்டாலச்சியவிரண ஹாரம்.

கண்டா லச்சி முத்து முன்னே
கடிய சோளை மருந்ததனைக்
கொண்டே யாட்டுப் பாலுடனே
கூறுஞ் செம்மறி யாட்டுப்பால்



பண்டே சத்ரங் கத்தியினற்
பருகஞ் செருப்படை கடலையிலை
கண்டத் தன்னில் மாலையதாங்
கண்டா லச்சி ஹாரமாமே. (௬௨)

### தந்தரோக ஹாரங்கள்.

அரத்தையுடன் கொள்ளுக்கா வேளைகாயம்
ஆவாரை சாரணையு மகிழம் வித்தும்
உரத்தகரு வேலெருக்கு மருதம்பட்டை
உயர்குப்பை மேனியிந்து காட்டாத்திப்பூ
பருவிளநீர் துவரையிலை பெள்ளிலெண்ணெய்
பரிமளிக்கும் கற்பூரத்தயிலஞ் சுக்கும்
தரித்திருக்கும் கருங்காலி போமஞ்சள்
தந்தத்தின் மூலநோய் ஹாரங்களாமே. ()

### சிம்மரோக ஹாரங்கள்.

மாமிகு மஞ்சள் சீரகமுடனே
மஞ்சளிக் தும்பொடு துளசி
வருமனோ சிலையுந் தேனரி தாரம்
வன்பொடு தலையுடனேலம்
வரமிகு வேம்பு நொச்சிலுங் கருவேல்
வன்கருங் காலியுங் கோஷ்டம்
மணியின் நங்காளி பாலையின்பட்டை
வருசிறு முட்டி வெள்வேலுந்
தருசிலாசத்துந் தோடைபேய்ப்புடலுந்
தாவிய மால்சிராந்திப தாங்

சாருநற் கடுக்கா யாவின்னெய்யுடனே
தங்கிய மிளகுதிப்பிலியுந்
திருவெனுஞ் சுக்கு நல்லெவச்சாரஞ்
சேரவே வாயினுட் டாலிற்
செய்யநாக்கதனிற் பிறந்திடும் பிணியாஞ்
சிம்மநோய் ஹரங்களென் றறியே. (௬௪)

சருவாசியரோக ஹரம்.

அருந்துநற் சாதிப் பத்திரிகாயும்
அதிமது ரங்கடுங்காலி
யருஞ்சிறு சாதி யிலைசிறுபிலையு
மரியவேல் நாவல் சந்தனமும்
பரிந்தநற் கோஷ்டந் திரிகடு கதவுந்
பாலையும் வேப்புட னேலம்
பகர்மரமஞ்சள் கிராம்பு சீரகமும்
பண்ணுநா கேசர முத்தம்
வருந்திய லவங்கப் பட்டையு மிலையும்
மருவிய தாளிசகோ மயமும்
வருமெவச்சாரம் பச்சைக்கற்பூரம்
மாவதின் காயுட னேற்றுஞ்
சரிந்தகாட்டாத்திப் பூவுடன் மிறனுஞ்
சாருதக் கோலமுந் துருசு
தயவுடன் முகத்தில் வினையெனச்சேருஞ்
சருவாசியநோய் ஹரமிதுவே. (௬௫)

கண்டரோக ஹரம்.

சிவந்தசந்தனமும் வேங்கையின் மரமுந்
தேவதா ரங்கொடிவேலி



செவ்விய முடனே வெட்டிவேர் சுக்குஞ்
செய்யநற் கோஷ்டமொட்டறையும்
தவந்தரு லோத்ரந் திப்பிலியுடனே
தாளிசப் பத்திரி யேலம்
தருமெவச்சாரம் மஞ்சளுங் கடுக்காய்
தாவிய நற்சிறுகீரை
நவமிகும்வாச கெந்தகமுடனே
நன்மர மஞ்சள்வெட்பாலை
நாடமிக்குப்பு திப்பிலி மூலம்
நலந்தருங் கோசல மதுவுங்
கவமறுந்தேனு மிளகுவாலுழுவை
கசப்புள நற்றிராயிவையுங்
காரெனுங் கூந்தல் மயிலெனும் பெண்ணே
கண்டநோய் ஹரங்களென் றறியே. (௬௬)

சிரோரோக ஹரம்.

அதிமதுரஞ் சர்க்கரையுங் குங்குமப்பூகோஷ்டம்
அரியவிலா மிச்சின்வே ரேலமுடனிந்தும்
அகிலுடனே வாய்விளங்கஞ் சீந்திமருக்காரை
யருங்கிரந்தி தகரமுடன் சந்தனமுங்காயம்
மதிவளரு மிலவங்கம் மஞ்சள் மரமஞ்சள்
மஞ்சட்டி திரிகடுகு திரிபலைகஸ்தூரி
வாசமுள்ளகச்சோலம் பெருங்கோரைக்கந்தம்
மங்கையர்பால் நல்லெண்ணெய் வருலவங்க
துதிபெருகு நன்னாரி தாமரைப்பூக்கந்தந் [ப்பத்ரி
தய்யபசுங் கற்பூரஞ் சொற்கரியசாலை
கூட்டியவெண்ணெய்தனுடன் விழுங்குமிருமுட்டி.
சொற்கொடிவேல முத்தமுடன் றய்யசதகு
[ப்பை

கொடிய மருங் கற்றாழை சாதிக்காயுடனே
கூகைநீர் நாகப்பூ குருவேருந் தாரம்
கொஞ்சியகற்றலைபதினும் மூளையினும்பிறந்தமே.
கொடியசிரரோய் ஹாரங்கள்கூறுமொழிப்படி

## விரண ஹாரங்கள்.

கஞ்சியுங் காடியும் அன்னமும் நெய்பதங்
கற்றாழை யும்புங்கனும்
காட்டுமல் லிகைபிளாகு மஞ்சள்மர மஞ்சளுங்
கடுக்காயுடன்தா ளரியும்
கடுகுரோகணிசெல்லி சிறுகீரை வேருடன்
கருவபாலைப்பட்டையும்
கண்டிரவி முன்னை திரும்புசூரியகாந்தி
கடியபஞ் சட்டியதுவும்
மிஞ்சுவேப்பம்பட்டை அருசிபறுகன்வேரு
மெழுக்குடன் நொய்யரிசியும்
வெண்கலம் பழங்காசுக் கட்டியும் பழவெல்ல
மிருசிலக் குமிழ்வேரதும்
மேவுசதுரக்கள்ளிப் பாலுநல்லெண்ணெயும்
மிருத்தபுளி யாரையதுவும்
வீசுங் குளிர்ந்தநீ ரிலந்தையின் கொட்டையும்
வேம்பாடலதிமதுரமும்
காஞ்சுபுளி கருவேலக் கிழங்குகன்னரியுஞ்
சுத்ததேன் சுக்கி வெண்ணுந்
சூழ்ந்ததாழம்பூவு மரியசிறு சாதியின்
றுளிருமிரு வாட்சியிலையுங்
துகையாம் பருத்தியிலை யாசுபுளியிலை கொன்றை
தய்யாபாலட்டை யிலையுஞ்



சுத்தகோடகசாலை யிலையுடன் முன்னமே
சொன்னதோ ரிலைகளெல்லாம்
வஞ்சியே தண்ணீரிற் காய்ச்சிவிரணத்து
வருந்தி மிகவே கழுகவும்
வகையான சுண்ணப் பழங்காரை நீரினால்
மைப்போலரைத்து நன்றாய்
வசமாம் விளக்கெண்ணெய் விட்டுக்குழைத்ததை
வாங்கி விரணம் பூசவும்
மாயாத விரணங்கள் காயவே ஹாரமென்று
வளமாயுரைத்தபடியே. (௬௮)

## சத்தியாவிரண ஹாரங்கள்.

மிஞ்சியகல்லதிமதுரமிலவம்பட்டை
மேவுநந்தியாவட்டத் தோலுந்தேனும்
அஞ்சனமும் மாசிவிருகும் இசசிப்பூவும்
அரியவெல்ல குங்கிலிய மரக்கும் பாலும்
கொஞ்சுகில வேம்புடனே நீரினுள்ளி
கூகைநீர் செங்கொருஞ்சில் கொல்லங்கோவை
தஞ்சமாம் கெப்கடுக்காய் சிறுகாஞ்சோரி
சத்தியாய் விரணங்கள் ஹாரங்களாமே. ()

## அனற்பட்டவிரண ஹாரம்.

வெங்கீரா லதைக்கழுவி மெழுக்கும்பாலும்
வெட்பாலை கற்பூரம் வழுவைக்கீரை
பண்ணியசெம் பருத்திப்பூ பொன்னாங்காணி
பாலைபதின் பட்டையிலை பறச்சமத்தை
திண்ணியநீருள்ளியதிமதுரஞ்சந்தம்
வெட்டிவேர் கடுக்காயு மபிருங்கெய்யும்

அண்ணியநாயுருவியா சிலைநெய்ச்சட்டி
யனற்பட்ட விரங்கள் ஹாரங்களாமே.

பங்கநோய் ஹாரங்கள்.

வெளுத்தநற் கடுகும் ஆவதின் நெய்யும்
மெத்தெனப் பூசியே கட்டல்
மேவியகடுக்காயெண்ணெயில் வறுத்தே
விதமுடன் கட்டியயிலே
தளத்தில் மண்பூசிக் கட்டவும் வேளை
சார்புளி விரையதின் றோலுந்
தாவுமெள்ளெண்ணெய் மூங்கிலின் புறணி
தனித்தவாலரசதின்பட்டை
வளத்துடனண்டம் பாண்டப்புற்றோடு
மருதொடு நெல்லி குங்கிலியம்
வாழுமுந்திரிகை யத்தியின்நீரும்
வறுத்தநல் லுப்பொடு மிளகும்
பனித்திவை யல்லால் போளமுமரக்கும்
பாலுடன் குளித்திட மெய்யிற்
பருத்தவைகாவி லெலும்புகளொடிந்த
பங்கநோய் ஹாரங்களென் றறியே. (எக)

பவுந்தரவிரண ஹாரம்.

திரிபலையுங் கொடிவேலி வாய்விளங்கம்
திப்பிலியும் பாவட்டை விரையாவாரை
வெரியாவத் தோல்பூனை யெலும்பு மேலம்
மேவியசாரணைவேரும் லவங்கப்பட்டை
மரியாலம் பழுப்புடனே யிதுவல்லாமல்
வகையான காரத்தாற் கருமஞ்செய்து



பரிவாக வாதிக்க வாசனத்திற்
பவந்திரமாம் விரணங்கள் ஹாரங்களாமே. ()

மூளையிரண ஹாரம்.

சொல்லிய வசம்பும் முள்முருக் கதுவுந்
தூய்யவெண் காக்கணுள் சிந்தில்
அஞ்சுபேயத்தி யுத்தமதாளி
சொற்சிறு தந்தியின் செடியும்
வெல்லமும் புங்கும் ஆமணக்கெண்ணெய்
மேவுமூ மத்தையுங் கோஷ்டம்
வேகமாங்கள்ளிக் கொழுந்துசேங்கொட்டை
மிகுத்தசன் முருங்கையின்வேரும்
வல்லசாரணையுங் கத்திரிவேரும்
வன்சிவ னார்கிழங்கலரி
வாழையின் கிழங்கும் பாலொடுமருசு
வருகொடி வேலியும் நாகம்
முல்லையின் நகையாய் சங்கதின்பற்பம்
முயல்பெற மன்னபேதியதும்
முத்தினிற் சிப்பி யிவையெலாந்தலையில்
மூளையி விரணநோய் ஹாரமே. (எஉ)

அற்புதவிரண ஹாரம்.

கோவின்நீர் கடுக்காயும் முருங்கைவேருங் [மூலம்
கொன்றையொடு சேங்கொட்டை சிவனார்
பாவியநற் புங்குடனே ஆயிற்பட்டை
பஞ்சலவணத்துடனே யெருக்குமஞ்சள்
தாவியநற் றிரிகடுகு வசம்புங்கள்ளி
சாரணையு மொட்டறையுங் கொடியவேலி

ஆவியென்று மெய்பதிலே சகலமான
அற்புதமாம் விரணங்கள் ஹரங்களாமே. ()

## சிலிப்தவிரண ஹரம்.

கொண்டவெட்பாலை விரையொடு கடுக்காய்
கோசலஞ் சிவதையுங் கடுகுங்
கொத்தமல்லிகையுஞ் சிந்திபினிலையுங்
கொடியகள் முருங்கையின்வேரும்
மஞ்சிமாமணக்கின் வேரொடு காயம்
வழுதலை வேர்மரயஞ்சள்
மருவுமேரண்டத் தெண்ணெயுஞ் சுக்கும்
வாழ்பருதாரையு மெருக்கும்
பஞ்சநல் லயமுந் தேவதாரத்தின்
பலவகை மருந்திவை யல்லால்
பாவைமேலெனுர் கிழங்கொடி வசம்பும்
பழுதின்சா ரதனிலே யரைத்துச்
செவ்வெனு முலைபாய் கூட்டிபேபூசத்
திரமுடன் பிடிக்குதல் பலவுஞ்
செப்பிய முழங்கால் பொருமியேவீங்குஞ்
சிலிபத விரணமா ஹரமே. (எ௫)

## உபசிம்மகவிரண ஹரம்.

முருங்கையும்புங்கும் பேயதின் பீர்க்கும்
மூக்குகார் போகிமுள்ளங்கி
மொழிந்தன வைக்கும் வித்துகளாகும்
முயல்சிவ னார்கிழங்காத்தை
வரங்கொளுஞ் சதுரக் கள்ளியு மெருக்கும்
மருவுபால் கொச்சிலும் மாஞ்சில்



வருமிருவேலி சிறிய தும்மட்டி
வள்ளியுத் தாமணிக்கொழுந்தும்
பரங்கொளுந் தேவ தாரமுஞ் சுக்கும்
பசுமுதற் கொம்பொடு குளம்பும்
பாங்குடன் சுட்ட கரியுடனிந்தும்
பரவிய சாரணைவேரும்
உரங்கொளுங்குமரி வரப்பினில் முள்ளி
யுயர்புளி கருணை பாவட்டை
உன்னிய வாயுண் ணுக்கினில் விரண
முபசிம்ம ஹரங்களாமே. (எசு)

## நாடிவிரண ஹரம்.

என்னுடனே யிருமஞ்சள் காட்டுவாகை [ய்
பெருக்கம்பால் வச்சிரப்பால் காஞ்சோரிக்கா
கள்ளமருக் காரையுட னுமிற்பத்ரி
காய்ச்சுப்பு மஞ்சட்டி கல்லினுப்புந்
துள்ளியவேம் பொட்டறையும் புனலிமாக்கல்
சொற்பரட்டை காயுருவி கமுகிந்துப்பும்
உள்ளகரம் பதிலிருக்கும் வினைகளான
வுயர்நாடி விரணங்கள் ஹரங்களாமே. ()

## அசக்கள்ளியாதிரண ஹரம்.

ஓட்டவசக் கள்ளிபா திரணத்துக்குஞ்
சொற்கசபமென்னுமொரு விரணத்துக்கும்
பட்டபா ஷாணத்தின்விரண மென்றும்
பருகியமு விரணத்தின் மருந்துசேரு

கட்டமெனு மணிப்புங்குந் தேவதாரம்
கொடியமனே சிலையிக்துப் பிணைவகளெல்லா
அட்டமிகும் பருத்தே பூசத்தீரு
மசக்கள்ளி யாதிரண ஹாரங்களாமே. (எஅ)

முகதூஷகவிரண ஹாரம்.

உரைத்த நல்வசம் பெருக்குட னரியபா கணமுந்
திருத்தும் வெள்ளிற காவிலை சிரட்டையி னேடும்
அரைத்துப் பூசமு கத்தினில் நாற்றமா னதுவும்
விருத்த மாமுக தூஷக விரணமா ஹாரமே. (எசு)

பதுமகண்டகவிரண ஹாரம்.

கொன்றையின் பட்டை நெய்தேன்
கோதிலா வேம்பின் பட்டை
நன்றதா யரைத்துப் பூச
நாடிமிப் பிணியைக் கேளாய்
இன்றுதா மரைநா ளத்தி
விருந்திடு கருக்குப்போலக்
கன்றமெற் றென்றும் பத்ம
கண்டக ஹாரங்க ளாமே. (அ0)

போட்டகவிரண ஹாரம்.

இரண்டுமுகங் கொண்டிருக்கும் விரணத்துக்குஞ்
சேர்ந்தருண்டு மின்னல்தரும் விரணத்துக்
செப்புநடு மார்புதனிலக்குள் தன்னிற் [கும்
நீரமாகப் பருத்திருக்கும் விரணத்துக்கும்
மருண்டவுடல் தனிலெரிவாய் வருரிபோலும்
வருவிரண மல்லாமல் வருரிகட்கும்



லங்தெழும்பி மூன்றுமுகமாயுருண்ட
வல்விரணம் பித்தத்தின் விசற்பியாலும்
அருண்டகடு கதுபோலு மனேகங்கண்கொண் [ம்
டக்கினிரோ கணிநான்காம் விரணத்துக்கு
ஆகியநற் சில்லதுபோல் விரணத்துக்கும்
அநேகரணங் கணக்கில்லா விரணத்துக்கும்
வரண்டிடச் சுக்கிலம்வாங்க லுதிரம்வாங்கல்
மருவிபலங்கணம்போடல்குளிர்ச்சிசெய்தல்
மருந்துகளாற் பலவகையாற் காங்கைபோற்றல்
மருவியபொட் டகவிரண ஹாரங்களாமே.()

சக்காரற்புதவிரண ஹாரம்.

சிவந்திருக்குஞ் சிறியவழு தலையின்வேருஞ்
செய்யகிலப் பூசணியின் கிழங்குமாகுங்
வந்தசேத் துமசிரந்த மருந்துசெய்யல்
தலைமுளை விரணத்தின் மருந்துசெய்பல்
அவன்றலையிற் பிறந்தாண மூளைபற்றி
யக்கினிசெய் போலுருவி வரம்புகட்டுஞ்
சவந்தபா கிதமாக விதானஞ்சொன்னர்
சக்காரற் புதவிரண ஹாரங்களாமே. (அ௨)

வல்மீகருத்தகுத ஹாரங்கள்.

புற்றுப்போ லெழுந்துடனே தினவுண்டாகும் [ம்
பொருந்தியவன் குத்தலுமா பெரிவுண்டாகு
புகலுமிது வல்மீக விரணமாகும்
பூண்டதலை மூளையதின் கிகட்சைசெய்யல்
சத்தியெனும் புற்றுடைய மனைணுஞ்சேர்த்து
தந்திசெடி யித்துப்பு நாணல்நீக்கில்

சாருமிது வல்லாம விரத்தம்வாங்கல்
தாவுகின்ற ரவுத்திர மாம்விரணங்களும்
பெத்தவனலகிலம்போல் கொதுறல்செய்யும்
பெருகுரம் பதிலேசத்திரமும்பன்னைல்
பேசியகதாக்கிரந்தி குணமுஞ்சொல்வேன்
பின்னுங்கால் விரல்கீழும் விரணமாகும்
வத்தைபதை பறுக்குதலு பிரட்சைகர்மம்
வகைபான மணிவிதியுஞ் செய்யத்தீரும்
வல்மீக ருத்தகுத ஹராங்களென்று
மருவுகுறு முனியுகந்து வகுத்திட்டாரே. ()

குணக்கநோய் ஹரம்.

சத்திரமாம் திரிபன்னைல் தெங்கின்கந்தம்
சம்பழம்வெண் குங்கிலியத் தயிலம்பூசல்
சித்திரமூ லத்துடனே அரக்கோடென்னின்
செடியதனைச் சாரமதாய்ச் செய்துபூசல்
பத்திவரும் பிணியதனைச் சொல்லக்கேளாய்
பழுப்பாகும் நகமெல்லாங் கருப்புமாகுங்
குற்றமுடன் விரணமதாய் நகத்திற்றோன்றுங்
குணக்கநோய் ஹராங்களெனக் கூறினரே.

காதமவிரண ஹரம்.

என்னுடைய பொடியுடனே வேம்பின்வேகு
மியமுடன் சுட்டபுளி பேய்ப்புடோலக்
தென்னியநற் கொத்துமல்லி கழுநீரோடிக் [லாங்
தேங்காயி னென்ணெயுடன் காய்ந்தகுண



கொள்ளுதற்கு செல்வியுடன் பழையகாடி
கொடுமையுட னக்கினியின் கர்மஞ்செய்யக்
கள்ளனெனுங் கால்தனிலே சேற்றுப்புண்ணுங்
காதமாம் விரணங்கள் ஹராங்களாமே. ()

வெங்கலாஞ்சியவிரண ஹரம்.

தேனொடுபொலைப் பட்டையுந் துளிருஞ்
சீரகம் நாவலின்பட்டை
செய்யதிப்பிலியும் செல்விசந்தனமுஞ்
சிறந்திடு மஞ்சளுமறுகுங்
காசொடுமுசலி விரத்தமுங் கோட்டங்
காட்டெரு மைக்கடாய்க் குளம்புங்
கருதுபத்திரிகாய் கிம்பமும் பிச்சி
கடியபூ வெள்ளி லோத்திரமும்
ஈனமாம் பங்கம் பாளையின் சாம்ப
விலங்கைதவித் தெள்ளுடன்பாலும்
எழில்மனோ சிலையும் வன்னிமஞ்சட்டி
யிலவதின் பிசினொடு வெல்லம்
வேனெனும் லவங்கப்பட்டை வெள்ளாட்டின்
மேவுபால் வடித்திடுஞ்சாதம்
மிகுமருந் ததன்றூல் மங்குகளான
வெங்கலாஞ்சிய விரண ஹரமே. (அரு)

கோட்டவிரண ஹரம்.

எரிவிறுற்புடைத்தலுண்டாமெழும்பித்தசேத்துமத்துக்
குரியக ரகுரொட் டார்வா முத்தநல் ஹரணத்துக்குப்
பரியுநற் சிகிட்சைபோலப் பண்ணுத விதைகளெல்லாம்
விரிவிலா நீண்டகோட்ட விரணத்து ஹராங்களாமே. ()

## காமியவிரண ஹரங்கள்.

இண்டிலையுடனே துத்தமுந் துருசும்
ஏலமும் பாண்டப்புத்தோடும்
எள்ளொடுதேனும் நெய்யிந்தூர
மிந்துடன் நெல்லியின்காயும்
கண்டுடைவளமண் தான்றியின் காயும்
நன்மஞ்ஞ சிலையொடு வீரம்
நாட்டினிற் கொடிதாம் வெளுத்தபாஷாணம்
நயந்தரு மாலதின்செடியுஞ்
சுண்டுநற் கடுக்காய் காவியின்கல்லுஞ்
சொற்கருங் காலியின்பிசினுந்
தொடர்ந்த முந்திரிகைக் கனிரசாஞ்சனமுந்
தோகைசேய பூசுநீறதுவும்
கண்டுமுன் சொன்ன சேகையின்மருந்தாங்
கருத்துட னிவ்வகையதனாற்
காணவேகோச விரணத்தின் ஹரமாய்க்
கருத்துட னுரைத்தனர் முனியே. (அ

## யோனிரோக ஹரம்.

அரத்தை யிருப்பு பஞ்சகோலத்தோ டமிய
மிளகுதேள் கடையும்
ஆவதின் நெப்பால் வசம்பொடு காய
மசமதா கமுமிருசீரம்
டரத்தமா விலங்கை யிலைமரமஞ்ச
ளோங்கிய சிதளம்பழமும்



உயர்ந்திடுந் தேங்கா யெண்ணெயே ரண்ட
முற்றநல் லெண்ணெயும் மூன்றுந்
தரித்தநல் முத்தங் கோவையின் கந்தஞ்
சர்க்கரை வேளைவேர் கொன்றை
சார்குருந்தக்கல் கூகையின் நீருந்
தாழ்ந்தநன் னெருஞ்சியின் காயும்
வருத்தமாம் வட்டத் திருப்பியுந்தாரம்
மஞ்சளும் நல்லெவச்சாரம்
மானனை யார்கள் குய்யமாம் ரோக
வகையதின் ஹரங்களாம் பாரே. (அசு)

## ஸ்தாபரவிஷங்கள் ஹரம்.

முத்துநல் வட்டத்திருப்பி சந்தனமும்
மிளகொடு சுக்குதிப் பிலியும்
முத்தமுங் கடுக்காய்ப் பேய்ப்புடல் சிந்தில்
முந்திரி கையுங்கொடுவேலி
வத்துநற் கோஷ்டம் நெய்யிரு மஞ்சள்
மருளொடு கிராந்தியின்றகாம்
வசம்பு மூக்குரட்டை யாம்பலும் வங்கம்
மருவிய வெள்ளியும் பொன்னுஞ்
சுத்தபேய்ப் பீர்க்குஞ் செம்பையின்பட்டை
தூய்யவெண் சாரணை லோத்தாஞ்
சொற்சிறுகீரை செவியமுந் தேனுஞ்
சூழ்பெரு வாகையு மிலையுந்
தத்துகாளிக்கல் சாரணை விளாங்கந்
தாவுமாட் டாங்கொடி யுடனே

தையலே செடிகள் தன்னிலே பிறக்குந்
தாபர விஷங்களின் ஹரமே. (௬௦)

சருவவிஷ ஹரம்.

கண்டங்கத் திரிமருளும் வெண்காக்க ணன் சிந்
கருநிலங் கண்சாணமும் [தில்
கார்போகி யொட்டறை குன்றிசிறு நொச்சியுங்
கனமழையு நீருள்ளியும்
கருதுசாட் டிக்கருணை பெருவாகை பஞ்சகங்
கரிசாலே பண்ணைகோஷ்டங்
காறுக்கு றும்பியும் வச்சிரம் பாலைவிரை
காயமொடு நாதுவளையும்
மண்டெருக் கல்விரியும் புங்குபா கல்சாறும்
வசம்புகிரி கடுகுகாணல்
வட்டத் திருப்பி சிறு கொம்மட்டி பேய்ச்சுரையு
மஞ்சளிலே பழுபாகலும்
மருக்காரை யிருமஞ்சள் வெள்ளிறகு வெங்காரம்
மயூரசிகியும் பாலையும்
மகிழம்விரை புத்தரசு வித்துமீ சுரமூலி
வாழ்மணித் தக்காளியும்
அண்டர்தேன் இரிபலையு மாத்தையறி மதூரமும்
ஆம்பிசிறுப் பைக்கட்டியும்,
ஆமணக் கூமத்தை தாளிபுளி யங்காளிரு
மாட்டுப் புழுக்கைவெல்லம்



அருலவங்கப்பட்டை பிரண்டையும் பேய்ப்பீர்க்கு
மன்னிலப் பனை தாரமும்
ஆகாச கெருடனுந் தாயைக்கொன் றார்பூண்டு
ரியதா ளிப்பனங்காய்
தண்டுகற் றிருமேனி தும்பிலி சிறுக்கீரை
சாரணையு மூக்குரட்டை
தாவுசென் னெரிஞ்சிலும் விளங்கமுந்
தாமணியுந் தருசிவர் கிருமாசியுந்
தருகிரந் தித்தகர மாவின்நெய்பூசவுந்
தாவிக் குடிக்கநிதமுந்
தயவுடன் புகைபோட நசியமுஞ் செய்திடச்
சருவவிஷ ஹரமாகுமே. (௬௧)

கீட்டகவிஷ ஹரம்.

சீரகங் காயம் கற்சிறுகீரை சிவதையிந்
துப்பொடு கோஷ்டந்
திரிகடுகேலம் நெய்யெவச்சாரஞ்
சிர்பெறுங் குன்றியும் வசம்புங்
காருறுந் துளசி கிரந்தியின் றகரங்
காட்டிலில் வாகை முள்ளங்கி
காவியின் கல்லுஞ் சந்தனமதூரங்
கருதுமஞ் சட்டிநாகேசம்
பேருறுவட்டத் திருப்பி நன்னாரி
பெரியகற் றுளசிவாய்விளங்கம்

பின்னிரு மஞ்சள் தகரையின் வித்தும்
பெருகிய கோரையின்கந்தம்
போருறுஞ்சீனி பாலையின்பட்டை
பூச்சிகள் புழுக்களின் விஷமாம்
பூசவுங் குடிக்கக் கீட்டகவிஷங்கள்
போகுமென்றுரைத்தனர் முனியே. (கூஉ)

சிலந்திப்பூச்சிவிஷ ஹாரங்கள்.

இலந்தையொடு காயுருவி செய்யிந்துப்பு
ஏலமொடு சாணப்பாஷி லவங்கத்தோல்
சலந்தருநல் லாம்பலொடு மதுரஞ்சந்தந்
தான்றிக்காய் செஞ்சந்தஞ்சடாமாஞ்சிற்றுன்
மலந்தவிக்கும் பொன்முசுட்டை பாலைப்பட்டை
மஞ்ஞசிலையு மிருமஞ்சள்வருகன்னரி
தலந்தனிலே லூத்தையெனும் விஷங்களான
தருசிலந்திப் பூச்சிகளின் ஹாரங்களாமே. ()

தேள்விஷ ஹாரம்.

கழல்விரையு மெருக்கம்பால் வச்சிரப்பால்
காயமுடன் புரசினுட பிசினும்புங்கு
காதுக்கு ளாங்குறும்பி காய்ச்சுங்காடி
கருதியநல் லரசினுட பிசினுந்துப்பும்
அழலுறுநஞ் சாங்கோரை யாயில்மஞ்சள்
அரிதகியுஞ் சீதளையு மொட்டைப்பல்லும்



ஆம்பலுடன் நல்லெண்ணெய் நெய்யுங்காழி
யரும்புரசு பெருவாகை சிவனார்மூலந்
தழலருக்கும் நாகப்பு தேன்கொடுக்கு [ஞ்
தகரைவிரை கீழ்வில்லம் வெண்காக்கட்டானு
சாற்றியநற் றிரிகடுகு புருவினெச்சந்
தையலே முதலாம் பட்சிகளினெச்சம்
வழலருக்கும் பசுமுதலாய் சாணமாகும்
வல்மிருகம் பலவகையின் லத்தியாகும்
மாயுதற்கு வெடிக்கென்னுங் கொட்டுந்தேளின்
வல்விஷத்து ஹாரமாக வகுத்திட்டாரே.

மூஷிகவிஷ ஹாரங்கள்.

எருக்கு தூதளையும் மஞ்சளிந்துப்பு
மீசுரமூலிநற்பீர்க்கும்
இனிய பேய்ப்பீர்க்கும் விளாவுதின்பிசினு
மியல்மா மஞ்சளும் புங்கும்
கருக்குள நொச்சில் பூனையினெலும்புங்
காட்டினில் வாகையின் விரையுங்
கன்னியர் முலைப்பால் சீந்திலொட்டறையுங்
கருதுபாவட்டைசா ரணையும்
மருக்கொளுந்தேவ தாரமஞ்சட்டி
வன்சிறுக் கீரைசெங்குன்றி
மருவுநல் லழிஞ்சில் விரைநறுந்தாளி
வரப்பினில் முள்ளியும்வேரும்
எருக்கொடி நிலத்திற் படர்முடக்கொத்தா
னிவையெலா மெலியது கடித்தால்

இனியசன் மருந்தா யுரைத்தனன்
முனிவனினியமூ லிகவிஷ ஹாரமே. (௬௫)

### அளாகவிஷ ஹாரங்கள்.

கடிபடு மிடத்தை யறிந்துநன்றாகக்
கன்றுதோல் செருப்பினா லடித்தல்
காட்டினில் வாகை யிலையுமொட்டறையுங்
கருதால் லழிஞ்சியின் விரையும்
வடிவுளமயிலுங் கோழியினெச்சம்
வாயினிற் றம்பலமதுவும்
வகையுடன் பங்கம் பாளையினிலையு
மருவுமூ மத்தையி னிலையுந்
தூடியுளபின்றோர் குளித்திடு மஞ்சள்
சொற்பெரு மெருக்கதின்பாலுந்
துய்யகற் சுட்ட புதியசுண்ணாம்புஞ்
சொல்லுநல் லமுக்குராய் கொள்ளும்
அடியுளகோயால் வெறியது மிகுந்து
வழலுறக் கடித்திடு மெலிகள்
அரியதாம் விஷமா மிரைப்புடன் மிகுத்த
வளாகமாம் விஷங்களின் ஹாரமே. (௬௬,

### நகதந்தவிஷ ஹாரங்கள்.

ஆலம்பாலொடு தெற்பையும் காணலும்
அரிய வன்னியின்பட்டை செருப்படை
கோலநல்விரு மஞ்சளும் வெட்டிவேர்
கூடுகிம்பிலை காக்கட்டான் பட்டையுஞ்



சீலமாம்பெரு வாகையும் பஞ்சகஞ்
செய்யுமா கனப் பிராயதின் பட்டையும்
மாலங்கொள்நக தந்த விஷங்களின்
ஹாரமதாக வகுத்தனர் மாமுனி. (௬௭)

### நரைதிரைமுதுமை ஹாரங்கள்.

மருவுபொன் னப்பிரகந் தாந்தமுள் கெந்தகம்
மஞ்சள்திரி பலையுள்ளியும்
வல்லாரை பிரமியுங் கொட்டைக்கரந்தையும்
வசம்புகற் றாழையதுவும்
வாய்விளங்கம்பாலை நிலப்பூசணிக்கந்தம்
வாழைசேங் கொட்டை குக்கில்
மருதணி யிலந்தைவிரை முள்முருக்கவுரியும்
வாலுமூவை நொச்சிமுத்தங்
கருவுசங்கன்குப்பி யஷ்டவர்க்கஞ்சீந்தில்
காரெள்ளி னிச்சைசந்தங்
காரையுஞ் சிறுகீரை கூத்தன் குதம்பையுங்
கழல்விரை யழிஞ்சி வித்துங்
கருங்காலி யாகாச கெருடனூ மத்தைவிரை
காட்டா மணக்கு மருதுங்
கார்போகி சாரணையும் வேம்புவெண் காக்கணங்
கரிசாலை கொடிவேலியும்
அரிவைபே சிறுமூல மாசுபங்கம்பாளை
யமுக்குரா வதிவிடையமும்

ஆவாரை தகரையின் வித்துமுக் காவேளை
யழுகண்ணி யாவிலிங்கை
யரியகற்பூரச் சலாசத்து சிறுமல்லி
யம்மான்பச் சரிசிபூலா
ஆகுமிரு திப்பிலியுஞ் சிறுபூளை குளிகாவ
லருமணித் தக்காளியுந்
திருவுநீர் முட்டாளும் நெருஞ்சிலு மநேரசிலை
செருப்படை கிலக்குராவுந்
தேவதாரஞ் சுக்கு புரசொடு கிலப்பனை
சிவனார் கிழங்கு நெய்பால்
தேனுடன் முடக்கொத்தான் சீனிவெண்
குங்கிலியஞ் சேத்திடி ரசாயனமதாய்த்
தின்னவே முதுமையும் நரைதிரைகள்
ஹரமென்று செப்பிய மொழிப்படியிதே. ()

நஷ்டவீரிய ஹரங்கள்.

கூறுமிர தங்கெந்தி பொன்னுடனப்பிரகங்
கோஷ்டபூ பொடி சுக்கனுங்
குளிரிவேர் செங்கெய்தல் நிலப்பனை யமுக்குரா
கோதும்பைச் சக்களத்தி
கூகைநீர் கச்சோல மிலவுநேரும்பிசினுங்
குங்குமங் கடுக்காயனுங்
கொத்துமலி யிலுப்பையின் மலரு நீர்முட்டாளுங்
கோதும்பை புள்ளிசந்தம்
ஆறுமாத்தைகயின் நெல்லு மோரிதழ்த்தாமரையு
மமுதசர்க் கரைநெல்லியும்



அதிமதுரம் கன்னரி நெரிஞ்சிவிருவேலிலையு
மபினி தூ தளைபாலையும்
ஆல்விழுது மரமஞ்சள் வங்கயிள கீரெள்ளு
மானபே ரீந்துமகிழும்
அரியமுந் திரிவாழை தும்பிலி யிலந்தையது
மாறுவகை யும்பழமதாய்க்
காறுதிப் பிலிபிஞ்சி சாரணை முசுட்டைவிரை
கண்டுசர்க் கரையுநந்து
கஞ்சமல ருங்கெந்த முருங்கையிலையும் பிஞ்சு
கருதுமல ரும்பிராயுங்
கார்போகி சாதிக்காய் நெல்லொடு சிலாசத்து
காஞ்சோரி வித்தேலமுங்
கற்கடக மிருவேலி வெண்காக்க ணாணிலையுங்
கடுகிலக் குமிழ்சிந்திலும்
வேறுமில வங்கத்தோல் சிலைதயுஞ் சிறுக்கீரை
மேவுவள ரிக்கிழங்கும்
வெள்ளிறகு முடக்கொத்தான் வித்துநீர் முள்ளி
விரைவெண் கருப்பஞ்சாறதும்
மேவுதேங் காய்ப்பாலும் நிலப்பூசணிக்கந்தம்
வெண்ணெய்பால் நாகேசுரம்
மிஞ்சுநெய் தேன்சீனி யனுபானமொடு நஷ்ட
வீரிய ஹரங்களாமே. (௯௮)

சொற்சத சுலோபத்தின் மருந்துதன்னைத்
தூபமுட னுக்கிரண நசியம்பண்ணல்
கற்கமொடு சுரசங்கள் குடிநீராகக்
கணமான லேகியமுந் தயிலம்பண்ணல்

சற்கிருத மஸ்திபொடு சிரத்திலஸ்தி
கன்முழுக்கு மேற்பூசல் செத்திற்றப்பல்
முற்படவே மூலிதனை யரைத்துக்கூட்டல்
மொழிந்தனரா யுருவேத முற்றுமுற்றே.

ஆரியமாம் வாகடத்தி ஞான்சொன்ன
அருங்கிரந்தம் நூறான சுலோகந்தன்னைச்
சீரியநற் றமிழாலே கவிநூறாகச்
செப்பினேன் படிக்கின்ற பேர்களுக்கு
வீரியமா யிந்நூலைக் கற்றோரெல்லாம்
விளங்கவே யுத்தமபண்டிதருமாகிக்
கூறியநோய் பிணிநீக்கி வணக்கமாகிக்
குறைவில்லாப் பூமிதனில் வாழ்வதாமே.

சதகசுலோகமென்னும் வைத்திய சதகம்

முற்றிற்று.

சதகசுலோகமென்னும் வைத்திய
சதகத்திலுள்ள சரக்குகளின்

# அட்டவணை அகராதி.

இந்த நூலில் ஒரு வியாதிக்குப் பலசரக்குகள் சொல்லப்பட்டிருக்கின்றன; அவைகளே வேறு சில வியாதிகளுக்கும் சொல்லப்பட்டிருக்கின்றன. அதனால், ஒருசரக்கானது எந்தெந்த வியாதிகளுக்கு உபயோகப்படுகிறதென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால் இந்த நூலிலுள்ள செய்யுட்களையெல்லாம் ஆராய்ந்து தேடியெடுக்க நேரிடும்; அப்படிச்செய்வது அசாத்தியமான காரியம்; ஆகையால் நினைத்த தக்ஷணமே இன்னின்ன சரக்குகள் இன்னின்ன வியாதிகளுக்கு உபயோகப்படுமென்பதைத் தெரிந்துகொள்ளும் விதமாக நூலிலுள்ளபடியே அச்சரக்குகளையெல்லாம் அகராதிக்கிரமமாக இங்கே எழுதிச் சேர்த்திருக்கிறோம். அந்தச் சரக்குகளில் ஆங்காங்கே சில முக்கிய குறிப்புக்களையும் எழுதியிருக்கின்றோம்.

இன்னும் தொகையாயிருப்பவைகள் விரித்தெழுதப்பட்டிருக்கின்றன. சில அரும்பதங்களுக்கும் அருத்தங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவசியமானவர்கள் இந்த 'அட்டவணையைப்பார்த்தால் மேற்கண்ட விஷயங்களையெல்லாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள ஏதுவாயிருக்கும்.

அ.

அகத்தி:—நாசிரோகத்தைத் தீர்க்கும்.

அகில்:—
அகிற்கட்டை:- } சுரசாதங் குரற்கம்மல், வாதநோய், வாத சுரோணிதம், ஆவரண பைத்தியம், சிரோரோகம், மகோதரம் ஆகியவற்றைக் கண்டிக்கும்.

அசமதாகம் (ஓமம்):—யோனிரோகம் தீரும்.

அசமோதகம் (ஓமம்):—அதிசாரம், மந்தாக்கினி ஆகியவை தீரும்.

அஞ்சனம்:—சத்தியாவிரணம் தீரும்.

அஞ்சிலைத்துளிர் (அஞ்சிலைநொச்சித் துளிர்):—அதிசாரம், மந்தாக்கினி ஆகியவை தீரும்.

*அட்டமூத்திரம்:—குஷ்டம் நீங்கும்.

†அட்டவர்க்கம்:—க்ஷயரோகம், வாதநோய், கெற்பிணி வியாதி, நரை, திரை, மூதுமை ஆகியவை தீரும்.

அண்டம் (கோழிமுட்டை):—பங்கநோய் தீரும். (அதாவது எலும்புமுறிவு குணப்படும்.)

அதிமதுரம்:—விதாகநோய், மதமூர்ச்சை, மூத்திரக்கிரிச்சரம், அசுமரிரோகம், க்ஷயரோகம், தனவிப்புருதி, காமாலை, விசற்பி, பித்தம், ஆவரண

* சிறுநீர், பசுநீர், எருமைநீர், வெள்ளாட்டுநீர், யானைநீர், ஒட்டகைநீர், கழுதைநீர், குதிரைநீர் ஆகிய எட்டுமாம்.

† சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம், ஓமம் ஆகிய இவ்வெட்டுமாம்.



பைத்தியம், உன்மாதம், வெண்குஷ்டம், அதரரோகம், கீட்டகவிஷம், வாதசுரோணிதம், நேத்திரரோகம், சருவாசியரோகம், சிலந்திப்பூச்சி விரணம், சிரோரோகம்; விரணம்; சத்தியாவிரணம், அனற்பட்டவிரணம், காமியவிரணம், சர்வவிஷம், நஷ்டவீரியம் ஆகியவை தீரும்.

அதிவிடயம்:—அதிசாரம், மந்தாக்கினிரோகம், நரை, திரை, முதுமை இவை நீங்கும்.

அத்தி:—தனவிப்புருதி, பித்தநோய் தீரும்.

அத்திநீர்:—பங்கநோய் தீரும்.

அத்திப்பால்:—வந்தியரோகந் தீரும்.

அபினி:—நஷ்டவீரியந் தீரும்.

*அப்பிரகம்:—பிரமேகம், நேத்திரரோகம், நரை, திரை, முதுமை, நஷ்டவீரியம் ஆகியவை நீங்கும்.

அமுக்குரா:—க்ஷயரோகம், விப்புருதி, தேகம் இளைத்தல், நேத்திரரோகம்; அரைகடி விஷம்; நரை, திரை, முதுமை, நஷ்டவீரியம் ஆகியவைதீரும்.

அமுதசர்க்கரை (சீந்தில் சர்க்கரை):—நஷ்டவீரியம் நீங்கும்.

அம்மான் பச்சரிசி:—நரை, திரை, முதுமை நீங்கும்.

* இதனைத் தனியாக உபயோகிப்பதில்லை; பஸ்பமாக அல்லது செந்தூரமாகச் செய்து உபயோகிக்க வேண்டும். இதன்முறைகளெல்லாம் நமது அநுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

‡அயம் (இரும்பு அரப்பொடி):--சிலிபதவிரணம், வெண்குஷ்டம், நஷ்டவீரியம் தீரும்.

அரக்கு:--உருத்திரரோகம், சித்தியாவிரணம்; பங்கநோய் தீரும்.

அரக்குச்சாரஞ் செய்தபூசல்:-- ꠸குணக்குநோய் தீரும்.

அரசந்தோல் (பட்டை):--தனவிப்புருதி, பங்கநோய் தீரும்.

அரசம்பழுப்பு:--நேத்திரரோகந் தீரும்.

அரசம்பிசின்:--தேள்விஷந் தீரும்.

அரசிலை:--வெண்குஷ்டம்; அனற்பட்டவிரணம் நீங்கும்.

அரசு (வேர்):--பித்தநோய், விரணம்; நரை,-திரை, முதுமை, தீரும்.

அரத்தை:--சுரசாதங் குரற்கம்மல், உருத்திரரோகம், சோகை, வாதநோய், வாதசுரோணிதம்; ஆவரண பைத்தியம்; தந்தரோகம்; உபசிம்மகவிரணம்; யோனிரோகம்; சர்வவிஷம் ஆகியவை தீரும்.

அரப்பொடி:--(அயத்தைப் பார்க்கவும்.)

---

‡இதனைப் பெரும்பான்மையுந்தனியாக உபயோகப்படுத்துகிறதில்லை; செந்தூரம், பர்பம், லேகியம், வடகம், திராவகம் முதலியவைகளாகச் செய்து உபயோகிப்பது வழமை. இம்முறைகளெல்லாம் நமது அநுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

꠸குணக்குநோய்—நகச்சுருத்தி அது விரணமாகும்நோய்.



அரம்பைக்கனி (வாழைப்பழம்).-பித்தநோய் தீரும்.

¶அரவந்தோல்:-- பவுத்திர விரணம், பாலக்கிரகம் தீரும்.

அரிதகி (கடுக்காய்)--கடுக்காயைப் பார்க்கவும்.

‖அரிதாரம்:--சிம்மரோகம், குஷ்டம்; நேத்திரரோகம், கன்னரோகம், சிரோரோகம், யோனிரோகம், சர்வவிஷம் தீரும்.

அலரி:--மூளையிரணம் தீரும்.

§அல்லிவிரை:--பிரமேகம் தீரும்.

*அவரையிலை:--விசூசி (வாந்திபேதி) தீரும்.

அவுரி (இலை):--கிருமிநோய் தீரும்.

அவுரிவேர்:--வெண்குஷ்டம் தீரும்.

†அழிஞ்சி (வேர்ப்பட்டை):-கிராணி; மந்தாக்கினி தீரும்.

†அழிஞ்சிவிதை:--குஷ்டம்; மூஷிகவிஷம்; அரைகடிவிஷம்; நரை, திரை, முதுமை தீரும்.

---

¶அரவத்தோல்—பாம்புச்சட்டை; இதனைப் புகைகொடுக்கவேண்டும்; பிள்ளைகளுக்குக் குளிசங்கட்டவேண்டும்.

‖இதனைப்பெரும்பான்மையுந்தனியாக உபயோகிக்கிறதில்லை. பர்பம், செந்தூரம் முதலியவைகளாகச் செய்தும், யோகமுறைகளோடுசேர்த்தும் உபயோகப்படுத்தவேண்டும். இம்முறைகள் நமது அநுபோகவைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன:

§இது விஷதருமமுள்ளது; ஜாக்கிரதையாக உபயோகிக்கவேண்டியது.

* இதனைக் கருக்கிக்கொஞ்சம் மேற்றோல் நீக்கின சக்கைத் தட்டிப்போட்டுக் கஷாயஞ்செய்து கொடுக்கவேண்டும்.

†இவை விஷதருமமுள்ளவை.

அழுகண்ணி:—நரை, திரை, முதுமை தீரும்.
அறுகம்வேர்:—வாதநோய், விரணம், வகுரி, விசற்பி, பித்தநோய், அனற்பட்டவிரணம், வெங்கலாஞ்சிய விரணம் ஆகியவை தீரும்.
அனிச்சை:—குஷ்டம் தீரும்.
அன்னபேதி:—பவுந்திரவிரணம் தீரும்.
அன்னம்:—விரணம் தீரும்.

## ஆ.

ஆகாசகெருடன் (கிழங்கு):—சர்வவிஷம்; நரை, திரை, முதுமை தீரும்; சத்தியாவிரணம் நீங்கும்.
ஆகாசத்தாமரை (இலை):—வாதசுரோணிதம் தீரும்.
ஆடாதோடை:—பித்தநோய், கன்னரோகம், சிம்மரோகம், குஷ்டம்; சுரசாதங் குரற்கம்மல், வகுரி தீரும்.
ஆட்டாங்கொடி:—தாபரவிஷங்கள் தீரும்.
ஆட்டுக்கொம்பு, பல்:—நேத்திரரோகம் தீரும்.
ஆட்டுப்புழுக்கை:—சர்வவிஷந் தீரும்.
ஆட்டுமூத்திரம்:—உதரவாதரோகம் (பெருவயிறு) தீரும்.
ஆதண்டை:—வாதசுரோணிதந் தீரும்.
ஆத்திப்பூ:—அதிசாரம், மந்தாக்கினி தீரும்.
ஆமணக்கு (இலை):—வாதசுரோணிதம்; யோனிரோகம், கன்னரோகம், (அதாவது காதுநோய்) சர்வவிஷம் தீரும்.
ஆமணக்கெண்ணெய்:—(விளக்கெண்ணெய்)
ஆம்பல்:—தனவிப்புருதி, வாதம், தாபரவிஷம், சிலந்திப்பூச்சி விரணம், தேள்விஷம் தீரும்.



ஆயில் (வேர்):—கிராணி, மந்தாக்கினி, விப்புருதி, வாதம்; சுகப்பிரசூதி; தேள்விஷம் தீரும்.
ஆயிற்பட்டை:—குன்மம்; இரத்தகுன்மம், அற்புதவிரணம் தீரும்.
ஆயிற்பத்திரி (இலை):—நாடிவிரணந் தீரும்.
ஆரையிலை:—கிராணி, மந்தாக்கினி தீரும்.
ஆலம்பட்டை:—தனவிப்புருதி, பங்கநோய் தீரும்.
()ஆலம்பழுப்பு:—பவுந்தரவிரணந் தீரும்.
ஆலம்பால்:—நகதந்தவிஷந் தீரும்.
ஆலம்விழுது:—விசற்பி, நஷ்டவீரியம் தீரும்.
ஆலிலை:—மூகதூஷகவிரணந் தீரும்.
ஆல் (வேர்):—பித்தநோய், வந்தியரோகம் தீரும்.
ஆவாரம்பட்டை:—மந்தாக்கினி தீரும்.
ஆவாரை (வேர்):—குஷ்டம்; கிராணி, மந்தாக்கினி, பிரமேகம்; தந்தரோகம்; நரை, திரை, முதுமை தீரும்.
ஆவாரையிலை:—தனவிப்புருதி தீரும்.
ஆறுமாதத்துநெல்:—நஷ்டவீரியந் தீரும்.

## இ.

இச்சிப்பூ:—சத்தியாவிரணம் தீரும்.
இஞ்சி:—அரோசிகம், சோகை, நஷ்டவீரியம், கன்னரோகம் (அதாவது காதுநோய்) தீரும்.
இண்டிலை:—காமியவிரணம் தீரும்.
இண்டு (வேர்):—வாதம் தீரும்.

---

() இதனைப் புகைகொடுக்கவேண்டும்.

இந்துப்பு:—சன்னசரோகம், இரத்தமூலம், கிராணி, மந்தாக்கினி, சீதபித்தம், வாதம், நேத்திரரோகம்; கன்னரோகம், தந்தரோகம், சிரோரோகம், உபசிம்மகவிரணம், காமியவிரணம், அரோசிகம், கெற்பவிப்புருதி, சிம்மரோகம், கண்டரோகம், நாடிவிரணம், அசக்கள்ளியாதி ரணம், வல்மீக குத்தகுதம், யோனிரோகம், கீட்டகவிஷம், சிலந்திப்பூச்சிவிஷம், தேள்விஷம், மூஷிகவிஷம் தீரும்.

()இரசம்:—நஷ்டவீரியம், நேத்திரரோகம் தீரும்.

இரசாஞ்சனம்:—நேத்திரரோகம், காமிய விரணந்தீரும்.

இரத்தம் வாங்கல்:—வன்மீககுத்தகுதந் தீரும்.

இருசந்தனம் (வெண்சந்தனம், செஞ்சந்தனம்):—நேத்திரரோகம் தீரும்.

இருசீரகம் (பெருஞ்சீரகம், நற்சீரகம்):—யோனிரோகந்தீரும்.

இருதிப்பிலி (அரிசித்திப்பிலி, யானைத்திப்பிலி):—நரை, திரை, முதுமை தீரும்.

இருமஞ்சள் (கறிமஞ்சள், கஸ்தூரிமஞ்சள்):—பிரமேகம், பாண்டு, வாதம், நாடிவிரணம், தாப

() இதனைப் பெரும்பான்மையும் தனியாக உபயோகிக்கிறதில்லை. பற்பசெந்தூரங்களாகவும், யோகமுறைகளாகவும் செய்து உபயோகிக்கவேண்டும். இம்முறைகளெல்லாம் நமது அநுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.



விஷம்; சர்வவிஷம், கீட்டகவிஷம், சிலந்திப்பூச் சிவிரணம், நகதந்தவிஷம் ஆகியவை தீரும்.

இருமுட்டி (சிறுமுட்டி, பேராமுட்டி):—கன்னரோகம்; சிரோரோகந் தீரும்.

இருலோகம் (பொன்வெள்ளி):—நேத்திரரோகம் நீங்கும்.

இருவங்கம் (கருவங்கம், வெள்வங்கம்):—நேத்திரரோகந் தீரும்.

இருவாச்சியிலை:—விரணந் தீரும்.

இருவேலி:—வாந்திநோய், விதாகநோய், தனவிப்புருதி, காமாலை, குஷ்டம், பித்தம், உபசிம்மகவிரணம், நஷ்டவீரியம் ஆகியவை நீங்கும்.

இருவேலிலை (வெள்வேல், கருவேல்),—நஷ்டவீரியம் நீங்கும்.

இலங்கணம் போடல்:—*பொட்டகவிரணந் தீரும்.

இலந்தை (வேர்):—சிலந்திப்பூச்சி விஷம்போம்.

இலந்தைப்பழம்:—நஷ்டவீரியந் தீரும்.

இலந்தைவிரை:—வாந்திநோய், மதமூர்ச்சை, குஷ்டம், வாதம், வெங்கலாஞ்சிய விரணம், நரை, திரை, முதுமைபோம்.

இலவங்கத்தோல் (பட்டை):—சிலந்திப்பூச்சி விரணம், நஷ்டவீரியம், சுரசாதங் குரற்கம்மல், பூதகிரகம், சருவாசியரோகம், பவுந்தரநோய், வெங்கலாஞ்சியவிரணம், சர்வவிஷம் நீங்கும்.

இலவங்கப்பத்திரி:—சுரசாதங் குரற்கம்மல், மேகக்கட்டி, சருவாசியரோகம், சிரோரோகம் நீங்கும்.

*பொட்டகவிரணம்—கட்டிகள்.

இலவங்கப்பூ (இலவங்கம் அல்லது கிராம்பு):--அதிசாரம், மந்தாக்கினி, சருவாசியரோகம், சுரசாதங்குரற்கம்மல், நேத்திரரோகம்; கன்னரோகம் (அதாவது காதுநோய்) நாசிரோகம், சிரோரோகம் தீரும்.

இலவம்பட்டை:-சத்தியாவிரணம் நீங்கும்.

இலவம்பிசின்--நேத்திரரோகம், அதிசாரம், மந்தாக்கினி, வெங்கலாஞ்சிய விரணம், நஷ்டவீரியம் நீங்கும்.

இலவுநீர்:-நஷ்டவீரியந் தீரும்.

இலுப்பைக்கட்டி:--சர்வவிஷம் நீங்கும்.

இலுப்பைப்பூ:—க்ஷயரோகம், விதாயநோய், மதமூர்ச்சை, பித்தம், நஷ்டவீரியம் நீங்கும்.

இலைக்கள்ளி:—கன்னரோகம் (அதாவது காதுநோய்) தீரும்.

இளங்கன்றின் சாணம்:-சர்வவிஷம் நீங்கும்.

ளநீர்:—நேத்திரரோகம், வாந்திநோய், விதாகநோய், மதமூர்ச்சை, மூத்திரக்கிரிச்சரம், குன்மம்; பித்தம், தந்தரோகம், நஷ்டவீரியம் நீங்கும்.

ஈ.

ஈசுரமூலி (பெருமரப்பட்டை):-சர்வவிஷம், மூஷிகவிஷம் தீரும்.

ஈயம்:-(வங்கத்தைப்பார்க்க)

உ.

உடம்பிறைச்சி--சயரோகந் தீரும்.

உதிரம்வாங்கல்—பொட்டகவிரணம் நீங்கும்.



உத்தாமணி--சர்வவிஷம் நீங்கும்.

உத்தாமணிக்கொழுந்து--உபசிம்மக விரணம் தீரும்.

உருத்திராக்ஷம்--சுரசாதங் குரற்கம்மல் தீரும்.

உலோகம்--அதிஸ்தூலம் நீங்கும்.

உலோத்திரம் (வெள்ளிலோத்திரம்):--கண்டரோகம், நேத்திரரோகம், அதிசாரம், மந்தாக்கினி, மகோதரம், தாபரவிஷம் தீரும்.

உழமண்--சுகப்பிரசூதி நீங்கும்.

உழுநூறுநீர் (உழமண்ஜலம்)--குன்மந் தீரும்.

உளுந்து--சோமரோகம், வாதரோகம், நஷ்டவீரியம் தீரும்.

உளுந்துநீர்--அதிக்குருசம் நீங்கும்.

உளுந்துவேர்--வந்தியரோகம் நீங்கும்.

உள்ளி (பூண்டு)--சன்னுசரோகம், குன்மரோகம், வெண்குஷ்டம், பூதகிரகம், கன்னரோகம், நாசிரோகம், நரை, திரை, முதுமை, நஷ்டவீரியம், அபஸ்மாரம்; வாதசூலை தீரும்.

ஊ.

ஊமத்தை (இலை)--அனற்பட்டவிரணம், கன்னரோகம், மூலாவிரணம், சர்வவிஷம், அரைகடி விஷம் நீங்கும்.

ஊமத்தைவிரை:--நரை, திரை, முதுமை நீங்கும்.

எ.

எருக்கம்பால்--தேள்விஷம், நாடிவிரணம், அளாகவிஷம் நீங்கும்.

எருக்கிலை--சர்வவிஷம் நீங்கும்.

எருக்கு (வேர்)--குஷ்டம், வாதம், கன்னரோகம், தந்தரோகம், அற்புதவிரணம், சிலிபத விரணம்,

உபதம்சக விரணம், முகநாசிக விரணம், மூஷிக விஷம் ஆகியவை நீங்கும்.

எருமைக்குளம்பு——காமாலை தீரும்.

எருமைக்கொம்பு, பல்——நேத்திரரோகம் நீங்கும்.

எருமைத்தயிர்——அதிக்குரு தீரும்.

எருமை மூத்திரம்——உதரவாதம் தீரும்.

எருமைமோர்——பாண்டு, காமாலை தீரும்.

எலுமிச்சம்பழச்சாறு——கன்னரோகம்; ஸ்லீபத விரணந் தீரும்.

எலுமிச்சம்பழம்——நேத்திரரோகந் தீரும்.

எவச்சாரம்——யோனிரோகந் தீரும்.

எள்ளு——மூலரோகம், தனவிப்புருதி, இரத்தகுன்மம், விசர்ப்பி, வாதசுரோணிதம், விரணம், வெங்கலாஞ்சியவிரணம், காமியவிரணம், நஷ்டவீரியம், நாடிவிரணம் ஆகியவை நீங்கும்.

எள்ளுச்செடிச்சாரம்——குணக்குநோய் தீரும்.

எள்ளுப்பூ——நேத்திரரோகம் நீங்கும்.

எள்ளுப்பொடி——காதமவிரணம் நீங்கும்.

எள்ளெண்ணெய்——யோனிரோகம், உருத்திரரோகம், அதிசாரம், மந்தாக்கினி, பிரமேகம், கெர்ப்பவிப்புருதி, குன்மம், வாதசூலை, மகோதரம், பித்தம், வாதம், அதிஸ்தூலம், கன்னரோகம், தந்தரோகம், சிரோரோகம், விரணம், பக்கநோய், தேள்விஷம் ஆகியவை நீங்கும்.

ஏ.

ஏரண்டத்தெண்ணெய்——(ஆமணக்கெண்ணெய் பார்க்க.)



ஏரண்டம்——(ஆமணக்கைப்பார்க்க)

ஏலம்——சுரசாதங் குரற்கம்மல், மூத்திரக்கிரிச்சரம், மேகக்கட்டி, சோமரோகம், சிம்மரோகம், சருவாசியரோகம், கண்டரோகம், சிரோரோகம், பலந்தரவிரணம், காமியவிரணம், கீட்டவிஷம், சிலந்திப்பூச்சி விஷம், நஷ்டவீரியம் ஆகியவை நீங்கும்.

ஒ.

ஒட்டனறு——இரத்தமூலம், குன்மம், குஷ்டம், கண்டரோகம், அற்புதவிரணம், சர்வவிஷம், மூஷிகவிஷம், அளர்க்கவிஷம் ஆகியவை தீரும்.

ஒட்டைப்பல்——தேள்விஷம் தீரும்.

ஒட்டைமூத்திரம்——உதரவாதந் தீரும்.

ஒதியம்பட்டை——விப்புருதி நீங்கும்.

ஓ.

ஓமம்——சீதபித்தம், தந்தரோகம், யோனிரோகம், அதிசாரம், மந்தாக்கினி தீரும்.

ஓரிதழ்த்தாமரை——நஷ்டவீரியம் தீரும்.

க.

கசப்புநிரா——கிருமிநோய் தீரும்.

கச்சோலம்——சிரோரோகம், நஷ்டவீரியம் நீங்கும்.

கஞ்சமலர்——(தாமரைப்பூவைப்பார்க்க)

கஞ்சா——நேத்திரரோகம், கன்னரோகம் நீங்கும்.

கஞ்சாங்கோரை——தேள்விஷம் தீரும்.

கந்தி——விரணம் நீங்கும்.

கடப்பம்பட்டை—அதிசாரம், மந்தாக்கினி தீரும்.
கடம்பைக்கொம்பு, பல்—நேத்திரரோகந் தீரும்.
கடலிஞ்சிப்பட்டை—பிரமேகந் தீரும்.
கடலையிலை—கண்டாலச்சிய விரணம் நீங்கும்.
கடல்நுரை—நேத்திரரோகம் தீரும்.
கடாய்க்குளம்பு—வெங்கலாஞ்சிய விரணந்தீரும்.
கடுந்தவிடத்தில் செருப்பாலடித்தல்—அனாகவிஷம் தீரும்.
கடு—(கடுக்காயைப்பார்க்க)
கடுகு—சீதபித்தம், சுகப்பிரசூதி, பாலக்கிரகம், பூதக்கிரகம், நாசிரோகம், விஷபதவிரணம் ஆகியவை நீங்கும்.
கடுகுரோகணி—விரணம் தீரும்.
கடுகெண்ணெய்—கன்னரோகம் நீங்கும்.
கடுக்காயெண்ணெய்—பங்கநோய் நீங்கும்.
கடுக்காய்—மூலம், உதரவாதம், அதிசாரம், மந்தாக்கினி, விப்புருதி, குன்மம், காமாலை, சோகை, கிருமிநோய், வாதசோணிதம், அதிஸ்தூலம், உன்மாதம், நாசிரோகம், சிரோரோகம், கண்டரோகம், விரணரோகம், சத்திவிரணம், அஸ்திபட்டவிரணம், மகாமூர்ச்சை, வெண்குஷ்டம், அர்ப்புதவிரணம், விஷபதவிரணம், காயவிரணம், நாபரவிஷங்கள், நஷ்டவீரியம், தேள்விஷம், அதரவேகம், கிருமிநோய், பாண்டு தீரும்.
கட்டிவிக்குதல்—விருத்தி நீங்கும்.
கண்டகாரி—(கண்டங்கத்திரியைப் பார்க்க)



கண்டங்கத்திரி—சர்வவிஷம், காசசுவாசம் குரற்கம்மல், குன்மம், இரத்தகுன்மம், வெண்குஷ்டம், விப்புருதி தீரும்.
கண்டங்காலி:—(கண்டங்கத்திரியைப்பார்க்க)
கண்டுபாரங்கி (சிறுதேக்கு)—காசசுவாசங்குரற்கம்மல் நீங்கும்.
கண்ணாஞ்சனமிடல்—கண்ணரோகம் நீங்கும்.
கதலிப்பழம் (வாழைப்பழம்)—[illegible] தீரும்.
கத்திரிலை—விசற்பி தீரும்.
கத்திரிவேர்—அழலைவிரணம் நீங்கும்.
கஸ்தூரி—சிரோரோகம் நீங்கும்.
கமுகு—நாடிவிரணம் தீரும்.
கம்பிப்பிசின்—மேகக்கட்டி நீங்கும்.
கரந்தை—குன்மம் நீங்கும்; கெர்ப்பவிப்புருதி தீரும்.
கரிகருமை (கரிசலாங்கண்ணி)—கரிசலாங்கண்ணியைப்பார்க்க.
கரிசலாங்கண்ணி—காசசுவாசங் குரற்கம்மல், காமாலை, மூலம், நாசிரோகம், சர்வவிஷம், சிரோரோகம், நரை, திரை, முதுமை தீரும்.
கரிசாலை—(கரிசலாங்கண்ணியைப் பார்க்க)
கரிசாலைச்சாற்றால் மூக்கில் நசியம்பண்ணால்—விருத்தி தீரும்.
கரித்திப்பிலி—(யானைத்திப்பிலியைப் பார்க்க)
கரியசாலை—(கரிசலாங்கண்ணியைப் பார்க்க)
கரியவேப்பிலை (கருவேப்பிலை)—பிரமேகம் தீரும்.
கரியிலைநீர்—மதமூர்ச்சை நீங்கும்.

கருங்காலி—அதிசாரம், மந்தாக்கினி, குஷ்டம், தந்தரோகம், நரை, திரை, மூதுமை, சிம்மரோகம், சர்வாசியரோகம் நீக்கும்.
கருங்காலிப்பிசின்—பிரமேகம், காமியவிரணந் தீரும்.
*கருஞ்சிவதை—உதரவாதம் தீரும்.
கருஞ்சீரகம்—குன்மம், நாசிரோகந் தீரும்.
கருணைக்கிழங்கு—மூலம் உபசிம்மக விரணம், விரணம், குன்மம் தீரும்.
கருத்த முந்திரிகை—அசுமரிரோகந் தீரும்.
கருநொச்சிப்பூ—பூதகிரகம் தீரும்.
கருந்துளசி—கிட்டகவிஷந் தீரும்.
கரும்பனைக்கந்தம்—(விலப்பனையைப் பார்க்க)
கரும்புச்சாறு—மூத்திரக்கிரிச்சரம், உன்மாதம், பித்தம் தீரும்.
கரும்போளம்—மேகக்கட்டி, கிருமிநோய் இவை தீரும்.
கருவேம்பு (கருவேப்பிலை)—கிராணி, மந்தாக்கினி, சுரசாதங் குரக்கம்மல், மூலம், குன்மம் தீரும்.
கருவேல்—நேத்திரரோகம், தந்தரோகம், சிம்மரோகம் தீரும்.
கருவேற்பிசின்:—பிரமேகந் தீரும்.
கர்க்கடசம் (நண்டு)—நஷ்டவீரியந் தீரும்.
கர்ப்பூர சிலாசத்து—அசுமரிரோகம், பிரமேகம், அதிஸ்தூலம், விப்புருதி, நரை, திரை, முதுமை தீரும்.
கர்ப்பூரத்தைலம்—தந்தரோகம் நீங்கும்.

* இது விஷதருமமுள்ளது.



கர்ப்பூரம்—பித்தநோய், [illegible]ரோகம், [illegible]ப்பட்ட விரணம் நீங்கும்.
கர்ப்பூரவல்லி—வருநி, [illegible] நீங்கும்.
கலைக்கொம்பு, பல்—நேத்திரரோகந் தீரும்.
கல்பூ—வாதசுரோணிதந் தீரும்.
கல்மதம்—மதமூர்ச்சை, [illegible]ரோகந் தீரும்.
கல்லால்—பித்தநோய் தீரும்.
கல்லுப்பு—கிராணி, மந்தாக்கினி, [illegible], கபப்பிரகுதி, நாடிவிரணந் தீரும்.
கவுதும்பை—மூத்திரக்கிரிச்சரம் தீரும்.
கழல்விரை:—நெற்பவிப்புருதி, குன்மம், வாதசூலை, கிருமிநோய், தேள்விஷம், வந்தியரோகம், வாதசுரோணிதம், நரை, திரை, முதுமை தீரும்.
கழுதை மூத்திரம்—உதரவாதம் தீரும்.
கழுநீர்—காதுவிரணந் தீரும்.
கள்ளி—குஷ்டம், கிருமிநோய், அற்புதவிரணந் தீரும்.
கள்ளிக்கரி—மகோதரம் தீரும்.
கள்ளிக்கொழுந்து—மூளைவிரணந் தீரும்.
கள்ளிப்பால்—கபப்பிரகுதி தீரும்.
கள்ளியின்றெளிவு—கபப்பிரகுதி தீரும்.
களி (மிளகு)—க்ஷயம் தீரும்.
கற்கண்டு—நஷ்டவீரியந் தீரும்.
கற்புரச்சிலை—(கர்ப்பூரசிலாசத்தைப் பார்க்க).
கற்றாழை—அதிக்குருதாரந் தீரும்; நேத்திரரோகம், விரணந் தீரும்; பித்தம், உபசிம்மகவிரணம், நரை, திரை, முதுமை, நீங்கும்; சிரோரோகந் தீரும்.

கன்மழை (ஆலங்கட்டி.)--சர்வவிஷந் தீரும்.
கன்னல்-(கரும்புச்சாறுபார்க்க)
கன்னி—(கற்றாழை)

கா.

காக்கட்டான்பட்டை--கடுந்தவிஷந் தீரும்.
காக்கணன் (காக்கரட்டான் வேர்)--சோகை தீரும்.
காக்கரட்டான் பூ—குஷ்டந் தீரும்.
காக்கைமூங்கில்--உதரவாதந் தீரும்.
காங்கைபேற்றல்--பொட்டக விரணந் தீரும்.
காஞ்சொறி (வேர்)--குஷ்டந் தீரும்.
காஞ்சொறிக்காய்--நாடிவிரணந் தீரும்.
காஞ்சொறிவித்து--நஷ்டவீரியந் தீரும்.
காடி--வாதசோணிதம், தேள்விஷம், விரணந் தீரும்.
காட்டாத்திப்பூ--தந்தரோகம், எருவாயிய ரோகந் தீரும்.
*காட்டாமணக்கு--குன்மம், நரை, திரை, முதுமை தீரும்.
காட்டுக்கருணை--மூலம், சர்வவிஷந் தீரும்.
காட்டுமல்லிகை--விரணந் தீரும்.
காட்டுவாகை (வேர்)--நாடிவிரணம், கீட்டகவிஷந் தீரும்.
காட்டுவாகையிலை--அளாகவிஷந் தீரும்.
காட்டுவாகைவித்து—மூஷிக விஷந் தீரும்.
காட்டெருமைக் குளம்பு--வெங்கலாருசிய விரணந் தீரும்.
காட்டெருமைக்கொம்பு, பல்—நேத்திரரோகந் தீரும்.
காட்டெருமைப்பால்--(கூயகதீர்)

* விஷத்துமருள்ளது.



காட்டெள்ளு--வெண்குஷ்டந் தீரும்.
காண்டாமிருகக்கொம்பு, பல்--நேத்திரரோகந் தீரும்.
காதுக்குறும்பி--நேத்திரரோகம், சர்வவிஷம், தேள்விஷந் தீரும்.
*காந்தம்--பிரமேகம், நரை, திரை, முதுமை தீரும்.
காயம்--(பெருங்காயத்தைப் பார்க்க)
காய்ச்சுப்பு—கிராணி, மந்தாக்கினி, நாடி விரணந் தீரும்.
காய்ந்த சுண்ணம் (தாளித்தசுண்ணாம்பு)--காதமவிரணந் தீரும்.
காரம்வைத்தல்--பவுத்திரவிரணம் நீங்கும்.
காரெள்—நரை, திரை, முதுமை தீரும்.
காரை (வேர்)--நரை, திரை, முதுமை தீரும்.
கார்புளி (புளிநறளை)--மூலந்தீரும்.
கார்போகரிசி--நரை, திரை, முதுமை, குஷ்டம், வெண்குஷ்டம், சர்வவிஷம், நஷ்டவீரியம், உடம்பின் மேகவிரணந் தீரும்.
கால் நகக்கணுவில் ஆணியால் கட்டிவித்தல்--விருதி தீரும்.
காவட்டம்புல்--பித்தநோய் நீங்கும்.
காவிக்கல்--நேத்திரரோகம், காமியவிரணம், தாபரவிஷங்கள், கீட்டகவிஷம் நீங்கும்.
காற்றுறியைக் காய்ச்சுதல்--விருதி நீங்கும்.
கானகமல்லி (காட்டுமல்லிகை)---வந்தியரோகம் நீங்கும்.

*இதன் செந்தூரம் பற்பமுறைகளெல்லாம் நமதுஞானபோக வைத்திய காவியத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

கானகத்தின் கொள்ளு (காட்டுக்கொள்ளு)--நேத்திரரோகம் நீங்கும்.

கி.

கிரந்தி (கிரந்திநாயகம்)—சிரோரோகம் நீங்கும்.
கிரந்திதகரம்--மேகக்கட்டி, வாதம், பித்தநோய், சிரோரோகம், தாபரவிஷங்கள், சர்வவிஷம், கீட்டகவிஷம் நீங்கும்.
கிராம்பு--(இலவங்கத்தைப் பார்க்க.)
கிளிமூக்கிலை--விசர்ப்பி நீங்கும்.

கீ.

கீரிப்பித்து—அபஸ்மாரம் நீங்கும்.
கீழ்காய்நெல்லி--அதிசாரம், மந்தாக்கினி, காமாலை, விசர்ப்பி, அதரநோய் நீங்கும்.

கு.

குக்கில்:--பிரமேகம், விப்புருதி, மேகக்கட்டி, வாதம், அதிஸ்தூலம், பூதகிரகம், கன்னரோகம், நாசிரோகம், அதரநோய், விரணம், நரை, திரை, மூதுமை நீங்கும்.
குங்கிலியம்—வாதம், பங்கநோய் நீங்கும்.
குங்குமப்பூ--சிரோரோகம் நீங்கும்; நேத்திரரோகம், நஷ்டவீரியம் தீரும்.
குங்குமம்—(குங்குமப்பூ பார்க்க)
குதிரைப்பித்து—அபஸ்மாரந் தீரும்
குதிரை மூத்திரம்--உதரவாதன் தீரும்.
குந்திரிக்கம்--மேகக்கட்டி நீங்கும்.
குப்பைமேனி—குன்மம், சர்வவிஷம், வாதம், தந்தரோகம் நீங்கும்.



குப்பைமேனிக் குடிநீர்--குன்மம் நீங்கும்.
குமரி—(கற்றாழையைப் பார்க்க)
குமரிமஞ்சள் (கஸ்தூரிமஞ்சள்)--தனவிப்புருதி நீங்கும்.
குமிழ்வேர்—குன்மம் தீரும்.
குருந்தக்கல்—யோனிரோகந் தீரும்.
குருவேர்:—சிரோரோகந் தீரும்.
குழம்புமோர்:—கிராணி, மந்தாக்கினி, மதமூர்ச்சை, மூலம், பிரமேகம், சோகை நீங்கும்.
குளத்தாக்கினிஞ்சி:—நேத்திரரோகம் நீங்கும்.
குளிநாவல்:--நரை, திரை, மூதுமை நீங்கும்.
குளிரிவேர்:—நஷ்டவீரியம் நீங்கும்.
குளிர்ந்தநீர்:—கெற்பிணி சுகம்.
குளிவேர்:--நேத்திரரோகம் நீங்கும்.
குளுத்திசெய்தல்:—பொட்டகவிரணம் நீங்கும்.
குன்றி (வேர்):--சர்வவிஷம் நீங்கும்.
குன்றிவித்து:--பிரமேகந் தீரும்.

கூ.

கூகைநீர்:—கிருமிநோய், உருத்திரரோகம், விப்புருதி, குன்மம், சிரோரோகம், சத்தியவிரணம், யோனிரோகம், நஷ்டவீரியம் நீங்கும்.
கூத்தன்குதம்பை:—நரை, திரை, மூதுமை நீங்கும்.

கெ.

*கெந்தகம்:—நேத்திரரோகம், கண்டரோகம், நரை, திரை, மூதுமை, குஷ்டம், நஷ்டவீரியம் நீங்கும்.

---

*இதன் யோகங்களை நமது அநுபோக வைத்திய நவநீதத்திற் பார்க்கவும்.

### கொ.

கொச்சை முந்திரிகை (கொட்டை முந்திரிகை):--விதாகநோய் தீரும்.

கொடிக்கழல்விதை:—அதிசாரம், மந்தாக்கினி நீங்கும்.

†கொடிக்கள்ளிப்பால்:—மகோதரம் தீரும்.

†கொடிவேலி:—கிராணி, மந்தாக்கினி, குன்மம், சுரசாதம் குரற்கம்மல், மூலம், விப்புருதி, கெற்பவிப்புருதி, இரத்தகுன்மம், வாதசூலை, மகோதரம், பாண்டு, சோகை, விசற்பி, குஷ்டம், கிருமிநோய், ஆவரணைபைத்தியம், அதிஸ்தூலம், நாசிரோகம், கண்டரோகம், சிரோரோகம், பவுந்தரவிரணம், மூளையிரணம், அற்புதவிரணம், தாபரவிஷங்கள், நரை, திரை, முதுமை நீங்கும்.

கொட்டைக்கரந்தை:--மூலம், நரை, திரை, முதுமை நீங்கும்.

கொத்துமல்லி:—க்ஷயரோகம், வாந்திநோய், விதாகநோய், சிலிபதவிரணம், கர்த்தமவிரணம், நஷ்டவீரியம் நீங்கும்

கொருக்கை:—உதரவாதம் நீங்கும்.

கொல்லங்கோவை:—(ஆகாசக்கருடன்)

கொள்ளின் குடிநீர்:—உதரவாதம், அஸ்மரிரோகம், வாதம் நீங்கும்.

கொள்ளு:--இரத்தகுன்மம், வசூரி, வாதம், அதிஸ்தூலம், நேத்திரரோகம், நாசிரோகம், அளாகவிஷம் நீங்கும்.

† இவை வேகமான மருந்துகள்.



கொள்ளுக்காய் (கொள்ளுக்காய்வேளை):--கன்னரோகம், கந்தரோகம் தீரும்.

கொன்றை (வேர்):—குஷ்டம், வெண்குஷ்டம், விரணம், அற்புதவிரணம், யோனிரோகம், இரத்தமூலம் நீங்கும்.

கொன்றைப்பட்டை:—பதுமகண்டகவிரணந் தீரும்.

கொன்றைப்பழம்:--கன்னரோகம் நீங்கும்.

### கோ.

கோசலம்:--(கோமயம்)

கோடகசாலையிலை:—விரணம் நீங்கும்.

கோஷ்டம்:--பிரமேகம், மேகக்கட்டி, காமாலை, விசற்பி, வாதம், வாதசோணிதம், சுகப்பிரகுதி, பாலக்கிரகம், பூதகிரகம், நேத்திரரோகம், சிம்மரோகம், சருவாசியரோகம், கண்டரோகம், சிரோரோகம், மூளையிரணம், வெங்கலாந்தியவிரணம், தாபரவிஷங்கள், சர்வவிஷம், கீட்டகவிஷம், நஷ்டவீரியம் ஆகியவை நீங்கும்.

கோதும்பை:--நஷ்டவீரியம் நீங்கும்.

கோதும்பை சக்களத்தி:—அதிஸ்தூலம், நஷ்டவீரியம் நீங்கும்

கோமயம்:--மூலம், கண்டரோகம், சிலிபதவிரணம், உதரவாதம், மகோதரம், பாண்டு, சோகை, அற்புதவிரணம், சருவாசியரோகம் நீங்கும்.

கோரைக்கந்தம்:—(கோரைக்கிழங்கு)

கோரைக்கிழங்கு:--யோனிரோகம், பிரமேகம், க்ஷயம், விசற்பி, கீட்டகவிஷம் நீங்கும்.

கோரோசனம்:—உன்மாதம் நீங்கும்.

கோவினீர்:—(கோமயம்)

கோவை (இலை):—பித்தநோய் நீங்கும்.

கோவைக்கிழங்கு:—பித்தநோய், பிரமேகம், கிருமிநோய், யோனிரோகம் தீரும்.

கோழியெச்சம்:—அரைகடி விஷம் நீங்கும்.

## ச.

சக்கரவர்த்திகீரை:—விசற்பி தீரும்.

சங்கங்குப்பி:—நரை, திரை, மூப்பு நீங்கும்.

சங்கம்வேர்:—சோகை நீங்கும்.

சங்கு:—நேத்திரரோகம் தீரும்.

சங்குப்பற்பம்:—மூளைவிரணம் நீங்கும்.

சடச்சி:—குஷ்டம் நீங்கும்.

சடாமாஞ்சில்:—உபசிம்மகவிரணம், க்ஷயரோகம், சிலந்திப்பூச்சி விரணம் நீங்கும்.

சடைக்கஞ்சா:—அதிசாரம், மந்தாக்கினி நீங்கும்.

சதகுப்பை:—வாதம், கன்னரோகம், சிரோகம் தீரும்.

சதாவரி:—(தண்ணீர்விட்டான்)

* சதுரக்கள்ளி:—உதரவாதன், குன்மம், வாதம், கன்னரோகம், விரணம், உபசிம்மகவிரணம் நீங்கும்.

சத்திச்சாரம்:—வாதசூலை, கிராணி, மந்தாக்கினி, குன்மம், மகோதரம் தீரும்.

சந்திரம்பன்னல்:—குணக்கநோய் தீரும்.

சந்தனத்தண்ணீர்:—விதாகநோய் தீரும்.

---

* இதுவேகமான மருந்து.



சந்தனம்:—வாந்திநோய், பித்தநோய், அனற்பட்ட விரணம், சிலந்திப்பூச்சி விரணம், நஷ்டவீரியம், மூத்திரக் கிரிச்சரம், சோமரோகம், காமாலை, விசற்பி, சீதபித்தம், குஷ்டம், கிருமிநோய், உன்மாதம், சருவாங்கரோகம், கண்டரோகம், சிரோரோகம், வெங்கலாஞ்சியவிரணம், தாபரவிஷம், கீட்டகவிஷம் நீங்கும்.

சம்பு:—(நாவலைப்பார்க்க)

சரளம் (அகில்):—வாதம் நீங்கும்.

சர்க்கரை:—அரோசிகம், வாந்திநோய், மதமூர்ச்சை, மூத்திரக்கிரிச்சரம், பித்தநோய், சிரோரோகம், யோனிரோகம், நஷ்டவீரியம் நீங்கும்.

## சா.

சாணப்பால்:—சிலந்திப்பூச்சி விரணந் தீரும்.

சாதிக்காய்:—அதிசாரம், மந்தாக்கினி, நேத்திரரோகம், சிரோரோகம், வெங்கலாஞ்சியவிரணம் நீங்கும்; வீரியம் நீங்கும்.

சாதித்துளிர்:—விரணம் நீங்கும்.

சாதிப்பத்திரி:—சருவாங்க ரோகம், வெங்கலாஞ்சிய விரணம் நீங்கும்.

சாரணை (இலை):—மூலரோகம், அசுமரிரோகம், விப்புருதி, குன்மம், இரத்தகுன்மம், வாதசூலை, குஷ்டம், வாதம், வந்தியரோகம், தந்தரோகம், மூளைவிரணம், அற்புத விரணம், தாபரவிஷங்கள், சர்வவிஷம், மூஷிகவிஷம், நரை, திரை, மூப்பு நீங்கும்; வீரியம் நீங்கும்.

சாரணைவேர்:--உருத்திரரோகம், கெற்ப விப்புருதி, சோகை, பவுந்தர நோய், உபசிம்மக் விரணம் நீங்கும்.

சாராயம்:--மதமூர்ச்சை நீங்கும்.

சி.

சிகைமயிர்:—(மயிலிறகு)

சித்திர மூலச்சாரம் (கொடிவேலிச்சாரம்):-குணக்க நோய் தீரும்.

சித்திரமூலம்:--(கொடிவேலி)

சிரட்டை (கொட்டங்கச்சி):--முகதாஷக விரணந் தீரும்.

சிரம்--(சிரகம் பார்க்க)

சிலாசத்து:--வாத சுரோணிதம், சிம்மரோகம், வீரியம் நீக்கும்.

சிவதை:--மூலரோகம், உதாவரதன், அசுமரி, மகோதரம், சோகை, பாலக்கிரகம், சிலிபதவிரணம், கீட்டகவிஷம் தீரும்.

சிவனார்கிழங்கு:--சுகப்பிரசூதி, மூளையிரணம், சிலிபதவிரணம், உபசிம்மக விரணம், நரை, திரை, முதுமை நீங்கும்.

சிவனார்மூலம்:--அற்புத விரணம், தேள்விஷந்தீரும்.

சிவன்திருமாசியம்:--பூதகிரகம், சர்வவிஷம் தீரும்.

சிறியதும்மட்டி:--(ஆற்றுத்தும்மட்டி அல்லது சிறுதும்மட்டி)

சிறியமூலம்:--(சிறுமூலம்)



சிறுகாஞ்சொறி:--மதமூர்ச்சை, அதிசாரம், மந்தாக்கினி, சத்தியாவிரணம் தீரும்.

சிறுகொம்மட்டி:--(சிறுதும்மட்டி)

சிறுக்கீரை:--மூத்திரக் கிரிச்சரம், காமாலை, பித்த நோய், உன்மாதம், நேத்திரரோகம், கண்டரோகம், தாபர விஷங்கள், சர்வவிஷம், கீட்டக விஷம், மூஷிகவிஷம், நரை, திரை, முதுமை நீங்கும்; வீரியம் நீக்கும்.

சிறுக்கீரைவேர்:—விரணம் தீரும்.

சிறுசாதியிலை-சருவாசியரோகம் தீரும்.

சிறுதந்திச்செடி:—மூளையிரணம் நீங்கும்.

சிறுதும்மட்டி:—இரத்தமூலம், குஷ்டம், உபசிம்மக விரணம், குன்மம், சர்வவிஷம் தீரும்.

சிறுநாணல்:-மூத்திரக்கிரிச்சரம், பித்தநோய் தீரும்.

சிறுநெருஞ்சிவித்து:—பிரமேகம் தீரும்.

சிருகொச்சில்:—சர்வவிஷம் தீரும்.

சிறுபயறு:—காமாலை தீரும்.

சிறுபற்றுநீர்:--பிரமேகம் தீரும்.

சிறுபூளை:--அசுமரி, நரை, திரை, முதுமை நீங்கும்.

சிறுமல்லி:—குன்மம், நரை, திரை முதுமை நீங்கும்.

சிறுமுட்டி(வேர்):—வாதம், உருத்திரரோகம், வாத சுரோணிதம், பாலக்கிரகம், நேத்திரரோகம், சிம்மரோகம், வந்தியரோகம் நீங்கும்.

சிறுமூலம்:—அரோசிகம், வந்தியரோகம், நேத்திரரோகம், நரை, திரை, முதுமை, கிராணி, மந்தாக்கினி, ஆவரண பயித்தியம் தீரும்.

சிறுவழுதலை வேர்:—குன்மம், இரத்தகுன்மம், சக்கரார்ப்புத விரணந்தீரும்.

சிற்றுமணக் கெண்ணெய்:—வாதம் தீரும்.

சிற்றுமுட்டி:—(சிறுமுட்டி)

சீ.

சீதளம்பழம்:—யோனிரோகம் நீங்கும்.

சீதளை:—தேள்விஷம் நீங்கும்.

சீதை (சீதாசெங்கழுநீர்):—பித்தநோய் நீங்கும்; வீரியம் நீங்கும்.

சீந்தியிலை:—சீதபித்தம், சிலிபதவிரணம் நீங்கும்.

சீந்தில் (கொடி):—சயரோகம், விதாகநோய், மூத்திரக்கிரிச்சரம், பிரமேகம், குன்மம், விசற்பி, பித்தநோய், வாதசுரோணிதம், ஆவரணபைத்தியம், சிரோரோகம், மூளைவிரணம், வன்மீகருத்தகுதம், தாபர விஷங்கள், சர்வவிஷம், மூஷிகவிஷம், நரை, திரை, முதுமை தீரும்; வீரியம் நீங்கும்.

சீந்திற்சத்து (சீந்திற் சர்க்கரை):—சோம ரோகம் தீரும்.

சீரகம்:—அரோசிகம், வாந்திநோய், அதிசாரம், மந்தாக்கினி, கிராணி, கெற்பவிப்புருதி, குன்மம், காமாலை, நாசிரோகம், சிம்மரோகம், சருவாசியரோகம், வெங்கலாஞ்சிய விரணம், கீட்டகவிஷம், சுரசாதங் குரற்கம்மல் தீரும்.

சீலமண்:—பங்கநோய் நீங்கும்.

சீனம் (படிக்காரம்):—நேத்திரரோகம் தீரும்.



சீனி:—விதாகநோய், பிரமேகம், சோமரோகம், நேத்திரரோகம், கீட்டகவிஷம், நரை, திரை, முதுமை தீரும்; வீரியம் நீங்கும்.

சு.

சுக்கு:—சுரசாதங் குரற்கம்மல், வாந்திநோய், உருந்திரரோகம், மூலரோகம், அதிசாரம், மந்தாக்கினி, மேகக்கட்டி, குன்மம், மகோதரம், காமாலை, ஆவரண பைத்தியம், நாசிரோகம், தந்தரோகம், சிம்மரோகம், கண்டரோகம், சிலிபத விரணம், உபசிம்மக விரணம், தாபரவிஷங்கள், நரை, திரை, முதுமை, நஷ்டவீரியம் தீரும்.

சுக்குமிளகு திப்பிலி இவைகளால் அஞ்சன மிடல்:—விசூசி தீரும்.

சுட்டசுண்ணாம்பு:—அளாக விஷந்தீரும்.

சுட்டபுளி:—காதம விரணந்தீரும்.

சுட்டிகையிடல்:—சன்னிரோகந் தீரும்.

சுண்ணாப்பழங்காரை நீர்:—விரணம் நீங்கும்.

சுத்தலோகப் பொடி:—சோகை நீங்கும்.

சுரோதாஞ்சனம்:—நேத்திர ரோகந் தீரும்.

சூ.

சூதம்:—(இரசத்தைப் பார்க்கவும்)

சூரியகாந்தச்செடி:—சுகப்பிரசூதி, மூத்திரக்கிரிச்சரம், விரணம் தீரும்.

சே.

செங்கரும்பு:—விதாகநோய் தீரும்.

செங்கழுநீர்:—விசற்பி தீரும்.

செங்குன்றி:—மூஷிகவிஷம் தீரும்.

செஞ்சந்தனம்:—விசற்பி, சிலந்திப்பூச்சி விரணம் தீரும்.

செந்நெய்தல்:—நஷ்டவீரியந் தீரும்.

செந்நெருஞ்சி:—சத்திபாவிரணம், சர்வவிஷம் தீரும்.

செம்பருத்தி (இலை)—வெண்குஷ்டம் நீங்கும்.

செம்பருத்திப்பூ—அனற்பட்ட விரணம் நீங்கும்.

*செம்பு—நேத்திரரோகந் தீரும்.

செம்பைப்பட்டை:—தாபரவிஷங்கள் தீரும்.

செம்மறியாட்டுப்பால்:—கண்டாலச்சிய விரணம் நீங்கும்.

செருப்படி:—(செருப்படை)

செருப்படை:—கிருமிநோய், பூதகிரகம், வசூரி, குஷ்டம், நேத்திரரோகம், கண்டாலச்சிய விரணம், நகதந்தவிஷம், நரை, திரை, மூதுமை நீங்கும்.

செவியம்:—(செவ்வியம்)

செவ்வகத்திவிரை:—வெண்குஷ்டந் தீரும்.

செவ்வியம்:—வாதசூலை, நாசிரோகம், சுரசாதங்குரற்கம்மல், அரோசிகம் கிராணி, மந்தாக்கினி, குன்மம், ஆவரணைபைத்தியம், கண்டரோகம், தாபரவிஷங்கள் நீங்கும்.

செவ்வீராஞ்சனம்:—நேத்திரரோகந் தீரும்.

---

* செம்பு—தாம்பிரம்; இதன் யோகமுறைகள் நமது அநுபோக வைத்திய நவநீதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.



சே.

சேங்கொட்டை:—வன்குஷ்டம், கிருமிநோய், மூலரோகம், பிரமேகம், குஷ்டம், மூளையிரணம், அற்புதவிரணம், நரை, திரை, மூதுமை நீங்கும்.

சேராங்கொட்டை:—(சேங்கொட்டை)

த.

தகரம்:—(கிரந்தி தகரம்)

தகரைவிதை:—குஷ்டம், கிருமிநோய், கீடகவிஷம், தேள்விஷம், நரை, திரை, மூதுமை தீரும்.

தக்கோலம்—கிராணி, மந்தாக்கினி, சருவாசியரோகந் தீரும்.

†தசமூலம்:—உருத்திரரோகம், சோகை, வாதம், வாதசுரோணிதந் தீரும்.

தண்ணீர்முட்டான்:—காமாலை, விதாகநோய், மூத்திரக்கிரிச்சரம், அசுமரி, சேர்மரோகம், வந்தியரோகம், உன்மாதம், அபஸ்மாரம் நீங்கும்

தந்திசெடி:—வல்மீகருத்தகுதந் தீரும்.

தலையமூந்தச் சொறிதல்:—சன்னைரோகந் தீரும்.

தலையோடு:—நேத்திரரோகம் நீங்கும்.

தவசிமுருங்கை:—விப்புருதி நீங்கும்.

தழுதாழை:—குன்மம், வாதம், நாசிரோகம் நீங்கும்.

தா.

தாணி:—(தான்றியைப்பார்க்க)

தாமரைக்கந்தம்:—சிரோரோகம், மதமூர்ச்சை, சோமரோகம், விசற்பியாகிய விழற்பாகம் நீங்கும்.

---

† வாகைவேர், முல்லைவேர், பாதிரிவேர், நெருஞ்சிவேர், பேராமுட்டிவேர், வில்வவேர், சிற்றாமுட்டிவேர், சிறுவழுதுணைவேர், கண்டங்கத்திரிவேர், குமிழ்வேர்.

தாமரைப்பூ:—பித்தம், இரத்தமூலம், நஷ்டவீரியம் நீங்கும்.

தாமரை வளையம்:—மூலம் தீரும்.

தாமரைவித்து:—பிரமேகந் தீரும்.

தாயைக்கொன்றான் பூண்டு—சர்வவிஷந் தீரும்.

தாரம்:—(அரிதாரம்)

தாழமூளை:—(தாழைவிழுது)

தாழி—வந்தியரோகம், வெண்குஷ்டம், மூஷிகவிஷம், மூளையிரணந் தீரும்.

தாழைவிழுதுச்சாறு:— வாதசுரோணிதம், விரணம் தீரும்.

தாளகம்:—(அரிதாரம்)

தாளிசப்பத்திரி:—அரோசிகம், வாந்திநோய், சுகப்பிரசூதி, நாசிரோகம், கண்டரோகம் தீரும்.

தாளிப்பனங் காய்த்தண்டு:—சர்வவிஷம் நீங்கும்.

தாளீசம்:—(தாளிசப்பத்திரி)

தான்றிக்காய்:—மூலம், குன்மம், மகோதரம், பாண்டு, உன்மாதம், நாசிரோகம், அதரநோய், விரணம், விப்புருதி, வெண்குஷ்டம், மதமூர்ச்சை, காமிய விரணம், சிலந்திப்பூச்சி விரணம் நீங்கும்.

தி.

திக்திப்புத்திரவியம்:—கெற்பிணிசுகம்.

திப்பிலி (அரிசித்திப்பிலி):—சுரசாதங் குரற்கம்மல், மதமூர்ச்சை, மூலம், அதிசாரம், மந்தாக்கினி, வாதசூலை, மகோதரம், கிருமிநோய், ஆவாணபைத்தியம், நாசிரோகம், சிம்மரோகம், கண்டரோகம், பவுந்தர விரணம், வெங்கலாஞ்சிய விரணம், தாபர விஷங்கள், நஷ்டவீரியந் தீரும்.



திப்பிலிமூலம்:—சுரசாதங் குரற்கம்மல், வாதசூலை, நாசிரோகம், கண்டரோகம் தீரும்.

*திரிகடுகு:—அரோசிகம், சன்னசரோகம், கிராணி, மந்தாக்கினி, வாதசூலை, பாண்டு, அபஸ்மாரம், நேத்திரரோகம், கன்னரோகம், சருவாசியரோகம், சிரோரோகம், அற்புத விரணம், சர்வவிஷம், கீட்டகவிஷம், தேள் விஷம் தீரும்.

†திரிசாதீகம் (திரிசாதம்):—அரோசிகந்தீரும்.

‡திரிபலை:—பிரமேகம், குஷ்டம், அபஸ்மாரம், நேத்திரரோகம், சருவாசியரோகம், சிரோரோகம், பவுந்தர விரணம், சர்வவிஷம், நரை, திரை, முதுமை தீரும்.

திரிபுரத்தான்:— இரத்தமூலம் நீங்கும்; குஷ்டந் தீரும்.

§தில்லை:—மகோதரம், உதாவரதன், அதிசாரம், மந்தாக்கினி தீரும்.

து.

துத்தநாகம்:-இரத்தமூலம், நேத்திர ரோகம் தீரும்.

துத்தம்:—நேத்திரரோகம், காமியவிரணந் தீரும்.

---

* சுக்கு, மிளகு, திப்பிலி.

† இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, நாகேசரம்.

‡ கடுக்காய், தான்றிக்காய், நெல்லி முள்ளி.

§ விஷதரும முள்ளது.

துத்திவிதை:—பிரமேகந் தீரும்.

தும்பிதேனீ இவற்றைக் கடிக்கச்செய்தல்:—சன்னசரோகந் தீரும்.

தும்பிலிப்பழம்:—சர்வவிஷம், நஷ்டவீரியந்தீரும்.

துராய்:—மூத்திரக்கிரிச்சரம், கண்டரோகம், அரோசிகம், வகூரி, பித்தநோய் தீரும்.

துருக:—நேத்திரரோகம், சருவாசியரோகம், விரணம், மூளைவிரணம், காமியவிரணந் தீரும்.

துவரையிலை.—தந்தரோகந் தீரும்.

துழாய்:—(துளசியைப் பார்க்க)

துளசி:—விசற்பி, கன்னரோகம், நாசிரோகம், சிம்மரோகம், சருவாசியரோகம், சர்வவிஷம், வாதசுரோணிதந் தீரும்.

தூ.

தூதுவளை:—சர்வவிஷம், மூஷிகவிஷம், நஷ்டவீரியம், அரோசிகம் தீரும்.

தெ.

தெற்பை:—மூத்திரக்கிரிச்சரம், பித்தநோய், ரக்தத்தவிஷந் தீரும்.

தென்னம்பாளை:—கிருமிநோய் தீரும்.

தென்னம்பூ:—அதிசாரம், மந்தாக்கினி, பிரமேகம், விசற்பி தீரும்

தே.

தேங்காயெண்ணெய்:—பிரமேகம், கரதமவிரணம், யோனிரோகந் தீரும்.

தேங்காய்ப்பால்:—பித்தநோய், நஷ்டவீரியந் தீரும்.

தேமிச்சாறு:—(எலுமிச்சம்பழச்சாறு)



தேவதாரம்:—வாதசுரோணிதம், மேகக்கட்டி, உருத்திரரோகம், குன்மம், சோகை, வாதம், பாலக்கிரகம், நாசிரோகம், அதரநோய், கண்டரோகம், சிலிபதவிரணம், உபசிம்மகவிரணம், அசக்கன்னிபாதிரணம், மூஷிகவிஷம், நரை, திரை, மூதுமை தீரும்.

தேவதாரிச்சக்கை:—(தேவதாரி)

தேள்கடை:—(தேள்கொடுக்கு)

தேள்கொடுக்கு:—யோனிரோகம், தேள்விஷந் தீரும்.

தேற்றான் கொட்டை:—மூத்திரக்கிரிச்சரம், சோமரோகம், பிரமேகம், நேத்திரரோகம் தீரும்.

தேன்:—அதிஸ்தூலம், சயரோகம், சுரசாதங்குரற்கம்மல், வாந்திநோய், விதாகநோய், அதிசாரம், மந்தாக்கினி, பிரமேகம், நேத்திரரோகம், அதரநோய், சிம்மரோகம், சருவாசியரோகம், கண்டரோகம், விரணம், சத்தியவிரணம், பதுமகண்டகவிரணம், வெங்கலாஞ்சியவிரணம், காமியவிரணம், தாபரவிஷங்கள், நரை, திரை, மூதுமை, நஷ்டவீரியம், பாண்டு, சர்வவிஷம் தீரும்.

தோ.

தோடை:—(ஆடாதோடை)

ந.

நகங்களில் ஊசியேற்றல்:—சன்னசரோகந் தீரும்.

நசியம்பண்ணல்:—சன்னசரோகந் தீரும்.

நன்டுவளைமண்:—காமியவிரணந் தீரும்.

நந்தியாவட்டம்:--நேத்திரரோகம், சத்தியாவிரணம் தீரும்.

நரம்பிற் சத்திரம் பண்ணல்:--வன்மீகருத்தகுதந் தீரும்.

நரிப்பித்து:--அபஸ்மாரம் தீரும்.

நவச்சாரம்:—கிராணி, மந்தாக்கினி தீரும்.

நவரத்தினம்:—நேத்திரரோகம் தீரும்.

நன்னாரி:--தனவிப்புருதி, விதாகநோய், மதமூர்ச்சை, விசற்பி, பித்தநோய், அபஸ்மாரம், சிரோரோகம், விரணம், கீட்டகவிஷம், சிலந்திப்பூச்சிவிரணம், நஷ்டவீரியந் தீரும்.

நா.

நாகசெந்தூரம்:--பிரமேகந் தீரும்.

நாகணம்:--மேகக்கட்டி, மகோதரம், சோகை, வந்தியரோகம், நேத்திரரோகம், முகதூஷகவிரணந் தீரும்.

நாகத்துளிர்:—(நாவற்றுளிர்)

நாகப்பூ:--(நாவற்பூ)

நாகமல்லிகைவேர்:--சயரோகம் தீரும்.

நாகம்:--மூலவிரணம் தீரும்.

நாகேசுரம்:—கீட்டகவிஷம், நேத்திரரோகம், சருவாசியரோகம், நஷ்டவீரியந் தீரும்.

நாணல்:—வெங்கலாஞ்சியவிரணம், வாதசுரோணிதம், வல்மீகருத்தகுதம், சர்வவிஷம், நகதந்த விஷம் தீரும்.



நாபி:—தேள் விஷந்தீரும்.

நாயுருவி:—கெற்பவிப்புருதி, இரத்தமூலம், நாசிரோகம், அனற்பட்ட விரணம், நாடிவிரணம், சிலந்திப்பூச்சி விஷம் தீரும்.

நாரத்தம் பழம்:—குன்மம் தீரும்.

நாவல்:—குஷ்டம், பாலக்கிரகம், சருவாசியரோகம், மதமூர்ச்சை, பித்தம் தீரும்.

நாவற்பட்டை:—விப்புருதி, அதிசாரம், மந்தாக்கினி, பிரமேகம் தீரும்.

நாவற்பூ:--சிரோரோகம், தேள் விஷம் தீரும்.

நாவற்றுளிர்:--வாந்தி, அதிசாரம், மந்தாக்கினி தீரும்.

நி.

நிம்பம்:—(வேம்பு)

நிம்பிலை:—வேப்பிலை.

நிலக்கடம்பு:—பூதகிரகந் தீரும்.

நிலக்குமிழ்:--பித்தநோய், வாதசுரோணிதம், அதிக்குருசரம், நஷ்டவீரியந் தீரும்.

நிலக்குமிழ்வேர்:--க்ஷயரோகம், விதாகநோய், விரணந் தீரும்.

நிலக்குரா:--நரை, திரை, முதுமை தீரும்.

நிலப்பனை:--சர்வவிஷம், குஷ்டம், நரை, திரை, முதுமை, நஷ்டவீரியந் தீரும்.

நிலப்பனைக்கந்தம் (நிலப்பனைக்கிழங்கு):—சோமரோகம், பிரமேகம், நரை, திரை, முதுமை தீரும்.

நிலப்பூசனிக்கிழங்கு:—நஷ்டவீரியம், சக்கராற்புத விரணந்தீரும்.

நிலவேம்பு:—விதாகநோய், சத்தியா விரணம் தீரும்.

நிலையாவரை:—பிரமேகந் தீரும்.

நீ.

நீலிலந்தைக் கொட்டை:—விரணம் நீங்கும்.

நீரில் உப்பைக்கரைத்துக்குடித்தல்—விக்குநீங்கும்.

நீருள்ளி:—சத்தியா விரணம், இரத்தமூலம், கன்னரோகந் தீரும்; அனற்பட்ட விரணம், சர்வவிஷம் தீரும்.

நீருள்ளிச்சாறு:—உன்மாதந் தீரும்.

நீர்:—நேத்திர ரோகம் தீரும்.

நீர்ப்பூலா:—அதிசாரம், மந்தாக்கினி, அசுமரி நீங்கும்.

நீர்முட்டான்:—க்ஷயரோகம், விசற்பி, அதிக்குருசரம், நரை, திரை, முதுமை, நஷ்டவீரியம் நீங்கும்.

நீர்முள்ளி:—மூத்திரக்கிரிச்சரம், சோகை, வாதசுரோணிதம், மூஷிகவிரணம் தீரும்.

நீர்முள்ளிவித்து:—அதிசாரம், மந்தாக்கினி, பிரமேகம், நஷ்டவீரியம் தீரும்.

நீர்வேர்:—(அவுரிவேரைப் பார்க்கவும்)

நெ.

நெய்:—உத்திரரோகம், மதமூர்ச்சை, அதிசாரம், மந்தாக்கினி, காமாலை, வசூரி, சீதபித்த பித்தரோகம், அதிக்குருசரம், கெற்பிணிசுகம், பாலகிரகம், பூதகிரகம், அபஸ்மாரம், நேத்திரரோகம், விர



ணம், சத்தியா விரணம், அனற்பட்ட விரணம், காமியவிரணம், தாபர விஷங்கள், கீட்டகவிஷம், சிலந்திப்பூச்சி விஷம், தேள் விஷம், நரை, திரை, முதுமை, நஷ்டவீரியம் தீரும். கெற்பிணி முண்டாம்.

நெய்ச்சட்டி:—அனற்பட்ட விரணந் தீரும்.

நெய்தல்:—நேத்திரரோகம் நீங்கும்.

நெய்தல் (சிவப்பு):—பித்தநோய், தீரும்.

நெய்தற்கிழங்கு:—விசற்பி, தீரும்.

நெருஞ்சில்:—மூத்திரக்கிரிச்சரம், நரை, திரை, முதுமை, நஷ்டவீரியந் தீரும்.

நெருஞ்சில் (சிவப்பு):—வாதசுரோணிந் தீரும்.

நெருஞ்சில்வேர்:—சோமரோகம், குன்மம், தீரும்.

நெருஞ்சிற்காய்:—மோனிரோகந் தீரும்.

நெல்:—நஷ்டவீரியம், நீங்கும்.

நெல்லி:—விப்புருதி, விதாகநோய், மதமூர்ச்சை, மூத்திரக்கிரிச்சரம், சோமரோகம், குன்மம், பாண்டு, காமாலை, வசூரி, வெண்குஷ்டம், பித்தநோய், நாசிரோகம், அதரநோய், விரணம் பங்கநோய், கரதமவிரணம், வெங்கலரஞ்சிய விரணம், நஷ்டவீரியம் தீரும்.

நெல்லிக்காய:—மூலம், மகோதரம், காமியவிரணம் தீரும்.

நெல்லிமுத்து:—உன்மாதம் நீங்கும்.

நெற்பொரி:—விதாகநோய், மதமூர்ச்சை, அதிசாரம் மந்தாக்கினி, நீங்கும்.

நே.

*நேர்வாளம்:—மூலம், உதரவாதன் மகோதரம், சோகை தீரும்.

நோ.

நொச்சில்:—குன்மரோகம், வாதசூலை, கிருமிநோய், வாதம், கன்னரோகம், நாசிரோகம், அதரநோய், சிம்மரோகம், உபசிம்மக விரணம், மூஷிகவிரணம், நரை, திரை, மூதுமை, தீரும்.

நொய்யரிசி:—விரணந் தீரும்.

ப.

பங்கம்பாளை:—நரை, திரை, மூதுமை தீரும்.

பங்கம்பாளை யிலை:—அரைகடி விஷந் தீரும்.

பங்கம்பாளையின் சாம்பல்:—வெங்கலாஞ்சிய விரணந் தீரும்.

பசுநெய்:—க்ஷயரோகம், மூத்திரக்கிரிச்சரம், தனவிப்புருதி, விசர்ப்பி, சிம்மரோகம், பங்கநோய், யோனிரோகம், சர்வவிஷந் தீரும்.

பசுமுதலியவைகளின் சாணம்:—தேள்விஷம் நீங்கும்.

பசும்பயறு:—பித்தநோய் நீங்கும்.

பசுவின்குளம்பு சுட்டகரி:—உபசிம்மகவிரணந்தீரும்.

பசுவின்கொம்பு:—பாலக்கிரகம், நேத்திரரோகம் நீங்கும்.

பசுவின்கொம்பு சுட்டகரி:—உபசிம்மகவிரணந்தீரும்.

பசுவின் தயிர்:—அதிசாரம் நீங்கும்.

பசுவின்பல்:—நேத்திரரோகம் நீங்கும்.

---

*விஷதருமமுள்ளது.



பசுவின்பால்:—மூத்திரக்கிரிச்சரம், குன்மம், மகோதரம், வந்தியரோகம், யோனிரோகந் தீரும்; கெற்பிணி சுகமுண்டாகும்.

பசுவின்பித்து:—அபஸ்மாரந் தீரும்.

பசுவின்வால்மயிர்:—பாலக்கிரகம் நீங்கும்.

பசுவெண்ணெய்:—க்ஷயரோகம், இரத்தமூலம்நீங்கும்.

பச்சரிசிக்கழுநீர்:—மதமூர்ச்சை, உன்மாதம் நீங்கும்.

பக்ஷிகளிறகு:—அபஸ்மாரம் நீங்கும்.

பக்ஷிகளினெச்சம்:—தேள்விஷம் நீங்கும்.

பக்ஷிமாமிசங்கள்:—கெற்பிணிசுகம்.

பச்சைக்கற்பூரம்—விதாகநோய், மதமூர்ச்சை, நேத்திரரோகம், சருவாசியரோகம் நீங்கும்.

பச்சைப்பயற்று நீர்:—விதாக நோய் நீங்கும்.

பச்சைப்பாக்கு:—அசுமரிரோகம் நீங்கும்.

பஞ்சரகம்:—சர்வவிஷம், நகதந்தவிஷம் நீங்கும்.

*பஞ்சகவ்வியம்:—அபஸ்மாரம் நீங்கும்.

$பஞ்சகோலம்:—சோகை, யோனிரோகம் நீங்கும்.

0பஞ்சலவணம்:—உருத்திர ரோகம், குன்மம், வாதசூலை, மகோதரம், அற்புதவிரணம் நீங்கும்.

பண்ணை:—சுரசாதங் குரற்கம்மல், சர்வவிஷம் நீங்கும்.

---

* பசுவினபால், தயிர், நெய், கோமியம, சாணம்

$ சுக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம்

0 வளையலுப்பு, கல்லுப்பு, மாவுப்பு, அமுரியுப்பு, அட்டுப்பு.

பாட்டை:--கிருமிநோய், நாடிவிரணம் நீங்கும்.

பருங்கிரந்தி:—வாதம் நீங்கும்.

பருத்தியிலை:--விரணம் நீங்கும்.

பருத்திபிஞ்சுகாய்:--கன்னரோகம் நீங்கும்.

பருத்திவித்து:--பிரமேகம், வாதம், பாலக்கிரகம், நீங்கும்,

பலகறை:--நேத்திரரோகம், நீங்கும்

பலகறைப்பற்பம்:--கன்னரோகம், நீங்கும்.

பலவகை மிருகங்களின் லத்தி:-தேள்விஷம் நீங்கும்.

பலாசம்பட்டை:--பிரமேகம், நீங்கும்,

பலாசம்பிசின்:--பிரமேகம் நீங்கும்.

பழங்காகக்கட்டி:--விரணம் தீரும்.

பழம்புளி:--நேத்திரரோகம், தீரும்.

பழவெல்லம்:--விரணம், நீங்கும்-

பழுபாகல்:--மூலம், சர்வவிஷம், நீங்கும்.

பழையகாடி:--கரதமவிரணம் நீங்கும்:

பளிங்கு:--நேத்திரரோகம் நீங்கும்.

பற்படாகம்:--கிராணி, மந்தாக்கினி, விதாதநோய், கெற்பவிப்புருதி, நீங்கும்.

பனம் பூச்சாம்பல்:--குன்மம், மகோதரம் நீங்கும்.

பனைக்கந்தம் (பனங்கிழங்கு):--சோமரோகம் தீரும்.

பனைமட்டை:--நேத்திரரோகம் தீரும்.

பன்றிக்கொம்பு, பல்:--நேத்திரரோகம் தீரும்,

பா.

பாகல்:--கிருமிநோய் நீங்கும்.

பாதல்சாறு:--சர்வவிஷம் நீங்கும்.



பாண்டப்புத்தோடு:--காமியவிரணம் நீங்கும்.

பாதிரிவேர்:--குன்மம், மகோதரம் நீங்கும்.

பாம்பின்றோல்:--சுகப்பிரசூதி.

பாலை:-க்ஷயரோகம், அசுமரிரோகம், பிரமேகம், பித்தநோய், ஆவரண பைத்தியம், அதிக்குருசரம், பாலக்கிரகம், நேத்திரரோகம், சருவாசியரோகம், சர்வவிஷம், நரை, திரை, முதுமை, நஷ்டவீரியம் நீங்கும்.

பாலைத்துளிர்:--வெங்கலாஞ்சிய விரணம் நீங்கும்.

பாலைப்பட்டை:--மேகக்கட்டி விசற்பி, சிம்மரோகம், விரணம், அனற்பட்ட விரணம், வெங்கிலாஞ்சிய விரணம், கீட்டகவிஷம், சிலந்திப்பூச்சி விரணம், அதிசாரம், மந்தாக்கினி, நீங்கும்.

பாலையிலை:--அனற்பட்ட விரணம் நீங்கும்.

பால்:---வாந்திநோய், விதாகநோய், மதமூர்ச்சை காமாலை, பித்தநோய், அதிக்குருசரம், விரணம், சத்தியவிரணம், அனற்பட்ட விரணம், வெங்கலாஞ்சிய விரணம், மூளைவிரணம், நரை, திரை, முதுமை, நஷ்டவீரியம், அதிசாரம், மந்தாக்கினி தீரும்.

பாவட்டை:--இரத்தமூலம், கெற்பவிப்புருதி, சோரகுஷ்டம், உபசிம்மக விரணம், பவுந்தர விரணம், மூஷிகவிஷம் நீங்கும்.

பாவட்டையிலை:--விரணந் தீரும்.

பி.

பிச்சிப்பூ:--பித்தநோய், வெங்கலாஞ்சிய விரணம் நீங்கும்.

*பித்தளை:--நேத்திரரோகம் நீங்கும்.
பிரண்டை:--மூலம், கெற்பவிப்புருதி, சர்விஷம் நீங்கும்.
பிரண்டைவேர்:--கிருமிநோய் நீங்கும்.
பிரமி:--சோகை, அபஸ்மாரம், நேத்திரரோகம், நரை, திரை, முறுமை தீரும்.
பிராய்:--நஷ்டவீரியம் நீங்கும்.
பிராயன்பட்டை:--நகதந்தவிஷம் நீங்கும்.

பீ.

பீதரோகணி:--நேத்திரரோகம் நீங்கும்.
பீர்க்கு:--மூஷிகவிஷந் தீரும்.

பு.

புகைகாட்டல்:—பூதகிரகம் நீங்கும்.
புகைப்போடுதல்:--சன்னைசரோகந் தீரும்.
புஞ்கஞ்சாறு:--சர்வவிஷம் நீங்கும்.
புங்கம்வேர்,--தனவிப்புருதி, இரத்தகுன்மம நீங்கும்.
புங்கு:-கிராணி, மந்தாக்கினி, மூலம், விப்புருதி, குன்மம், குஷ்டம், வாதம், பித்தநோய், விரணம், மூலையிரணம், அற்புதவிரணம், தேள்விஷம், மூஷிகவிஷம் நீங்கும்.
புங்குவித்து:-அபஸ்மாரம், நேத்திரரோகம், காசரோகம் தீரும்.
புஜபத்திரம்:--பாலக்கிரகம், தீரும்.
புடல்:--காமாலை, குஷ்டம் தீரும்.
புஷ்பாஞ்சனம்:--நேத்திரரோகந் தீரும்.

---

* இதன் முறைகள் நமது அநுபோகவைத்திய சுவதந்திற் சொல்லப்பட்டிருக்கிறது.



புறப்பாண்டத்திறெடு:—பங்கநோய் நீங்கும். வாந்தி தீரும்.
புத்தரசுவிதை:—நேத்திரரோகம், சர்வவிஷம் தீரும்.
புரசம்பிசின்:--தேள்விஷந் தீரும்.
புரசம்வித்து:--கிருமிநோய் தீரும்.
புரசு:--வாதசூலை, தேள்விஷம், நரை, திரை, முதுமை தீரும்.
புரசம்பட்டை:--பாலகிரகந் தீரும்.
புளிச்சதை:—உன்மாதம் நீங்கும்.
புளி:—குன்மம், மகோதரம், விரணம், உபசிம்மவிரணம் தீரும்.
புளிப்பு மாதளை:—வந்தியரோகந் தீரும்.
புளியந் துளிர்:—சர்வவிஷம் நீங்கும்.
புளியம்புறணி:—அதிசாரம், மந்தாக்கினி தீரும்.
புளியம்புறணிச்சாம்பல்:—கும்மம், மகோதரம் நீங்கும்.
புளியம்பூச்சாறு:--நேத்திரரோகந் தீரும்.
புளியம்வேர்:--அதிசாரம், மந்தாக்கினி தீரும்.
புளியாரை:—கிராணி, குன்மம், மகோதரம், வந்தியரோகம், விரணந் தீரும்.
புளியிலை:--விரணந் தீரும்.
புளிவிதைத்தோல்:--பங்கநோய் தீரும்.
புளிவித்து:—அதிசாரந் தீரும்.
புருவெச்சம்:--தேள்விஷந் தீரும்.
புற்றுமண்:—வன்மீகருத்தகுதம் தீரும்.
புனலி:—நாடிவிரணந் தீரும்.

## பூ.

பூசனி:—மூத்திரக்கிரிச்சரம், பித்தநோய் தீரும்.

பூசணிக்காய்:—க்ஷயரோகம், மூர்ச்சை, அதிக்குருசரம் உன்மாதம், அபஸ்மாரந் தீரும்.

பூசம்நீறு (விபூதி):—காமியவிரணந் தீரும்.

பூமிசர்க்கரைக்கிழங்கு:—பித்தநோய் தீரும்.

பூலா:—அதிசாரம், மந்தாக்கினி, நேத்திரரோகம், நரை, திரை, முதுமை தீரும்

பூவரசம்பூ:—பிரமேகந் தீரும்.

பூவரசு:—விசற்பி நீங்கும்.

பூனைப்பித்து:—அபஸ்மாரந் தீரும்.

பூனையெலும்பு:—பவுந்தரவிரணம், மூஷிகவிஷம் தீரும்.

## பெ.

பெருங்காயம்:—கிராணி, மந்தாக்கினி, உருத்திரரோகம், உதரவாதன், கெற்பவிப்புருதி, குன்மம், மகோதரம், இரத்தகுன்மம், வாதசூலை, கிருமிநோய், வாதம், பூதகிரகம், தந்தரோகம், சிரோரோகம், சிவிபதவிரணம், சத்வவிஷம், கீட்டகவிஷம், யோனிரோகம், தேள்விஷம், வாதசூலை தீரும்.

பெருங்கிரந்தி:—மேகக்கட்டி தீரும்.

பெருங்கோரைக்கந்தம் (பெருங்கோரைக்கிழங்கு):—சிரோரோகம் தீரும்.

பெருஞ்சிவிரி:—இரத்தமூலந் தீரும்.

பெருஞ்செங்குன்றி:—வசூரி தீரும்.



பெருநன்னாரி:—விசற்பி தீரும்.

பெருநாணல்:—பித்தநோய் தீரும்.

பெருந்துளசி:—கீட்டகவிஷம் தீரும்.

பெருமரப்பட்டை (சசுரமூலி):—அதிசாரம், மந்தாக்கினி தீரும்.

பெருமல்லி:—குன்மந் தீரும்.

பெருவாகை:—குஷ்டம், சர்வவிஷம், தேள்விஷம், நகதந்தவிஷந் தீரும்.

பெருவாகையிலை:—தாபரவிஷங்கள் தீரும்.

## பே.

பேயத்தி:—குஷ்டம், மூளையிரணந் தீரும்.

பேயத்திப்பட்டை:—பிரமேகந் தீரும்.

பேயத்திப்பால்:—நேத்திரரோகந் தீரும்.

பேயத்திப்புல்லுருவி:—வந்தியரோகந் தீரும்.

பேய்ச்சுரை:—சர்வவிஷந் தீரும்.

பேய்ப்பீர்க்கு:—இரத்தமூலம், சோகை, குஷ்டம், தாபரவிஷங்கள், சர்வவிஷம், மூஷிகவிஷந் தீரும்.

பேய்ப்பீர்க்கு வித்து:—உபசிம்மகவிரணந் தீரும்.

பேய்ப்புடல்:—விதாகநோய், விப்புருதி, வசூரி, பித்தநோய், சிம்மரோகம், சாதமவிரணம், தாபரவிஷங்கள் தீரும்.

பேய்மிரட்டி:—பூதகிரகந் தீரும்.

பேராமுட்டி:—பிரமேகம், வாதம் நீங்கும்.

பேராமுட்டிசுட்ட பற்பம்:—நேத்திரரோகந் தீரும்.

பேரீந்து:—க்ஷயரோகம், விதாகநோய், மதமூர்ச்சை, அதிசாரம், மந்தாக்கினி, பித்தநோய் தீரும்.

பேரீந்துப்பழம்:—நஷ்டவீரியந் தீரும்.

போ.

பொடுதலை:—சிம்மரோகந் தீரும்.

பொடுதலைக்காய்:—கிராணி, மந்தாக்கினி தீரும்.

பொட்டுப்பு:—கிராணி தீரும்.

பொரி:—வாந்திநோய் தீரும்.

பொரிமா:—வாந்திநோய், விதாகநோய் தீரும்.

பொன்:—நேத்திரரோகம், தாபரவிஷங்கள், நரை, திரை, முதுமை, நஷ்டவீரியந் தீரும்.

பொன்முசுட்டை:—சிலந்திப்பூச்சி விரணந் தீரும்.

பொன்னாங்காணி:—மூத்திரக்கிரிச்சரம், பிரமேகம், மகோதரம், நேத்திரரோகம், அனற்பட்டவிரணந் தீரும்.

பொன்னாவாரை:—மதமூர்ச்சை, வெண்குஷ்டந் தீரும்.

போ.

போளம்:—மேகக்கட்டி, பங்கநோய் தீரும்.

ம.

மகிழம்பழம்:—நஷ்டவீரியம் நீங்கும்.

மகிழம்பூ:—மூத்திரக்கிரிச்சரம் நீங்கும்.

மகிழம்வித்து:—தந்தரோகம், சர்வவிஷம் நீங்கும்.

மஞ்சட்டி:—சிரோரோகம், விரணம், நாடி விரணம், வெங்கலாஞ்சிய விரணம், கிட்டவிஷம், மூஷிகவிஷம் நீங்கும்.

மஞ்சளிலை:—சர்வவிஷந் தீரும்.



மஞ்சள்:—மேகக்கட்டி, சோகை, வசூரி, குஷ்டம், வாதசுரோணிதம், பாலக்கிரகம், பூதகிரகம், நேத்திரரோகம், கன்னரோகம், நாசிரோகம், அதரரோகம், தந்தரோகம், சிம்மரோகம், கண்டரோகம், சிரோரோகம், விரணம், அற்புத விரணம், வெங்கலாஞ்சியவிரணம், யோனிரோகம், தேள்விஷம், மூஷிகவிஷம், அளர்கவிஷம், நரை, திரை, முதுமை நீங்கும்.

மணலி:—மூத்திரக்கிரிச்சரம் நீங்கும்.

மணித்தக்காளி:—சுரசாதங் குரற்கம்மல், குஷ்டம், சிம்மரோகம், சர்வவிஷம், நரை, திரை, முதுமை நீங்கும்.

மணிப்புங்கு:—உதரவாதம், விப்புருதி, வசூரி, அசக்கள்ளியாதிரணம் நீங்கும்.

மணிப்புங்குவித்து:—மகோதரம், சோகை, குஷ்டந் தீரும்.

*மண்டூரம்:—பிரமேகம், பாண்டு தீரும்.

மதுரம்:—(அதிமதுரம்)

மத்தம்:—(ஊமத்தை)

மயிர்:—அனற்பட்டவிரணந் தீரும்.

மயிர்மாணிக்கம்:—சயரோகந் தீரும்.

மயிலடி:—காமாலை தீரும்.

மயிலடிமரம்:—இரத்தமூலந் தீரும்.

மயிலிறகு:—இரத்தமூலம், பூதகிரகம், சத்தியாவிரணந் தீரும்.

---

*இதன் முறைகள் மேலு அநுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

மயிலெச்சம்:—அளாகவிஷந் தீரும்.

மயூரசிகி:—சர்வவிஷந் தீரும்.

மரமஞ்சள்:—உருத்திரரோகம், மூத்திரக்கிரிச்சரம், குஷ்டம், நேத்திரரோகம், சிம்மரோகம், சருவாசியரோகம், கண்டரோகம், சிரோரோகம், விரணம், சிலிபதவிரணம், யோனிரோகம், மூஷிகவிஷம், நஷ்டவீரியந் தீரும்.

மரல்:—மூலரோகம் தீரும்.

மருக்காரை:—குஷ்டம், கன்னரோகம், கண்டரோகம், நாடிவிரணம், சர்வவிஷம் நீங்கும்.

மருக்காரைக்காய்:—நேத்திரரோகம் தீரும்.

மருக்கொழுந்து:—மூஷிகவிஷம் தீரும்.

மருதணி (மருதோன்றி):—நரை, திரை, முதுமை தீரும்.

மருதம்பட்டை:—பிரமேகம், வெண்குஷ்டம், வெங்கலாஞ்சிய விரணம், தந்தரோகம் தீரும்.

மருதாணிப்பட்டை (மருதோன்றிப்பட்டை):—நனவிப்புருதி நீங்கும்.

மருதாணியிலை (மருதோன்றியிலை):—நன விப்புருதி நீங்கும்.

மருதாரை:—சிலிபத விரணம் தீரும்.

மருது:—பங்கநோய் தீரும்.

மருதோன்றி:—வாதம் தீரும்.

மருள்:—கன்னரோகம், தாபரவிஷங்கள், சர்வவிஷம், நரை, திரை, முதுமை தீரும்.

மலைவேப்பம்பிசின்:—மேகக்கட்டி தீரும்.

மனிதர்மூத்திரம்:—உதாவாதம் தீரும்.



*மனோசிலை:—குஷ்டம், நேத்திரரோகம், சிம்மரோகம், அசக்கன்னியாதிரணம், வெங்கலாஞ்சிய விரணம், காமியவிரணம், சிலந்திப்பூச்சி விரணம், நரை, திரை, முதுமை தீரும்.

### மா.

மாக்கல்:—நாடிவிரணம் தீரும்.

மாங்காய்:—சருவாசியரோகம் தீரும்.

மாஞ்சில்:—(சடாமாஞ்சில்)

மாட்சிகம்:—(தேன்)

மாதளை:—வந்தியரோகம் தீரும்.

மாதுலங்கம் (துருஞ்சி நாரத்தை):—அரோசிகம், வாந்தி, சன்னசரோகம் நீங்கும்.

மாதுளங்காய்:—அதிசாரம், மந்தாக்கினி நீங்கும்.

மாதுளம்பழம்:—வாந்தி, விதாகநோய், மதமூர்ச்சை, குன்மம், பித்தநோய் நீங்கும்.

மாலதின்செடி (விஷ்ணுகிரந்தி):—காமிய விரணம் நீங்கும்.

மால்கிராந்தி (விஷ்ணுகிரந்தி):—சிம்மரோகம் தீரும்.

மாவிலிங்கப்பட்டை:—அசுமரி, குன்மம் தீரும்.

மாவிலிங்கை:—விப்புருதி, வாதம், நரை, திரை, முதுமை தீரும்.

மாவிலிங்கையிலை:—யோனிரோகம் தீரும்.

மான்கொம்பு:—காமாலை, நேத்திரரோகம் தீரும்.

மான்பல்:—நேத்திரரோகம் தீரும்.

---

* இதன் முறைகள் நமது அனுபோக வைத்திய நவநீதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

## மி.

மிளகு:—சுரசாதங் குரற்கம்மல், மூலம், உன்மாதம், சிம்மரோகம், கண்டரோகம், விரணம், பங்க நோய், யோனிரோகம், தாபர விஷங்கள் தீரும்.

மிளகுத்தூள்:—சீதபித்தம் தீரும்.

## மு.

முக்காவேளை:—கிராணி, மந்தாக்கினி, நரை, திரை, முதுமை தீரும்.

முசுட்டையிலைவித்து:—பிரமேகம் நஷ்டவீரியம் தீரும்.

முசுமுசுக்கை:—பித்தநோய், ஆசாரணைபத்தியம் தீரும்.

முசுறுமுட்டை:—உன்மாதம் தீரும்.

முடக்கொத்தான்:—கெற்பவிப்புருதி, மூஷிகவிஷம், நரை, திரை முதுமை தீரும்.

முடக்கொத்தான்வித்து:—நஷ்டவீரியம் தீரும்.

முதியார் கூந்தல்:—அசுமரி, வாதம் தீரும்.

முத்தக்காசு:—(கோரைக்கிழங்கு)

முத்தம் (முத்து):—வாந்திநோய், விதாகநோய், மதமூர்ச்சை, அதிசாரம், மந்தாக்கினி, பாண்டு, காமாலை, வசூரி, குஷ்டம், கிருமிநோய், பித்தநோய், உன்மாதம், சருவாசியரோகம், சிரோரோகம், தாபரவிஷங்கள், நரை, திரை, முதுமை தீரும்.

முத்துச்சிப்பி:—மூலைவிரணம் தீரும்.

முந்திரி:—மூத்திரக்கிரிச்சரம் தீரும்.



முந்திரிகைக்கனி:—(திராக்ஷைப்பழம்) சுரசாதங்குரற்கம்மல், மதமூர்ச்சை, சோமரோகம், பித்தநோய், பங்கநோய், தாபர விஷங்கள், சயரோகம், உன்மாதம், காமியவிரணம், நஷ்டவீரியம் தீரும்.

முயலிரத்தம்:—வெங்கலாஞ்சிய விரணம் தீரும்.

முருங்கை:—நேத்திரரோகம், கன்னரோகம் தீரும்.

முருங்கைப்பட்டை:—பிரமேகம், அசுமரி தீரும்.

முருங்கைப்பிஞ்சு:—நஷ்டவீரியம் தீரும்

முருங்கைப்பூ:—பித்தநோய், நஷ்டவீரியம் தீரும்.

முருங்கையிலை:—நஷ்டவீரியம் தீரும்.

முருங்கைவித்து:—உபசிம்மக விரணம் தீரும்.

முருங்கைவேர்:—விப்புருதி, மூளைவிரணம், அற்புத விரணம், சிலிபதவிரணம் தீரும்.

முலைப்பால்:—மதமூர்ச்சை, உன்மாதம், நேத்திரரோகம், சிரோரோகம், மூஷிகவிஷம் தீரும்.

முள்முருக்கிலை:—இரத்தகுன்மம் தீரும்

முள்முருக்குப்பட்டை:—இரத்த குன்மம், நரை, திரை, முதுமை தீரும்.

முள்முருக்கு:—மூளைவிரணம் தீரும்.

முள்ளங்கிவித்து:—உபசிம்மக விரணம் தீரும்.

முள்ளாங்கி (முள்ளங்கி):—சுரசாதங் குரற்கம்மல், குன்மம், கன்னரோகம், நாசிரோகம், கீட விஷம் தீரும்.

முள்ளி:—மூலரோகம் தீரும்.

## மூ.

மூக்குரட்டை:—உருத்திரரோகம், கிராணி, மந்தாக்கினி, விப்புருதி, இரத்தகுன்மம், வாதசூலை, கிருமிநோய், தாபரவிஷங்கள், சர்வவிஷம் தீரும்.

மூக்குரட்டைவேர்:--அசுமரி, குன்மம் நீங்கும்.
மூங்கிலிலை:--பிரமேகம் தீரும்.
மூங்கில்விரை:--குஷ்டம் தீரும்.
மூங்கிற்குருத்து:-- கிருமிநோய், வாதசுரோணிதம் தீரும்.
மூங்கிற்புறணி:--பங்கநோய் தீரும்.

மெ.

மெருகு:--மூலரோகம் தீரும்.
மெழுக்கு:--அதரரோகம், விரணம், அனற்பட்ட விரணம் தீரும்.

மே.

மேனி:--(குப்பை மேனியைப்பார்க்க)

மை.

மைச்சாட்சி:--(குங்கிலேப்பார்க்க)

மோ.

மோதம்:--(ஓடம்.)
மோர்த்தெளிநீர்:--மதமூர்ச்சை தீரும்.

ய.

யவச்சாரம்:--மூலரோகம், கிராணி, மந்தாக்கினி, அசுமரி, குன்மம், இரத்தகுன்மம், வாதசூலை, மகோதரம், சோகை, கிருமிநோய், அதிஸ்தூலம், சிம்மரோகம், சருவாசியரோகம், கண்டரோகம், கீடகவிஷம் தீரும்.

யா.

யானைக்கொம்பு:--பூதகிரகம், நேத்திரரோகம் தீரும்.
யானைத்திப்பிலி:--சுரசாதங் குரற்கம்மல், நாசிரோகம் தீரும்.



யானைநெருஞ்சி:--மூத்திரக்கிரிச்சரம் தீரும்.
யானைப்பல்:--நேத்திரரோகம் தீரும்.
யானைப்பித்து:--அபஸ்மாரம் தீரும்.
யானைமூத்திரம்:--உதாவரதன் தீரும்.

வ.

*வங்கபற்பம்:--மூத்திரக்கிரிச்சரம் தீரும்.
*வங்கம்:--தாபர விஷங்கள், நஷ்டவீரியம், சாதம விரணம் தீரும்.
வசம்பிலை:--சுரசாதங் குரற்கம்மல் தீரும்.
வசம்பு:-கிராணி, மந்தாக்கினி, கெற்பவிப்புருதி, குன்மம், விசர்ப்பி, குஷ்டம், கிருமிநோய், பாலக்கிரகம், பூதகிரகம், நேத்திரரோகம், கன்னரோகம், மூலையிரணம், அற்புதவிரணம், சிலிபதவிரணம், முகதூஷகவிரணம், யோனிரோகம், தாபரவிஷங்கள், சர்வவிஷம், கீடகவிஷம், நரை, திரை, முதுமை தீரும்.
வச்சிரப்பாலைவிதை:--சர்வவிஷம் தீரும்.
வச்சிரப்பால் (வச்சிரப்பாலைப்பால்):--நாடிவிரணம், தேள்விஷம் தீரும்.
வடித்தசாதம்:--வெங்கலாஞ்சிய விரணம் தீரும்.
வட்டக்கிலுகிலுப்பை:--உதரவாதன், சோகை, குஷ்டம் தீரும்.
வட்டக்கிலுகிலுப்பைச் செடி:--மகோதரம் தீரும்.
வட்டத்திருப்பி:--அதிசாரம், மந்தாக்கினி, யோனிரோகம், தாபர விஷங்கள், சர்வவிஷம் கீடகவிஷம் தீரும்.

---

* இதன் முறைகள் நமது அநுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

வட்டத்திருப்பிவேர்:—பிரமேகம் தீரும்.

வரப்பின்முள்ளி:—வாதசுரோணிதம், உபசிம்மக விரணம் தீரும்.

வரிக்கடுக்காய்:—மகோதரம் தீரும்.

வலம் புரிக்காய்:—நேத்திரரோகம் தீரும்.

வல்லாரை:—உன்மாதம், அபஸ்மாரம், நாசிரோகம், நரை, திரை முறுமை தீரும்.

வல்லாரையிலை:—வகுரி தீரும்.

வழுதலம் பழம்:—பூதக்கிரகம் தீரும்.

வழுதலை:—வாத சுரோணிதம், விப்புருதி தீரும்.

வழுதலைவேர்:—சுரசாதங் குரற்கம்மல், சிலிபத விரணம் தீரும்.

வழுவைக்கீரை:—அறற்பட்ட விரணம் தீரும்.

வள்ளி:—விசற்பி தீரும்.

வள்ளிக்கிழங்கு:—நஷ்டவீரியம் தீரும்.

வறட்சுண்டி:—அதிசாரம், மந்தாக்கினி, அசுமரி தீரும்.

வறட்பூலா:—நேத்திரரோகம் தீரும்.

வறுத்தஉப்பு:—பங்கநோய் தீரும்.

வனமல்லி:—குஷ்டம் தீரும்.

வனமுருக்கு:—குன்மம் தீரும்.

வனமுருக்கின்றோற் சாம்பல்:—இரத்த குன்மம்தீரும்.

வன்னி:—உபசிம்மக விரணம், வெங்கலாஞ்சிய விரணம் தீரும்.

வன்னிப்பட்டை:—நகதந்தவிஷம் தீரும்.



வன்னிளந்தும்பியின்காய்:—அதிசாரம், மந்தாக்கினி தீரும்.

வா.

வாகைப்பிசின்:—பிரமேகந் தீரும்.

வாந்தி செய்வித்தல்:—விருழ்பி தீரும்.

வாய்த்தம்பலம்:—அரைகடிவிஷம் தீரும்.

வாய்விளங்கம்:—பாண்டு, குஷ்டம் கிருமிநோய், அதிஸ்தூலம், நாசிரோகம், சிரோரோகம், பவுந்தர விரணம், கீட்டகவிஷம், நரை, திரை, முறுமை, தாபர விஷங்கள், சர்வவிஷம் தீரும்.

வாலுளுவை:—குன்மம், குஷ்டம், நேத்திரரோகம், கண்டரோகம், நரை, திரை, முறுமை தீரும்.

வாழை:—அதிசாரம், மந்தாக்கினி, நரை, திரை, முறுமை தீரும்.

வாழைக்கிழங்கு:—சோமரோகம், மூலவிரணம் தீரும்.

வாழைப்பழம்:—நஷ்டவீரியம், சோமரோகம் தீரும்.

வி.

விடத்தேரிலை:—அதிசாரம், மந்தாக்கினி தீரும்.

விடத்தேரின் பிசின்:—பிரமேகம் தீரும்.

விபூதி:—வகுரி, சீதபித்தம் தீரும்.

விரையாவரை:—பவுந்தர விரணம் தீரும்.

விலாமிச்சைவேர்:—விதாகநோய், சோமரோகம், விப்புருதி, விசற்பி, குஷ்டம், மதமூர்ச்சை, மேகக்

கட்டி, சீதபித்தம், பித்தநோய், சிரோரோகம் தீரும்.

வில்வ இளங்காய்:—அதிசாரம், மந்தாக்கினி தீரும்.

வில்வம்:—வாந்தி, குன்மம் தீரும்.

விழுதி:—வாதசுரோணிதம் நீங்கும்.

விழுதியிலை:—அசுமரி, விப்புருதி, சோகை நீங்கும்.

விளக்கெண்ணெய்:—உதரவாதன், அசுமரி, கெர்ப்ப விப்புருதி, வாதசூலை, மகோதரம், வாதம், விரணம், மூலவிரணம், சிலிபதவிரணம், குன்மம் தீரும்.

விளங்கம்:—(வாய்விளங்கம்)

விளா:—பாலக்கிரகம் தீரும்.

விளாங்கனி:—வாந்தி தீரும்.

விளாம்பட்டை:—பிரமேகம் தீரும்.

விளாம்பிசின்:—அசுமரி, பிரமேகம், மூலவிகவிரணம் தீரும்.

வீ.

*வீரம்:—காமியவிரணந் தீரும்.

வீழி:—கெர்ப்பவிப்புருதி, குஷ்டம், வாதம் தீரும்.

வெ.

வெங்காரம்:—இரத்தமூலம், கிராணி, மந்தாக்கினி, அசுமரி, சர்வவிஷந் தீரும்.

* இது விஷத்தன்மையுள்ளது. இதன் முறைகள் நமது அநுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.



வெட்டிவேர்:—மதமூர்ச்சை, அதிசாரம், மந்தாக்கினி, அசுமரி, மேகக்கட்டி, சோமரோகம், விப்புருதி, விசர்ப்பி, கண்டரோகம், அனற்பட்டவிரணம், நகதந்தவிஷந் தீரும்.

வெட்பாலை:—இரத்தமூலம், கண்டரோகம், அனற்பட்டவிரணந் தீரும்.

வெட்பாலைப்பட்டை:—அதிசாரம், மந்தாக்கினி தீரும்.

வெட்பாலைப்பருப்பு:—அதிசாரம், மந்தாக்கினி, சீதபித்தம், சிலிபதவிரணந் தீரும்.

வெட்பூலா:—வந்தியரோகந் தீரும்.

வெண்கருப்பஞ்சாறு:—நஷ்டவீரியந் தீரும்.

†வெண்கலம்:—நேத்திரரோகம், விரணந் தீரும்.

‡வெண்காரம்:—நேத்திரரோகந்தீரும்.

வெண்குங்கிலியத்தைலம் பூசல்:—குளக்கநோய்தீரும்.

வெண்குங்கிலியம்:—அதிசாரம், மந்தாக்கினி, நரை, திரை, மூப்பை தீரும்.

வெண்ணெய்:—வெண்குஷ்டம், நேத்திரரோகம், நஷ்டவீரியம் தீரும்; கெர்ப்பிணி சுகமாம்.

† இதன் முறைகளும் நமது அநுபோக வைத்தியத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

‡ இதன் முறைகளும் நமது அநுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

வெண்ணெய்த்தக்கிழங்கு:—சிரோரோகந் தீரும்.

வெந்நீர்:—அனற்பட்டவிரணந் தீரும்.

வெல்லம்:—அரோசிகம், மூலரோகம், மூளையிரணம், வெங்கலாஞ்சியவிரணம், சர்வவிஷந் தீரும்.

வெள்வேல்:—சிம்மரோகந் தீரும்.

வெள்வேற்பிசின்:—பிரமேகந் தீரும்.

வெள்ளரி:—மூத்திரக்கிரிச்சரம், பித்தநோய், வர்தசுரோணிதம் தீரும்.

வெள்ளறுகு:—மூத்திரக்கிரிச்சரம், சோகை, விசர்ப்பி, முகதூஷகவிரணம், சர்வவிஷம், நஷ்டவீரியந் தீரும்.

வெள்ளறுகுவித்து:—அதிசாரம், மந்தாக்கினி தீரும்.

வெள்ளாட்டுக்குழம்புமோர்:—காமாலை தீரும்.

வெள்ளாட்டுச்சாணம்:—சோகை தீரும்.

வெள்ளாட்டுத்தயிர்:—அதிசாரம், மந்தாக்கினி தீரும்.

வெள்ளாட்டுநீர்:—சோகை, கன்னரோகந் தீரும்

வெள்ளாட்டுப்பால்:—க்ஷயரோகம், வெங்கலாஞ்சிய விரணந் தீரும்.

வெள்ளாட்டுமோர்:—பாண்டு தீரும்.

*வெள்ளி:—நேத்திரரோகம், தாபரவிஷங்கள் தீரும்.

வெள்ளிலோத்திரம்:—வெங்கலாஞ்சிய விரணந் தீரும்.

* இதன் முறைகளும் நமது அநுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.



§ வெள்ளியம்:—மேகக்கட்டி தீரும்.

வெள்ளுள்ளி:—உதாவர்த்தன், இரத்தகுன்மம், சோஷை, கிருமிநோய், ஆவரண பைத்தியந் தீரும்.

வெள்ளைக்காக்கணான்:—மகோதரம், தேள்விஷம், வெண்குஷ்டம், மூளையிரணம், சர்வவிஷம், நஷ்டவீரியம், உதாவர்த்தன், நேத்திரரோகம், நரை, திரை, முதுமை தீரும்.

வெள்ளைக்காக்கணம்பூ:—அபஸ்மாரந் தீரும்.

வெள்ளைக்குங்கிலியம்:—பாலக்கிரகம், அதரநோய், சத்திபாவிரணந் தீரும்.

வெள்ளைச்சாரணை:—தாபரவிஷங்கள், நேத்திரரோகந் தீரும்.

† வெள்ளைப்பாஷாணம்:—காமியவிரணந் தீரும்.

வெள்ளைவசம்பு:—வந்தியரோகந் தீரும்.

## வே.

வேங்கை:—குஷ்டம், கண்டரோகம், அதிஸ்தூலந் தீரும்.

வேங்கைப்பட்டை:—அதிசாரம், மந்தாக்கினி தீ[illegible].

வேப்பம்பட்டை:—தனவிப்புருதி, விரணம், ப[illegible] கண்டக விரணந் தீரும்.

§ இதன் முறைகளும் நமது அநுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

† விஷ தருமமுள்ளது; இதன் முறைகள் நமது அநுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

வேப்பம்பருப்பு:—கிருமிநோய் தீரும்.

வேப்பம்பிசின்:—பிரமேகந் தீரும்.

வேப்பம்பூ:—அரோசிகம் தீரும்.

வேப்பம்வேர்:—வகுரி, காதமவிரணம் தீரும்.

வேப்பிலை:—வகுரி, கிருமிநோய், நகசுந்தவிஷம், பாலக்கிரகம், பூதகிரகம், அதரநோய் தீரும்.

வேப்பெண்ணெய்:—வாதம், கன்னரோகம் தீரும்.

வேம்பாடம்:—விரணம் தீரும்.

வேம்பு:—மூத்திரக்கிரிச்சரம், விப்புருதி, குன்மம், னெங்கலாந்திய விரணம், வகுரி, குஷ்டம், பித்தநோய், பூதகிரகம், சிம்மரோகம், சருவாசியரோகம், நரை, திரை, முதுமை தீரும்.

வேம்பொட்டறை:—நாடிவிரணம் தீரும்.

வேல்:—சருவாசிய ரோகம் தீரும்.

வேளை:—கிராணி, மந்தாக்கினி, குன்மம், மைதருணமேகாதாரம், சோகை, வெண் குஷ்டம், நேத்திர ரோகம், உதரவாதன், தந்தரோகம் தீரும்.

வேளைவேர்:—யோனிரோகம் தீரும்.

அட்டவணை அகராதி
முற்றுப் பெற்றது.

---

## சதகசுலோக மென்னும் வைத்திய சதகத்தின் அநுபந்தம்.

நாம்முன் முகவுரையிற் சொல்லியிருப்பதுபோல் மேற்கண்ட நூலில் இன்னின்ன வியாதிக்கு இன்னின்ன சரக்கெனச் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர அவற்றை உபயோகிக்கும் முறைகள் விவரமாகச் சொல்லப்படவில்லை; வைத்திய சாஸ்திரத்தில் நிபுணர்களாகிய பண்டிதர்களுக்கு இவைகளை உபயோகிக்கும் முறை விவரங்கள் தெரிந்திருக்கும், ஆனால், சாதாரணமானவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உபயோகப்படும்படியாக, இந்நூலின் சுற்றியிருக்கிற பாட்டிற்கண்ட சில முறைகளின் பொது விதிகளையும் வேறு பல பொது விதிகளையும், சொல்லுவாம்; புத்திமான்கள் இவற்றை ஆழ்ந்த கருத்துடன் பலமுறை வாசித்துச் சமயோசிதம்போல் உபயோகித்துச் சுகமடைவார்களென நம்புகின்றோம்.

### பொது விதிகள்.

தனிச்சரக்காயிருந்தாலும், பல சரக்குகளாயிருந்தாலும் வியாதிகளுக்காக அவற்றை முக்கியமாய்க் கீழ்க்காணும் சிலவகைகளாக அநுபவமுடையோர் உபயோகித்து வந்திருக்கின்றார்கள் அவையாவன:-

### 1. சுரசம்.

இதன் அருத்தம்:—சு—நல்ல, இரசம்—சாறு; சுரசம்—மதுரச்சாறு. அச்சாறுகளாவன:-கரும்புச்

சாறு, தித்திப்புக் கனிவர்க்கங்களின் சாறு, அதிமதுரச்சாறு இவைபோன்றவைகளாம். ஆனால் வைத்திய பரிபாஷையில் வேர், இலை முதலியவைகளைப் பச்சையாகக் கொண்டுவந்து அந்தந்த இனத்திற்குத் தக்கபடி கசக்கியும், நசுக்கியும், இடித்தும், வதக்கியும், ஆலை முதலிய கருவிகளில் ஆட்டியும் அந்தந்த பதார்த்தத்திற்குத் தகுந்தபடியும் அந்தந்தப் பதார்த்தத்தின் அளவிற்குத் தகுந்தபடியும் எடுத்த தனிரசத்துக்குச் சுரசமென்றும் சுயரசக் கஷாயமென்றும் பெயர். வேர், இலை முதலியவைகளை நையச்சிதைத்து அதற்கிரண்டுபங்கு ஜலத்தில் ஒருநாள் ஊறவைத்து எடுத்து வடிகட்டிக் கொள்வதற்கும் சுரசமென்று பெயர்; இதற்கு சீதோதகக் கஷாய மென்றும் பெயர்; இது உத்தமமாம்; இப்படிச் செய்யக்கூடாத காலங்களில். 12-மணிநேரம் ஊறவைத்துப் பிழிந்தெடுத்துக் கொள்ளலாம்; உலர்ந்தபட்டை, வேர் முதலியவைகளை நையச்சிதைத்து அதற்கு நான்குபங்கெடை தண்ணீரில் அல்லது எட்டுப்பங்கு தண்ணீரில் ஒருநாள் ஊறவைத்து வடிகட்டிப் பிழிந்தெடுத்துக் கொள்வதும் சுரசமாம்; இதற்கு சீதோதக ஊறற் கஷாயமென்றும் பெயர்.

இதன் பிரமாணம்:—வாலிபருக்குச் சாதாரண மூலிகைகள், சரக்குகளானால் அரைப்பலமுதல் முக்கால் பலம் வரையிலாம். பாலர்களுக்கு மேற்கண்ட அளவில் பதினாறில் ஒருபாகமாம்.

ஆனால் ஊமத்தை, கொடிவேலி முதலியவை போன்ற விஷகர்மமுள்ளவைகளும் தீக்ஷணிய முள்



ளவைகளுமானால் மேற்கண்ட அளவு கொடுக்கலாகாது. அந்தந்தச் சரக்கின்வேகத்திற்குத் தக்கபடி அளவைக்குறைத்து உபயோகிக்கவேண்டும். அவரவர்களின் தேக சுபாவத்தையும் கவனித்துச்செய்ய வேண்டியது.

இந்தச் சுரசத்துடன் அந்தந்த வியாதிக்குத் தகுந்தபடி தேன், சர்க்கரை, வெல்லம், க்ஷாரங்கள், சீரகம், லவணம், நெய், எண்ணெய், சூரணங்கள் முதலியவைகளைச் சேர்த்துக் கொடுக்கவேண்டியதிருந்தால் ஒரு வராகனெடை சேர்த்து உபயோகிக்கலாம். அந்தந்த வியாதிகளில் பல சரக்குகள் சொல்லப்பட்டிருப்பதால் வியாதிக்குத் தகுந்தபடியும் சமயோசிதம் போலவும் இஷ்டமான சரக்கை மேல்பொடியாகவும் அநுபானமாகவும் உபயோகித்துக் கொள்ளலாம். பலசரக்குகளைச் சேர்த்துச் சூரணஞ் செய்தால் அந்தச் சூரணத்தின் பிரமாணம் அரை வராகனெடையாம்.

## குறிப்பு.

ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்துச் சுடவைத்து அதில் பிழிந்தசாற்றை ஊற்றிமுறித்துக்கொள்வதற்குச் சுரசமெனச் சிலவிடங்களில் சிலரால் வழங்கப்படுகிறது. உஷ்ணசம்பந்த வியாதிகளில் மேற்கண்டபடி முறிக்காமலும், சீதளசம்பந்த வியாதிகளில் மேற்கண்டபடி முறித்தும் உபயோகிப்பது யூநானி சாஸ்திரக் கிரமம்.

ஆயினும், சீந்தில் கொடி முதலியவை போன்றவைகளை எந்த வகையிலும் காய்ச்சலாகாது. ஆனால்

அவற்றைக் குளிர்ந்த ஜலத்தில் ௧௦. நாழிகை ஊறவைத்து வடிகட்டிக்கொள்ளலாம்.

## 2. ஹிமம்.

ஒரு பங்கு திரவியத்தை நையச்சிதைத்து ஆறு பங்கு ஜலத்திற் போட்டு ஒருநாள் ஊறவைத்து மறுநாள் வடிகட்டிக்கொள்வதற்கு ஹிமம் என்று பெயர். இதுவும் சுரசத்திற் சேர்ந்த ஒருவகையேயாம். இதற்கு இன்னும் சீதள கஷாயம் என்றும், தண்ணீர் ஊறற்கஷாய மென்றும் பெயருண்டு.

பிரமாணம்:--மேற்கூறிய சுரசத்தினளவே இதற்குமாம்: தேன், நெய் முதலியவைகளையும், மேல் பொடிகளையும் சேர்க்கவேண்டியிருந்தால் மேற் சுரசத்தில் சொன்னபடியே சேர்த்துக் கொள்ளவேண்டியது.

## 3. கல்கம்.

ஈரமான சரக்கை அரைத்து உருண்டைசெய்து கொள்வதற்குக் கல்கம் என்று பெயர்.

உலர்ந்த சரக்காயிருந்தால் ஜலம் விட்டரைத்து உருண்டை செய்து கொள்ளவேண்டியது.

பிரமாணம்:—விராகனெடை-௧-முதல்-௨௦. வரையில் தேகபலம் வியாதிபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி கொடுக்கவேண்டியது.

தேன், நெய், எண்ணெய் இவைகளை இதனுடன் சேர்க்கவேண்டியிருந்தால் இதற்கிரண்டுபங்கும், வெல்லம், சர்க்கரை இவற்றைச் சேர்க்கவேண்டியிருந்தால் சமனளவும் சேர்க்கவேண்டியது.



திப்பிலியைக் கல்கமாகச்செய்து சாப்பிடவேண்டியிருந்தால் முதல் நாள் ௫. திப்பிலியைப்பொடித்துத் தண்ணீர் வார்த்தரைத்து உருட்டியெடுத்து வியாதிக்குத் தக்கவாறு மேற்கண்டபடி தேன், நெய் முதலியவைகளிற் கலந்து சாப்பிடவேண்டியது: மறுநாள் ஒரு திப்பிலியை அதிகப்படுத்தி முதல் நாள் சித்தம் செய்தபடி செய்து சாப்பிடவேண்டியது. இவ்விதமே பிரதிதினமும் ஒவ்வொரு திப்பிலியை அதிகப்படுத்திச்சாப்பிட்டு வரவேண்டியது. இப்படியே பதினாறு நாள் இருபது திப்பிலி ஆகும் வரையில் சாப்பிடவேண்டியது. பதினேழாம்நாள் முதல் பிரதிதினமும் ஒவ்வொரு திப்பிலியாகக் குறைத்துக் கொண்டுவந்து ஐந்து திப்பிலிக்குவந்தவுடன் நிறுத்திவிடவேண்டியது. எந்த வியாதிக்காக நாம் கல்கம் சாப்பிட்டோமோ அந்த வியாதி தீர்ந்துபோகும். அப்படித் தீராதிருந்தால் இடையில் இரண்டொருவாரம்விட்டு மறுமுறை சாப்பிடவேண்டியது. இவ்விதம் மூன்றுமுறை செய்யின் எவ்வித கடினவியாதியும் தீர்ந்துபோகும்; எனினும், இதனால் பிரதானமாக இரைப்புரோகம், சுவாசரோகம், மந்தாரகாசம் முதலிய காசரோகங்கள், க்ஷயம், சளை, இருமல் முதலிய கபசம்பந்த ரோகங்கள் ஆகியவை தீரும்.

## குறிப்பு.

மிளகு, இலவங்கம், சீரகம் முதலிய எந்தச் சரக்கையும் மேற்கண்டவிதமாக உபயோகிக்கலாம்; இவ்விதம் உபயோகிப்பதற்குக் கற்பமுறை யென்று பெயர். இந்தச் சதகத்தில் அந்தந்த வியாதிக்குப் பலசரக்குகள் சொல்லப்பட்டிருப்பதால் தேக சுபாவம்

முதலியவைகளுக்கேற்றபடி ஒன்றைத் தெரிந்தெடுத்து மேற்கண்ட கற்பமுறைப்படி உபயோகித்தால் கடினமான வியாதிகளெல்லாம் தீர்ந்து பூரண சவுக்கியமடைய ஏதுவாகும்; இதற்கு விடாமுயற்சியும் நன்னம்பிக்கையும், பூரணவிசுவாசமுமே பிரதானம்; இவ்விதமே மேலே சொல்லியிருக்கப்பட்ட ரசங்களையும், இனிச்சொல்லப்படும் கஷாயம் முதலியவைகளையும் மேற்கண்ட முறைப்படியே தொடர்ச்சியாக உபயோகித்துவந்தால் பலவகை நன்மைகளுண்டாமென்பது திண்ணம். சந்தேகமுள்ளவர்கள் இந்த விஷயத்தை அவரவர்கள் தம் தம் அநுபவசித்தமாகப் பரீக்ஷித்துக்கொள்ளலாம்.

### 4. கஷாயம்.

மரம், வேர் முதலியவற்றின் சக்கைகளையாவது பட்டைகளையாவது நையச்சிதைத்து ஜலத்தைவிட்டுச் சுண்டக்காய்ச்சி வடிகட்டிக் கொள்வதற்குக் கஷாயமென்றுபெயர்; இது சிலவகைப்படும்.

1. வேர்ப்பட்டை சக்கை முதலியவைகளை நையச்சிதைத்து அதற்கு நான்குபங்கெடை ஜலத்திற்போட்டுக் காய்ச்சி நான்கிலொருபாகமாகச் சுண்டினபின் வடிகட்டிக் கொள்வதற்குச் சிருதகஷாயமென்று பெயர்.

2. மேற்படி சரக்குகளை நையச்சிதைத்து எட்டுப்பங்கெடை ஜலத்திற்போட்டுக்காய்ச்சி எட்டிலொருபாகமாகச் சுண்டவைத்து வடிகட்டிக் கொள்வதற்கும், பதினாறுபங்கு ஜலத்தைவிட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சிக் கொள்வதற்கும் அஷ்டபாகக் கஷாயமென்று பெயர்.



3. மேற்கண்டவைகளை மேற்கண்டபடி பதினாறுபங்கு ஜலத்திற்போட்டுக் காய்ச்சிப் பதினாறிலொன்றாகச் சுண்டவைத்துக் கொள்வதற்குச் சோடசபாகக்கஷாயமென்று பெயர்.

திரவியங்களின் வயிரம், கடினம், மிருது, இலேசு, சத்துவம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி மேற்கண்டிருக்கிற வகைகளுள் ஒன்றாகத் தனித்தனி கஷாயம் செய்து கொள்ளவேண்டியது. கடினமான சரக்குகளையும் இலேசான சரக்குகளையும்சேர்த்துக் கஷாயம் செய்யவேண்டியிருந்தால் நேரம்பட வெந்து சத்திறங்குகிற கடினமான சரக்குகளை ஜலத்தில் முதலில் தனியே போட்டுக்காய்ச்சிப் பிறகு சீக்கிரத்தில் வெந்து சத்திறங்குகிற இலேசான சரக்குகளைச் சேர்த்துக் காய்ச்சவேண்டியது. நுண்மையான சரக்குகளைப்பத்து நிமிஷம் முதல் முப்பது நிமிஷம்வரையில் காய்ச்சினால் போதும்.

கஷாயங்களைக் கொஞ்சம் சூடாயிருக்கும்போதே வடிகட்டிக் கொள்ளவேண்டியது. குளிர்ந்துவிட்டால் கஷாயத்திலிருக்கும் சத்து அடியிற்படிந்துவிடும்; கஷாயத்தைச் சாப்பிடும்போது கலக்கிச் சாப்பிடவேண்டியது.

இந்தக் கஷாயத்தின் பிரமாணம்:—பெரியவர்களுக்கு ஊா-ஆழாக்கு முதல் வ-ஆழாக்குவரை. சிறுவர்களுக்குப் பலம்-உ-முதல் கஉ-வரையில்.

இந்தக் கஷாயத்தில் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடவேண்டியிருந்தால் வாதரோகத்திற்கு கஷாயத்தினெடைக்கு நான்கிலொன்றும், பித்தரோகத்திற்கு

எட்டிலொன்றும், கபரோகத்திற்குப் பதினாறிலொன்றும் சேர்த்துச் சாப்பிடவேண்டியது.

தேன்சேர்த்துச் சாப்பிடவேண்டுமானால் வாதரோகத்திற்குப் பதினாறில் ஒன்றும், பித்தரோகத்திற்கு எட்டிலொன்றும், கபரோகத்திற்கு நான்கிலொன்றும் சேர்த்துச் சாப்பிடவேண்டியது.

சீரகம், மைசாக்ஷி, க்ஷாரம், இலவணம், கிலாசத்து, பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலிமுதலியவற்றின் தனித்தனிச் சூரணங்களைச்சேர்த்துச் சாப்பிடவேண்டியிருந்தால் உ-கிரானெடை சேர்த்துச் சாப்பிடவேண்டியது.

ஏதேனுமொருசரக்கைப் பால், நெய், வெல்லம், எண்ணெய், மூத்திரம், அன்னியதிரவங்கள் ஆகிய இவைகளுள் ஒன்றுடன் சேர்த்தரைத்து அதைக் கஷாயத்தில் கலக்கிக்கொடுக்கவேண்டியிருந்தால் அப்படியரைத்தெடுத்த மருந்தில் ஐ-கிரானெடை முதல் க-கிரானெடைவரையில் கலக்கிக்கொடுக்கலாம்.

இன்னும், இந்தச் சதகத்தில் அந்தந்த வியாதிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கும் பல திரவியங்களில் தேகசுபாவத்திற்கேற்ற சிலவற்றைச் சேர்த்துக் கொடுக்கவேண்டியிருந்தால் அவ்விதம் சிலவற்றை யோகமுறையாகச் சேர்த்துச்செய்த சூரணத்தில் கிரானெடை ய-வ. முதல் உ-வரையில் மேற்படி கஷாயத்துடன் மென்பொடியாகச் சேர்த்து உபயோகிக்கலாம்.

### வெந்நீர் ஊறற் கஷாயம்.

இன்னும் இந்தக் கஷாயத்தில் வெந்நீர் ஊறற் கஷாயம் என ஒருவகையுமுண்டு.



வேர், இலை, பூமுதலிய நுண்மையான சரக்குகளையும், இலேசாகச் சத்து பிரிப்படக்கூடிய சரக்குகளையும் வெந்நீரில் ஊறவைத்து எடுத்துக்கொள்வதற்கு வெந்நீர் ஊறற்கஷாயமென்று பெயர்.

ரேவல்சீனி, கிலஆவாரை, ரோஜாப்பூ, இலவங்கம், சாமந்திப்பூ, சீரகம், ஓமம், சோம்பு முதலிய சரக்குகளில் காற்றினால் நீங்கிப்போகிற சத்திருப்பதால் அவைகளைக் கஷாயம் செய்யலாகாது.

இந்த வெந்நீர் ஊறற்கஷாயத்தில் இறங்கியிருக்கும் சத்தானது சீக்கிரத்தில் அழுகிக்கெட்டுப்போகுமாகையால் இதனைப் புதிதாகச் செய்துகொள்ளவேண்டியது. காய்ச்சுங்கஷாயங்களிலும் சிலவற்றிற்கு இந்த விதியை அனுசரிப்பது உத்தமம்.

இந்த வெந்நீர் ஊறற்கஷாயத்திற்கு க-மணி நேரம் முதல் ச-மணி நேரம்வரை சரக்குகள் வெந்நீரில் ஊறினால் போதும்.

பிரமாணம்:—பெரியவர்களுக்கு ஐ-ஆழாக்கு முதல் ய-ஆழாக்குவரை. சிறுவர்களுக்குப் பலம் - உ முதல், கற-வரை.

இதில் தேன் முதலிய சரக்குகளைச் சேர்க்கவேண்டியிருந்தால் முன் காய்ச்சுக்கஷாயத்தில் சொல்லியிருக்கிற கிரமப்படியே சேர்த்துக் கொள்ளவேண்டியது.

### 5. பாண்டம்

அந்தந்தச் சரக்கின் பிரமாணப்படி ஏதேனும் ஒரு சரக்கைச் சூரணஞ்செய்து அதில் ஒரு ஆழாக்கு

கொதிக்கிற வெந்நீரைவிட்டு இளஞ்சூடாயிருக்கும் போது வடிகட்டி யெடுத்துக்கொள்வதற்குப் பாண்ட கஷாயமென்று பெயர். இதுவும் ஒருவகை வெந்நீர் ஊறற்கஷாயமாம்.

இலுப்பைப்பூ, அதிமதுரம், சந்தனம், சிற்றீச்சம்வேர், தாமரை வளையம், தாமரைப்புஷ்பம், ஆதபட்டாணி, குமிழ்வேர்ப்பட்டை, சிறுநாகப்பூ, மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, நன்னாரி, திராக்ஷை, நெற்பொரி ஆகியவைகளைமேற்சொல்லியிருக்கிறபடி பாண்ட கஷாயமாகச்செய்து கொள்வது உத்தமம்.

முன் கஷாயத்திற் சொல்லியிருக்கிற மேன்பொடி முதலியவைகளை இப்பாண்ட கஷாயத்திலும் சேர்த்துக் கொடுக்கலாம்.

பிரமாணம்:—ஆழாக்கு-க.

இன்னும், அநேக சரக்குகளை நீரிலிட்டு க-முதல் எ-நாள்வரை காய்ச்சி வடிகட்டி யெடுப்பதற்கும் பாண்டகஷாயமென்று பெயர்; இதற்கு அடைகஷாயமென்று மறுபெயருமுண்டு. அநேக சரக்குகளைத் தண்ணீரிலிட்டு ஒன்றுமுதல் மூன்றுநாள்வரை காய்ச்சிக் கஷாயத்தைத் தனியே யிறுத்துவைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு அரை அல்லது கால்ஆழாக்குவிதம் அப்போதைக்கப்போது இளஞ்சூடுகாட்டிக் கொடுப்பது சிலருடைய வழக்கம். அநேகம் சரக்குகளைத் தண்ணீரிலிட்டு ஏழுநாள்வரையில் நெருப்பின் மீது வைத்துக்கொண்டே அதிலிருந்து அரைக்கால்



முதல் கால்ஆழாக்குவிதம் இறுத்து உபயோகிப்பது சிலருடைய வழக்கம்.

மேன்பொடி முதலியவைகளை முன் கஷாயத்திற் சொல்லியிருக்கிறபடியே இதற்கும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

### 6. சூரணம்.

திரவியங்களை வெயிலில் காயவைத்து அல்லது வெதுப்பி யிடித்துத் தூள்செய்து வஸ்திரகாயஞ் செய்து கொள்வதற்குச் சூரணமென்று பெயர்.

மேற்கண்டபடி சூரணஞ் செய்வதில் கடினமான வஸ்துக்களை வெண்கலம் அல்லது இரும்புரலிலும், மிருதுவான பதார்த்தங்களைக் கல்லுரல் அல்லது கல்வத்திலுமிட்டுச் சூரணஞ் செய்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவேண்டும்.

மாசக்காய், கடுக்காய் முதலிய துவர்ப்புப் பதார்த்தங்களை இரும்புரலிலிட்டுத் தூள்செய்யலாகாது; அவ்விதம் செய்யின் சூரணம் கறுத்துக் கெட்டுப்போம்.

கடுக்காயை இடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்யலாகாது; ஆனால் அதைத் தெள்ளி வாதுமை யெண்ணெய் அல்லது பசுவினெய்யைத் தெளித்து நெய்ப்புண்டாக்கிக் கொள்ளவேண்டும்.

[illegible] விதைகளை அரைவே இடித்துச் சூரணஞ் செய்யலாகாது; ஆனால், இடிக்காமல் முழுசாகக் கொள்வது யூநானி வைத்தியர்களுடைய வழக்கம்; இடித்தால் இதில் விஷத்தன்ம முண்டாகிறது.

கற்பூரத்தைத் தூள்செய்ய வேண்டியிருந்தால் அதுடன் கொஞ்சம் சாராயத்தைச் சேர்த்தரைத்துத் தூளாகிவிடும்.

சில சரக்குகள் ஒட்டிவிட்டு அடிப்பேற்றி நன்றாக வெதுப்பினால் மாத்திரந்தான் நன்றாகத் தூளாகும்.

பல சூரணங்களை ஒன்றாகச் சேர்க்கவேண்டியிருந்தால் சரக்குகளைத் தனித்தனியிடித்துப் போக முறையிற் சொல்லியிருக்கிற நிறைப்படி நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும்; அப்படிச் செய்யாவிட்டால் சரக்குகள் சேதமாகி நிறை குறையும்.

பிரமாணம்:—விராகனெடை-க-முதல்-உ௦-வரை

இந்தச் சூரணங்களில் வெல்லம் சேர்க்கவேண்டியிருந்தால் சமனெடை சேர்க்கவேண்டியது; சர்க்கரை சேர்க்க வேண்டியிருந்தால் இரண்டுபங்கு சேர்க்கவேண்டியது. நெய், தேன் ஆகியவைகளைச் சேர்க்கவேண்டியிருந்தால் இரண்டுபங்கு சேர்க்கவேண்டியது; மற்ற திரவங்களானால் நான்குபங்கு சேர்க்கவேண்டியது. பெருங்காயம் சேர்க்கவேண்டியிருந்தால் அதனை சுட்டெரித்து வாசனையில்லாமல் சாம்பலாக்கிக் கொள்ளவேண்டியது. அப்படிச் செய்யாவிட்டால் சிறுக்கு வாந்தி, அருவருப்பு, வெருட்டல் முதலிய துர்க்குணங்களுண்டாகும்.

## 7. லேகியம்.

வெல்லம், சர்க்கரை, தேன் ஆகியவைகளில் ஒன்றைப் பாகுசெய்து பாகுபதத்தில் சூரணத்தைச் சேர்த்து மத்தாற் கடைந்து அல்லது கிண்டிக் கிளறி இறக்கி ஆறவைத் தெடுத்துக் கொள்வதற்கு லேகியமென்று பெயர்.

சூரணம் ஒருபங்கு; வெல்லமானால் சூரணத்திற்குச் சமனெடை, சர்க்கரையானால் சூரணத்திற்கு இரண்டு பங்கெடை, தேனானால் சூரணத்திற்கு மூன்று பங்கெடை.

இவற்றுள் ஒன்றை மேற்கண்டபடி பாகுசெய்து பாகுபதத்தில் சூரணத்தைக் கொட்டி மத்தாற்கடை-



ந்து அல்லது கிளறி இறக்கி ஆறவைத் தெடுத்துக் கொள்ளவேண்டும்.

இதில் நெய்யைச் சேர்க்க வேண்டியிருந்தால் சூரணத்தின் மொத்த எடையில் நான்கிலொருபங்கு சேர்த்துக் கொள்ளவேண்டும்; தேனைச்சேர்த்துக் கொள்ளவேண்டிய திருந்தால் சூரணத்தி னெடையில் ஐந்திலொரு பங்கு தேனைச்சேர்த்துக் கொள்ளவும்.

## 8. வடகம்.

வடகம் செய்ய வேண்டியிருந்தால் வெள்ளைச் சர்க்கரை, சுத்திசெய்த குக்கில் ஆகியவைகளில் ஒன்றைப்பாகுசெய்து வேண்டிய சரக்குகளின் சூரணங்களில் விட்டு உருண்டையாகச் செய்துகொள்வதற்கு வடகமென்று பெயர்.

இவ்வாறு வடகம் செய்யும் போது சீனிசர்க்கரை, குக்கில் ஆகியவைகளைப் பாகுசெய்யாமலும் சேர்த்துக் கொள்ளலாம்.

தண்ணீர், பால், தேன் முதலியவைகளில் ஒன்றைச்சேர்த்து வடகம் செய்யவேண்டியிருந்தால் அதனைத்தனியே சூரணத்துடன் சேர்த்துப் பிசைந்து வடகஞ் செய்து கொள்ளலாம்.

சர்க்கரையைச் சேர்த்து வடகம் செய்யவேண்டுமானால் சூரணத்திற்கு நான்குபங்கு சர்க்கரையையும், வெல்லத்தைச் சேர்த்துச் செய்யவேண்டுமானால் சூரணத்திற் கிரண்டுபங்கு வெல்லத்தையும், குக்கில், தேன் இவற்றைச் சேர்த்துச் செய்யவேண்டுமானால் சூரணத்திற்குச் சமன் தனித்தனி குக்கில் தேனையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

## 9. கிருதம்.

நெய்யுடன் மூலிகைச்சாற்றை அல்லது கஷாயமும் சேர்த்துக்காய்ச்சி அந்தச்சாறு அல்லது கஷா[illegible] இதன்

யம் சுண்டினபின் நெய்யைவடித்துக் கொள்வதே கிருதமாம்.

நெய் ஒருபங்கு, மூலிகைச்சாறு அல்லது கஷாயம் இரண்டு பங்கு இந்த நெய்யுடன் மேற்படி சாற்றை அல்லது கஷாயத்தைச் சேர்த்துக்காய்ச்சிக் கொள்ளவும்.

கஸ்தூரி, கோரோசனை, முத்து, முத்துப்பற்பம், பவளம், பவளபற்பம் முதலியவைகளைச் சேர்க்க வேண்டியதிருந்தால் ஒருவேளை கிருதத்திற்கு இரண்டரை கிரெயினெடை சேர்க்கலாம். அதிகசக்தியுள்ளவர்கள் அதிகமாகவும் சேர்த்துக் கொள்ளலாம்.

### 10. ஸ்நான தைலம்.

எள்ளெண்ணெயையும், மூலிகைகளின் சாற்றை அல்லது திரவியங்களின் கஷாயத்தைச் சேர்த்துக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி இளஞ்சூட்டுடன் வடிகட்டி யெடுத்துக் கொள்வதே தைலமாம்.

எள்ளெண்ணெய் ஒருபங்கு, மூலிகைச்சாறு அல்லது கஷாயம் இரண்டுபங்கு. டி எண்ணெயுடன் டி மூலிகைச்சாறு அல்லது கஷாயத்தைச் சேர்த்துக்காய்ச்சிக் கடுகுதிரள்பதத்தில் இறக்கி இளஞ்சூட்டுடன் வடிகட்டிப் பீங்கான் ஜாடியிலடைத்து வைத்துக் கொள்ளவும். இதனைத் தானியபுடம் வைத்தெடுத்துக் கொள்வது உத்தமம்.

### 11. மேற்பூச்சுத் தைலம்.

மேற்கண்ட விதமாக வேப் பெண்ணெய், புன்கெண்ணெய் முதலிய எண்ணெய்களுடன் அவசியமான சரக்குகளைச் சேர்த்துக்காய்ச்சி நோயுள்ள இடத்திற் பூசுந்தைலம் மேற்பூச்சுத் தைலமாம்.

### 12. பற்று.

உலர்ந்த சரக்குகளை அல்லது ஈரச்சரக்குகளை ஜலத்தில் அல்லது வேறு இரசத்தில் அல்லது



பே அரைத்து அவசியமான விடத்தில் அல்லது நோயுள்ள விடத்திற் பூசுவதற்கும் பற்று என்றுபெயர்.

### 13. தப்பளம்.

தலையுச்சியில் மூலிகைகளை யரைத்துத் தடவி அல்லது மூலிகை முதலியவற்றின் இரசத்தைத் தடவிக்கையால் மெதுவாகத் தட்டுவதற்குத் தப்பளமென்று பெயர். நாசியிலிருந்து இரத்தம் வடிதல் முதலியரோகங்களில் தப்பளமிடுவது வழமை.

### 14. ஆக்கிராணம்.

இது, நாசியில் உபயோகிக்கும் தூள்மருந்து. தேவையான சரக்கைத் தூள்செய்து அதனை, ஒருநாசியின் துவாரத்தைத் அழுத்திக்கொண்டு மறுநாசித்துவாரத்தில் இழுக்கவேண்டும். இவ்விதமே மற்றொருநாசியை மூடிக்கொண்டு முன்மூடியிருந்த நாசியில் இழுக்கவேண்டும். இவ்விதமின்றி டி தூளைச்சிறுகுழாய்களில் வைத்தும் நாசியில் சுவாசத்தால் இழுத்துச் செலுத்தலாம்.

### 15. நசியம்.

திரவரூபமான அவுடதங்களை நாசியில் துளித்துளியாக விடுவதற்கு நசிய மென்றுபெயர்; நாசியில் விடுவதற்கு நசியமென்றும், காதில் விடுவதற்குக் கன்னத்துளி யென்றும் பெயர்.

### 16. தூபம்.

வேண்டியசரக்குகளைச் சற்றுப்பருமனாகப் பொடித்துக் கரிநெருப்பில் போட்டுப் புகைக்கப் புகையெழும்பும். இதனை நோயாளியின் சமீபத்தில் அல்லது தூரத்தில் புகையானது அந்நோயாளியின் சுவாசத்துக்கு நேரே செல்லும்படி வைக்கவேண்டியது. இன்னும் தூபக்கலசத்திற்போட்டுப்புகைப்பது உத்தமம். இதன் விவரத்தை நமது யூநானி வைத்திய தாதுவிரு

த்தி போதினி இரண்டாம் பாகத்திற் பார்வையிடவும்.

### 17. புகைபிடித்தல்.

வேண்டிய சரக்குகளைத் தூள் செய்து சுக்கான் அல்லது உக்கா முதலியவைகளிற் போட்டு அதன்மீது நெருப்பை வைத்துப் புகையிழுப்பதாம். இவ்விதம் இழுத்த புகையிற் கொஞ்சத்தை விழுங்கி மூக்கினால் விடவேண்டியது.

### 18. புகைகொடுத்தல்.

அவசியமான சரக்குகளைப்பொடித்து நெருப்பிலிட்டுப் புகையும். இதனை ஆசனத்தில் அல்லது புண்களிற் படும்படி பக்குவம் செய்யவேண்டியது.

### 19. புகைத்திரி.

வேண்டியசரக்குகளைத் தூள்செய்து துணியில் அல்லது கடுதாசியில் பரப்பிச் சுற்றித்திரித்து நூலால் கட்டிக்கொளுத்தி நாசியில் அல்லது புண்களில் பிடிப்பதற்குப் புகைத்திரி யென்று பெயர்.

### 20. திரி.

மூலிகையை யிடித்துப் பிழிந்த சாற்றில் மெல்லிய வஸ்திரத்தை நனைத்து உலர்த்தி மெல்லிய திரியாகச்செய்து இரணங்களின் புரைகளில் வைப்பதாம். இது பலவகைப்படும்.

### 21. வஸ்தி.

சரக்குகளைக் கஷாயமாக அல்லது ஊறற் கஷாயமாகச்செய்து பிச்சாங்குழல்மூலமாக ஆசனத்திற்குள் அல்லது கெற்பப்பைக்குள் செலுத்துதலாம். ஆனால் இப்போது எனிமா என்னும் எந்திர முண்டாயிருப்பதால் அதன் மூலமாக மேற்கண்டவைகளை உபயோகிப்பது சிரேஷ்டமும் உத்தமமுமாம்.



### 22. ஒற்றிடம்.

உலர்ந்த அல்லது பச்சையான பதார்த்தங்களைத் துணியில் முடிப்பாக வைத்துக் கட்டி நெருப்பு முதலியவைகளிற் காய்ச்சி ஒற்றிடமிடுவது ஒற்றிடமாம்.

### விண்ணப்பம்.

இன்னின்ன அவுடத முறைகள் இன்னும் அநேகமுள. அவையெல்லா வற்றையும் இங்கெழுதுவது அசாத்தியமான காரியம். ஆகையால் இங்குச்சில முக்கியமானவைகளை மாத்திரம் எழுதியிருக்கிறோம்.

இன்னும் இந்தச் சதகத்திற் சொல்லியிருக்கப்பட்டவைகளெல்லாம் அதிக முக்கியமானவைகள்; இவற்றை அதிகக் கருத்துடன் கவனித்து முறைப்படி மேற்சொல்லிய விதமாகத் தனிப்பிரயோகமாகச்செய்து கொடுப்பதால் அதிக பலனுண்டாகுமென்பது திண்ணம். ஆயினும் சில சமயங்களில் பலவகைகளைச்சேர்த்து உபயோகிக்கவேண்டுமானால் தேகசுபாவம், வியாதியின் சுபாவம் முதலியவைகளை நிதானித்துச் சரக்குகளின் இடையை ஏற்படுத்தவேண்டியது அவசியம். இதற்காகப் பலர் பலவகைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவை ஒன்றோடொன்று விகற்பப் பட்டவைகளாகவும், அதிகச்சுற்றானவைகளாகவும், அதிக விரிவானவைகளாகவு மிருப்பதால் எல்லோரும் இலகுவாகத் தெரிந்துகொள்ள ஏதுவில்லை; ஆகையால் பூதானுக்கிரமப்படி ஏற்படுத்துவதாயிருந்தால் அதிக இலகு; அந்த முறைப்படியே தெளிவாகவும், சுருக்கமாகவும் கடவுள்கிருபையால் மீனாணல் அத்வியாசனென்னும் ஒருகிரந்தம் வெளிப்படுத்தப்படும். அதனை வாசித்தால் இலேகியமுதலிய முறைகளில் எந்தெந்த தேகத்திற்கு எந்தெந்தச்சரக்கை எவ்வளவு எவ்வளவு சேர்க்கவேண்டும் என்னும் விவரங்கள் தெரியவரும்.

# சமஸ்கிருத வியாதிப் பெயர்களின் விளக்க அட்டவணை.

இக்கிரந்தத்தில் சில வியாதிகளுக்குச் சம ருத நாமங்களும் வைத்திய பரிபாஷை நாமங்க கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவைகளெ ல்லாம் சாதாரணமானவர்கள் தெரிந்துகொள்ளு முடியாது. ஆகையால், இதனை வாசிக்கும் ஒவ்வொ ருவரும் இலகுவாகத் தெரிந்துகொள்ளும்படி அ வித நாமங்களை இதனடியில் அகராதி ரூபமாக எழு அவற்றின் அருத்தங்களையும் எழுதியிருக்கிறோம்.

அ.

அக்கன்னிபாதிரணம்:--பயற்றைக் கயிற்றிற்கோர்த்தது போல நீளமாக மினுமினுப்புடன் கோவில் மல் ஆட்டின் கழுத்தில் தொங்கும் அதிர்போ படரும் கொப்பளம்.

அஸ்மரி:—கல்லடைப்பு.

அதரரோகம்:—உதட்டுரோகம்.

அதிக்ருசஹரங்கள்:--உடல் இளைத்தலைப் போக்கு திரவியங்கள். (அதாவது தேகத்தைப் பெரு கச் செய்பவைகள்.)

அதிஸ்தூலஹரங்கள்:—பெருத்த தேகத்தை இளை கச்செய்யும் பதார்த்தங்கள்.

அபஸ்மாரம்:—மூர்ச்சைரோகம்.

அளர்கவிஷம்:--வெறிகொண்ட அல்லது கோபங் கொண்ட எலிகள் விஷம்.

அர்புதகணம்:--பலவித கிரந்திகளின் இலக்ஷணங் களைப்பெற்று விசேஷமாகப் பருத்ததும், உயர்ந் துமாயிருக்கும் கிரந்தி.

ஆ.

ஆவரணபைத்தியம்:--அறிவுமயக்க பயித்தியம்.



இ.

இரத்தகுன்மம்:--ரத்தக்கட்டி.

இரவுத்திரவிரணம்:--குதிகால் வெடிப்புபட்டதுபோல் குதறிப்போகுதல்

உ.

உதரவர்த்தம்:--மகோதரம்.

உபசிம்மகவிரணம்:--உண்ணாக்கு விரணம்.

உருத்திரரோகம்:—மாரடைப்பு.

உன்மாதம்:--பைத்தியம்.

எ.

எலும்புருக்கி:--எலும்புகளின் மத்தியிலிருக்கிற மச்சை உருகிச்சூலையுடன் அல்குல் மார்க்கமாய் வெள்ளைநிறமாக வெளிப்படும் வியாதி.

க.

கண்டாலச்சியவிரணம்:--கண்டமாலை.

கதாக்கிரந்தி:—குதிகாலிலும், விரலிலும் விரணமாகுதல்.

கரதமவிரணம்:--சேற்றுப்புண்.

கன்னரோகம்:—காதுநோய்.

கா.

காமியவிரணம்:—ஆண் மர்மஸ்தான ரணம்.

கி.

கீட்டகவிஷம்:—பூச்சி புழுக்களின் விஷம்.

கு.

குணக்கநோய்:--நகங்கருத்து இரணமாகுதல்.

கெ.

கெர்ப்பவிப்புருதி (கெர்ப்பவித்திரிதி):—கருப்பையில் குத்தமேலோடுண்டாகும் கட்டி.

கெர்ப்பிணி சுகவரங்கள்:—கெர்ப்பிணிக்குச் சுகங்கொடுக்கும் திரவியங்கள்.

கோ.

கோடவிரணம்:--எரிவத்தத்தோடு கூடிய பலவிதப் புண்கள்.

ச.

சக்கராற்புத விரணம்:—மூளையில் ரணம்.

சஸ்திரவிரணம்:—காயங்களாலுண்டான விரணம்.

சருவாசியரோகம்:—முகரோகம்.

சன்னாசரோகம் (சன்னியாசிரோகம்):—இருதயத்திற்குத் திடீரென்று காணும் ஒருவித மூர்ச்சை ரோகம்.

சி.

சிம்பரோகம்:—நாக்குரோகம்.

சிலிபத விரணம்:—முழங்கால் வாதம், நரித்தலை வாதம்.

சீ.

சீதபித்தம்:—உடம்பின் மேல் வளையாகாரமாயும், இரத்த நிறத்தோடு கூடிய புடைகள் விஸ்தாரமாயெழும்புதல்.

சு.

சுகப்பிரசூதி:—சுகப்பிரசவம்.

சுரசாதங் குரற்கம்மல்:—ஈனத்தொனி

சோ.

சோகை (சோபை):—நரம்புகளின் வீக்கம் ஏறுவதால் வாந்தியும், தேககனதியும் உண்டாகும். இது வெசோகையாம். இதற்கு ஊதல், அதைப்பு, சரப்பு எனவும் பெயர்களுண்டு.

சோமரோகம்:—அதிமூத்திர ரோகம்.

த.

தந்தரோகம்:—பல்நோய்.

தனவிப்புருதி:—தனத்தில் குத்தலுடனுண்டாகும் கட்டி.

தா.

தாபரவிஷம்:—செடிமரம் முதலிய வற்றாலுண்டாம் விஷம்.



ந.

நகதந்தவிஷம்:—நகத்தினாலும், தந்தத்தினாலும் உண்டாகும் விஷம்.

நஷ்டவீரியம்:—தாது நஷ்டம்.

நா.

நாசிரோகம்:—மூக்குநோய்

நாடிவிரணம்:—நரம்புகளில் ரணம்

ப.

பக்கநோய்:—எலும்புகள் ஒடிந்து போகுதல்.

பதுமகண்டக விரணம்:—தாமரைத் தண்டின் முட்களைப்போலத் தேகத்திலுண்டாம் சொறி; இதற்குத் தவளைச்சொறி, பெருஞ் சொறி யென்றும் பெயர்.

பா.

பாஷாண விரணம்:—கல்லைப்போலிருக்கும் புண்.

பாலகிரகம்:—பாலர்களுக்குண்டாகும் கிரகதோஷங்கள்.

பாலநோய்:—குழந்தை வியாதிகள்.

பூ.

பூதகிரகம்:—பேய்பிசாசு கிரகங்களின் தோஷங்கள்.

பெ.

பெரும்பாடு:—ருதுக இரத்தம் அதிகமாய் வெளிப்படுதல்.

பொ.

பொட்டக விரணம்:—பலகண்களுள்ள பலவிதக் கட்டிகள்.

ம.

மதமூர்ச்சைரோகம்:—மூர்ச்சைரோகம்.

மு.

முகதூஷிக விரணம்:—வாலிபர் முகத்தில் வெங்காயம் போலும் இலவமுள்ளைப்போலும் அடிபருத்து முளையுள்ள கொப்பளங்களை யுண்டாக்கி உபத்திரவஞ் செய்யுங் ரோகம்; இதற்கு முகப்பரு வென்றும் பெயர்.

மூ.

மூஷிகவிஷம்:—எலி விஷம்.

மூத்திரக்கிரிச்சரம்:—நீர்ச்சுருக்கு ரோகம்.

ரு.

ருத்தகுதம்:—அபானத்தின் ரணம்; இது மலத்தை அடக்கி விடுதலால் அபானத்தில் வெடிப்புக்களுண்டாகும்.

வ.

வந்தியரோகம்:—மலட்டு ரோகம்.

வல்மீகம்:—கைகால் முதலியவைகளில் புற்றின் முகத்தைப் போலுண்டாகும் கிரந்தி.

வா.

வாதசூலை:—இதில்பிரதானமாய்ச் சரீரத்தின் கீழ்ப்பாகங்களில் குத்தல், குடைச்சல் முதலியவை உண்டாகும்.

வி.

விசர்ப்பி:—புருவம், உச்சி, கண்டம், மார்பு, மார்புக்குக்கீழ், உந்தி, உதடு, பீசம், முழங்கால், கணுக்கால், இடுப்பு, காலின் பெருவிரல், சுட்டுவிரல், தோள் ஆகிய பதினான்கு ஸ்தானங்களில் பலநிறக்கொப்புளங்களாக உட்புறத்திலும், வெளிப்புறத்திலும் உண்டாவதும் [illegible] லக்ஷணங்களும், சோபை லக்ஷணங்களுமிருக்கும்.

விசூசி (விஷூசி):—வாந்திபேதி.

விதர்கம்:—அதிதாபரோகம்.

விப்புருதி (வித்ரதி):—குத்தலுடனுண்டாம் கட்[illegible].